பக்கங்கள்: 12+IV = பதினாறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 7.00

சுபர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 22 ஞாயிற்றுக்கிழமை (08-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:12

சமஷ்டி தீர்வுக்கான இணக்கம் குறித்து

இந்திய நிலைப்பாட்டை விளக்க வெளியுறவுச் செயலர் வருகிறார்

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தமிழ் எம்.பிக்களை சந்திப்பார்

கொழும்பு,டிசெம்பர்8

இநதிய வெளிவிவகார அமைச்சின் செயலர் கன்வால் சிபல் முக்கிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வருகிறார்.

சமஷ்டி முறைக் கட்டமைப்பிற்குள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான திட்டம் குறித்துப் பரீசீலிக்க ஒஸ்லோ பேச்சுக்களில் காணப்பட்டிருக்கும் இணக்கம் தொடர்பான புதுடில்லியின் நிலைப்பாட்டை அவர் கொழும்பில் வெளியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வெளியுறவுச் செயலர் நேற்றிரவு கொழும்பு வந்துசேர இருந்தார். இன்று அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் தனித்தனியாகப் பேச்சு நடத்துவார் என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்சித் தலைவர்கள் சிலரையும் கூட அவர் சந்திப்பார் என்று தெரிகின்றது.

கூட்டாட்சி முறையிலான தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கான அடிப்படைகள் குறித்து விவாதிக்க அரசுப் பிரதிநிதிகள் குழுவும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் ஒஸ்லோவில் இணக்கம் கண்டிருப்

(12ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையின் அபிவிருத்திக்கு ரூ. 2,040 கோடி உதவி

கொழும்பு,டிசெ.8

இலங்கைக்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள 2 ஆயிரத்து 40 கோடி ரூபாவை வழங்க சர்வதேச சமூகம் முன்வந்துள்ளது.

மின்சக்தி மற்றும் வலு அமைச்சர் கரு ஜெயசூரிய இத்தகவலை வெளியிட்டார்.

இந்த நிதி அபிவிருத்தி, புனர் வாழ்வு, புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்ப வழங்கப்படுகின்றது என்றும் அவர் சொன்னார். (ம-3-12)

யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறை அமைப்பதில் பெரும் மோசடி

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரு கோடி ரூபா செலவில் புதிய பிரேத அறைக்கான கட்டடம் நிறுவும் விடயத்தில் பெரும் மோசடி இடம்பெற்றமை தெரியவந்துள்ளது. ஒதுக்கப்பட்ட நிதியில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகை எடுக்கப்பட்டு விட்டபோதும் கட்டடத்துக்கான அத்திபாரம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சுச் செயலாளர்கள் நேற்று இந்தக் கட்டடத்துக்கான வேலைகளை நேரில் சென்று பார்வையிட்டனர். கட்டடத்தை அமைப்பதற்காக ஒப்பந்தக்காரரால் பெறப்பட்ட நிதியின் அளவுக்கும் தற்போது வரை செய்து முடிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கும் இடையில் காணப்படும் பாரிய வேறுபாடுகள் குறித்து அவர்கள் தமது பேதிர்ச்சியை அங்கு வெளிப்படுத்தினர்.

யாழ். குடாநாட்டுக்கான சகல

(12ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் சமாதானக் குழு இன்று சுவிஸ் செல்கின்றது

ஒஸ்லோ,டிசெ.8

சுவிஸ் நாட்டின் அழைப்பை ஏற்று விடுதலைப் புலிகளின் சமாதானக் குழு இன்று அங்கு செல்கின்றது.

ஒஸ்லோவில் நடந்த 3ஆம் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்றிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கருணா ஆகியோர் இன்று சுவிஸ் செல்கின்றனர். நான்கு தினங்கள் அங்கு தங்கியிருக்கும் அவர்கள் அந்த நாட்டில் நடைமுறையில் உள்ள சமஷ்டி நிர்வாகம் தொடர்பாக விரிவாக ஆராய்வார்கள்.

சுவிஸ் நாட்டில விருந்தினர்களாகத் தங்கியிருக்கும் சமயம் அவர்கள் பல தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவர். (ம-3-164)

ஈ.பி.டி.பியிடம் உள்ள 10 பிரதேச சபைகள் உட்பட

உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய தேர்தல் நடத்துங்கள்

தமிழ்க் காங்கிரஸ் பிரதமரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.8

குடாநாட்டில் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் உள்ள பத்துப் பிரதேசசபைகள் உட்பட சகல உள்ளூராட்சி சபைகளையும் கலைத்து புதிய தேர்தல நடத்தவேண்டும் என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பிரதமரைக் கோரியுள்ளது.

அக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற சமயம் இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவில் பெரும் எண்ணிக்கையான ஆயுதப் படைகளின் உதவியுடன் தரையிறங்கித் தங்கியுள்ள ஈ.பி.டி.பியினர் அப்பகுதி மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் அங்கு தங்கியிருப்பதற்குக் காரணம் நெடுந்தீவுப் பிரதேச சபையின் நிர்வாகம் தமது கட்டுப்பாட்டில் உள்ளது என்று கூறுகிறார்கள்.

குடாநாட்டில் 12 பிரதேச சபைகளில் 10 பிரதேச சபைகள் அவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அவற்றின் தொலைபேசி, வாகன, ஆளணி, சம்பள வசதிகள் அவர்களுக்கு வருவதுடன் தமது பதவிகளையும் அவர்கள் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர்.

குடாநாட்டில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் ஒரு வருடத்துக்கு முன்பே காலாவதியாகி விட்டதால் இச்சபைகளுக்கு இனி மேலும் காலநீடிப்பு வழங்கக் கூடாது.

(12ஆம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர்; கன்டித்து வவுனியாவில் பேரணி

செட்டிகுளத்தில் நாளை நடக்கும்

வவுனியா,டிசெ.8

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் படையினரின் [illegible] தரை இறங்கி மகளுக்கு எதிராக மேற்கொண்டுள்ள அடாவடித்தனத்தைக் கண்டித்து நாளை வவுனியா செட்டிகுளத்தில் மௌன பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

முகத்தான்குளம் பிள்ளையார் கோவில் முன்றலில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி செட்டிகுளம் பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பதுடன் முடிவடையும்.

வெகுஜன ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேரணியின் முடிவில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு, அரச அதிபர், ஜனாதிபதி, டக்ளஸ் தேவானந்தா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு மகஜர்கள் வழங்கப்படவுள்ளன.

(ம-3-164)

ஐரோப்பிய நாடுகளில் மாவீர்தின நிகழ்வுகள்

புலிகளின் பிரமுகர்கள் சிறப்புரையாற்றினர்

ஒஸ்லோ,டிசெ.8

ஐரோப்பாவின் பல நாடுகளில் மாவீர்தின நிகழ்வுகள் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

நோர்வேயில் பேகல் நகரில் இலங்கை நேரப்படி நேற்றிரவு 10.30 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான ஈழத்தமிழர்கள் கலந்துகொண்டனர்.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா ஆகியோர் அங்கு சிறப்புரையாற்றினர்.

நெதர்லாந்திலும் மாவீர்தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை சிறப்புரையாற்றினார்.

டென்மார்க்கிலும் மாவீர்தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றுள்ளன. அங்கு நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன் சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வுகளிலும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இன்று மாவீர்தின நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (ம-3-12)

கலைக்கும் அதிகாரம் கையில் கிடைத்தபோதும்

அரசுக்கு எதிராக ஜனாதிபதி இப்போது எதுவும் செய்யமாட்டார்

அவரது கட்சியின் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.8

நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வந்துள்ள போதும் அரசுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் அவர் உடன் எடுக்கமாட்டார் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தக்கூடிய அதிகாரம் எமது முன்னணியின் தலைவியான

(12ஆம் பக்கம் பார்க்க)

கட்சிக்குள் பிளவு ஏற்பட புலிகள்தான் காரணமாம்

ஹக்கீம் கூறுகின்றார்

திருகோணமலை,டிசெ.6

விடுதலைப் புலிகளுக்கும் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக விடுதலைப் புலிகள் நடைமுறைப்படுத்தாததே கட்சிக்குள் பிளவு ஏற்படக் காரணம்.

- இப்படிக் கூறுகின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

மூதூர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தேவையேற்படின் அரசுகளை ஆட்சியில் அமர்த்தவும் இல்லாது

(12ஆம் பக்கம் பார்க்க)

புதிய படைமுகாம்களை நிறுவுவது மக்களுக்கு எரிச்சலூட்டும் செயல்

பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் கவலை

யாழ்ப்பாணம்,டிசெ.8

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒன்பது மாத கால இடைவெளிக்குப் பின்னரும் யாழ். மாவட்டத்தில் சில பகுதிகளில் - மக்களின் வதிவிடங்களில் இராணுவத்தைச் சேர்ந்த சில பிரிவினர் புதிய படைமுகாம்களை அமைப்பது பொது மக்களுக்கு வேண்டுமென்றே எரிச் சலூட்டும் செயலாக அமைகின்றது.

யாழ்மாவட்ட மனிதநேய அமைப் புக்களின் ஒன்றியத்தலைவர் எஸ்.பரம நாதன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு அனுப்பிய ஒரு நீண்ட கடிதத்தில் இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

எல்லா இன மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான கௌரவம், விழுமியம் என்பவற்றுடன் கூடிய சமாதானத்தை அடிப்படையாக வைத்து அந்த சமாதானத்தை விரும்பியே இலங்கை மக்கள் கடந்த நாடாளு மன்ற பொதுத் தேர்தலில் தமது அதி கப்படியான பெரும்பான்மையை அர சுக்கு வழங்கினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இலங்கை அரசாங்கத் துக்கும் இடையில் 22.02.2002 அன்று கைச்சாத்தான சரித்திர முக்கியத்து வம் வாய்ந்த நிரந்தர யுத்தநிறுத்த உடன்படிக்கையானது நன்கு வரவேற் கத்தக்கதான ஒரு சமிக்ஞை ஆகும்.

இந்த யுத்தநிறுத்த உடன்படிக் கையின் சிறப்பம்சங்களாவன:-

1. இயல்பு நிலைமையை வழங் குதல் -

2. சுதந்திரமான நடமாட்டம் -

3. துப்பாக்கிகள் மௌனித்தல் -

4. ஆயுதப்படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலும், இன்னும் ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையிலும் தன்னம்பிக்கையையும் விசுவாசத் தையும் கட்டியெழுப்பவதற்கு உற்சா கம் ஊட்டுதல் -

5. இனங்களுக்கிடையில் நல் லெண்ணத்தைக் கட்டியெழுப்புதல் -

6. சமாதானப் பேச்சின்போது ஏற் படும் தொய்வுகளை சாதகமான ரீதி யில் நிவர்த்தி செய்வதற்கு மூன் றாம் தரப்பினரின் ஒத்துழைப்பு -

7. வர்த்தக ஒருமைப்பாட்டில் வடக்கு - கிழக்கும் நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் இணைந்ததான ஒரு நிலைப்பாடு -

8. முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்தல் -

9. வடக்கு - கிழக்கில் உணவுப் பற்றாக்குறையை இல்லாமல் செய் தல் -

10. பொருளாதார அபிவிருத்தி - மேலும், 'சமாதான நடவடிக்கையை நோக்கி முன்னேறுவதும் மற்றும் மக் களின் பேரவாவான பிராந்திய மட்ட திலான அதிகாரப் பரவலாக்கலுக்கான அடித்தளம் அமைத்தல் போன்றவற்றில் மிகுந்த கவனம் செலுத்துதல் என்பன உடன்படிக்கையின் சிறப்புக்களாகும்.

எனினும், யுத்தநிறுத்த உடன் படிக்கை ஒக்சாத்தாகி ஒன்பது மாத கால இடைவெளிக்குப் பின்னரும் யாழ்.மாவட்டத்தில் நுணாவில், எழுது மட்டுவாழ், மிருசுவில், கைதடி போன்ற மக்கள் வதிவிடங்களில் பாதுகாப்புப் படையினைச் சேர்ந்த சில பிரிவினர் புதிய படைமுகாம் களை அமைத்தலானது பொதுமக்க ளுக்கு வேண்டுமென்றே எரிச்சலூட் டும் செயலாக அமைகின்றது. அத னால், கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரதிபலன் பற்றி ஆழமாக சிந்திக்கவேண்டியுள்ளது. மேலும், தீவுப் பகுதிகள் மக்கள் வாழும் இடங்கள். ஆனால் அந்த இடங்களை அதியுயர் பாதுகாப்பு வல யம் என்று வியாக்கியானம் செய்து, அங்கு மக்களின் சுதந்திரமான நட மாட்டத்தை கட்டுப்படுத்தியுள்ளனர். இது மக்களின் நாளாந்த வாழ்க்கைக் குத் தடையாக அமைகின்றது.

அடுத்து இடம்பெயர்ந்த மக்க ளையும் அகதிகளையும் தத்தமது இடங்களில் மீளக்குடியமரச் செய்து அவர்களை தமது சொந்த தொழில் முயற்சிகளில் ஈடுபடச் செய்து தன் னம்பிக்கையுடன் வாழ்வதற்கு வழிய மைத்துக் கொடுப்பதுதான் இயல்பு வாழ்க்கைக்கான முதற்படியாகும் ஏனெ னில், இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி முகாம்களில் அடிப்படை வசதிகள் இன்றி பெரிதும் அல்லற்படுகின்றனர். ஐந்துபேர் அல்லது அதற்கு மேற் பட்ட உறுப்பினரைக் கொண்ட குடும் பங்களுக்கும் மாதம் 1250 ரூபா மட் டுமே வழங்கப்படுகின்றது. இது அவர் களுக்கு மூன்று - நான்கு நாள்க ளுக்கு மட்டுமே செலவிற்கு போதுமா னது. எனவே இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் அகதிகள் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நன்மைகளை அனுபவிப்பதாக இல்லை.

வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு மக்களே மிகக் கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் 1987 இல் இருந்து அகதிகளாக இத்துக் கிடம் மாறி அலைகின்றனர். இப்பிர தேசத்தின் விஸ்தீரணம் 58.5 சதுர கிலோ மீற்றர். இந்த மக்களில் 60 சதவீதமானோர் விவசாயிகள், 30 சத வீதமானோர் மீன்பிடித்தொழிலுடை யவர்கள். இந்த நிலப்பிரதேசம் விளைச் சலில் 'பொன் விளையும் பூமி' எனப் பெயர் பெற்றது. விவசாயிகள் நல்ல விளைச்சலைப் பெற்றவர்கள். அத் தோடு வீட்டுத்தோட்டம் போன்ற மேல திக வருமானங்களையும் பெற்றுக்கொண் டிருந்தனர். மற்றும் மீனவர்கள் இந்த நாட்டுக்குத் தேவையான கடலுணவில் 30 சதவீதத்தை வழங்கிக்கொண்டிருந் தனர். இந்தக் குடிமக்கள் சாதாரண மான - பிரச்சினைகளற்ற - வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தனர். அவர்களின் பிள்ளைகளும் சிறந்த கல்வி வசதி கள் பெற்றுக்கொண்டிருந்தனர். இப் போது இப்பகுதியிலுள்ள மொத்தம் 45 கிராம சேவகர் பிரிவுகளில் 17 பிரிவுகளில் மட்டுமே மக்கள் மீளக் குடியமர படையினரால் அனுமதிக்கப் பட்டுள்ளது. மீதிப்பிரிவுகள் யாவும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் என்று நாமம் சூட்டப்பட்டு படையினரால் ஆக் கிரமிக்கப்பட்டுள்ளன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் - ஒரு நல்லெண்ண நோக் குடன் - படையினரின் - கட்டுப்பாட்டி லுள்ள பிரதேசங்களை அவர்களிடம் இருந்து விடுவித்து மக்கள் மீளக் குடியேறும் வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கவேண்டும். மேலும், அவர்களுக்கு ஏற்பட்ட இழப் படுகளுக்காக அரசாங்கக் கொள்கை யின்படி தகுந்த நஷ்டஈடு வழங்கப் படவேண்டும். நிதி வழங்குவதில் சில கட்டுப்பாடுகள் இருப்பின் அதற்கான சில காலவரையறையை கையாள லாம். மேலும் படையினர் இடங்களை தக்கவைத்துக்கொள்ளுதலும் - மக் கள் வதிவிடங்களில் மேலும் புதிய முகாம்களை பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அமைத்தலுமான செயல்பாடுகள் மக்களின் சாதாரண வாழ்விற்கு அச்சுறுத்தலாகவே அமை கின்றது. இவர்கள் மக்களின் துன் பங்களைப் புரிந்து கொள்பவர்களாக இல்லை. படையினரின் இவ்வாறான செயற்பாடுகளால் அரசாங்கம் மீண் டும் யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக் கில் உள்ளதா என மக்கள் அச்சப்பட கின்றனர். இதனால் மக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடை யில் நம்பிக்கையையும் புரிந்துணர் வையும் ஏற்படுத்துவதற்கு அரசாங் கம் தவறிவிட்டது. மாறாக படையி னரின் நடவடிக்கைகள் சமாதான நட வடிக்கைகளை திசைதிருப்பும் ஓர் எரிச்சலூட்டும் செயலாக அமைகிறது.

அவசரகாலச்சட்டம் நடைமுறை யில் இல்லாதபோது ஆயுதப்படையி னர் பொதுமக்களின் சொந்த இடங் களை ஆக்கிரமித்து அங்கு அதியுயர் பாகாப்பு வலயங்களை அமைப்ப தற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அது சட்டவிரோதமானதும் கூட. மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது ஒரு கொடூரமான சட் டம். இச்சட்டத்தின் கீழ் திருகோண மலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் இவைகளை அண் டிய கடற்கரையோரப் பகுதிகளை கட் டுப்பாட்டுப் பிரதேசம் என அரசாங் கம் பிரகடனப்படுத்தியுள்ளது. தனிப் பட்டவர்களின் கட்டடங்களை ஆக்கி மிக்கவோ அல்லது அவ்வாறு பிரக டனப்படுத்தப்பட்ட கரையோரப் பகுதி களுக்கு அப்பாற்பட்ட இடங்களை ஆக் கிரமிக்கவோ இச்சட்டம் இடமளிக்க வில்லை. எனவே, பொதுவில் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் 4.3 சரத்தில் குறிக்கப்பட்டுள்ள கண் காணிப்பு ஒழுங்கு நடவடிக்கை பற்றி மீள் பரிசீலனை செய்து பார்க்கவேண் டியது அவசியமாகிறது. இந்த உடன் படிக்கை அரசாங்கத்திற்கும் விடு தலைப் புலிகளுக்கும் இடையிலான விடயம். அதனால் அந்த உடன்படிக் கையின் மூன்றாவது சரத்தின்படி கண்காணிப்புக் குழுவினர் அந்த இரு பகுதியினரின் கோரிக்கைகளை மட் டும் பரிசீலிக்கலாம். வேறு மூன்றாவது தரப்பினரின் - பொதுமக்களின் - கோரிக்கைகளை கணக்கில் எடுக்க முடியாது. மனித உரிமைகள் பற்றிய சரத்துக்கள் எதுவும் அதில் குறிப் பிடப்படவில்லை. ஆனாலும் உடன் படிக்கையின் 2.1 சரத்தின்படி சர்வ தேச சட்டத்துக்கமைய படையினர் பொதுமக்கள் மீது பகைமை உணர்

(11ஆம் பக்கம் பார்க்க)

அணித்தெரிவு

யாழ்ப்பாணம்,டிசெ.8

தம்புள்ளவில் இடம்பெறவிருக் கும் 14 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான கிரிக் கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விருக்கும் அணித்தெரிவு நாளை திங் கட்கிழமை காலை 9 மணிமுதல் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற வுள்ளது.

இந்த அணியில் இடம்பெற விரும் பும் 1-1-89 இல் பிறந்த வீரர்களை அன்று காலை சமுகமளிக்கும்படி கேட் கப்பட்டுள்ளது. (ஐ-3)

வீதியோரத்தில் அப்பிள் விற்றோரை பொலீஸார் நேற்று அகற்றினர்

குருநகர்,டிசெ.8

யாழ்நகரில் அமைந்துள்ள நடை பாதைகளில் அப்பிள் விற்பனையில் ஈடுபட்டோர் நேற்றுப் பொலீஸாரால் அவ்விடங்களில் இருந்து அப்புறப் படுத்தப்பட்டனர்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி ஆகியவற்றில் அப்பிள் விற்பனையில் ஈடுபட்டோரே இவ்வாறு பலவந்தமாக அங்கிருந்து வெளி யேற்றப்பட்டனர்.

வாகனங்களில் வந்த பொலீஸார் பழங்களோடு வியாபாரிகளை ஏற்றிக் கொண்டு சென்று முனியப்பர் கோவில் பகுதியில் இறக்கிவிட்டனர் எனக் கூறப்பட்டது. (எ-51-139)

நெடுந்தீவு மாணவர்களின் கற்கும் உளநிலை பாதிப்பு

கல்வி மேம்பாட்டுப் பேரவை கவலை

யாழ்ப்பாணம்,டிசெ.8

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் தரை யிறக்கப்பட்ட பின்னர் பாடசாலைப் பிள்ளைகளின் கற்கும் உளநிலை குழம்பியுள்ளது. அவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு வழமைக் குத் திரும்ப ஈ.பி.டி.பியினர் வழிவிட வேண்டும்.

- இவ்வாறு கோரும் அறிக்கை ஒன்றினை யாழ்மாவட்ட தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை வெளியிட்டுள் ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

பரிந்துணர்வு ஒப்பந்தமும் சமாதா னப் பேச்சுகளும் தமிழ்மக்களுடைய இயல்பு வாழ்க்கையைக் கொண்டு வரும் இவ்வேளையிலே ஒரு குறிப் பிட்ட பகுதி மக்களை முடக்கிவைக்க முயல்வது ஏன்? ஜனநாயகத்தைக் காப்பாற்றவா? மலர்ந்துவரும் சமாதா னப் பேச்சு மக்கள் மனதிலே புத் தொளி வீசும் வேளையிலே இப்படி யோர் அடம்பிடிக்கும் முயற்சி அவர் கள் மனதிலே அச்சத்தைத் தோற்று விக்கிறது.

நெடுந்தீவில் உள்ள பள்ளிப் பிள் ளைகள் இயல்பு நிலையுடன் கற்கும் மனம் குழம்புகின்றது. உணவு கூட அங்குள்ள பிள்ளைகளுக்கும், மக்க ளுக்கும் போய்சேருவதிலே கெடுபிடி கள் உண்டாக்கப்படுகின்றன. இந்த வகையில் இம்மண்ணிலுள்ள கல்விச் சமூகம் இதனை வன்மையாகக் கண் டிக்கின்றது.

நெடுந்தீவு மக்கள் தொடர்ந்து உண்ணாநோன்பு நோற்கும் நிலை மாறவேண்டும் மக்கள் உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுப்பதுதான் ஜனநாயக முறை. மக்கள் ஆதரவு இருக்கின்றது என்று கருதினால் இம்மக்கள் ஏன் எதிர்ப்புக் குரல் கொடுக்க வேண்டும்? மக்களுடைய இயல்பு வாழ்வுக்கு வழி விட்டு விலகுங்கள்.

அதுதான் மக்கள் தீர்ப்பாகவும் உள்ளது. உலகம் மக்கள் துன்பங் களைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் பக்கம் ஏனைய வெகுஜன மும் நிற்கின்றது என்பதை நினைவு படுத்துகிறோம். -

தமிழ் மண்ணின் கல்வியாளர்கள் நெடுந்தீவு நிலையை உன்னிப்பாகக் கவனித்து மனவேதனையடைகின்ற னர். தமிழர் இயல்பு வாழ்வு திரும்ப வழிவிடவேண்டுமென ஈ.பி.டி.பியின ரைக் கல்வி மேம்பாட்டுப் பேரவை கேட்டுக்கொள்கின்றது - என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

கம்பளை உதை பந்தாட்ட லீக் கில் அங்கம்வகிக்கும் எவ்சைன் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணியினர் யாழ்ப்பாணம் வந்துள்ள னர்.

இந்த அணியினர் இங்கு சிநேக பூர்வ போட்டியில் விளையாடவுள்ள னர். இந்த போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும்.

எவ்சைன் அணியை எதிர்த்து இந்தப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட அணியினர் விளையாடுகின்றனர்.

(ஒ)

ஈ.பி.டி.பி. மீது மகேஸ்வரன் அபத்தமான குற்றச்சாட்டுகள்

கண்டித்து அக்கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.8

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் பல பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர் என்று அமைச்சர் மகேஸ்வரன் கூறியுள்ள குற்றச்சாடை அந்த அமைப்பு மறுத்திருக்கிறது.

அண்மையில் நாடாளுமன்றத் தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் பேசுகையிலேயே அமைச்சர் மகேஸ் வரன் தமது அமைப்பு மீது தெரி வித்த குற்றச்சாட்டுக்களை மறுத்து ஈ.பி.டி.பி. தகவல் தொடர்பு செயலா ளர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமைச்சர் மகேஸ்வரனின் அபத் தமான குற்றச்சாட்டுக்கள் நெடுந்தீவுப பெண்களை அவமானப்படுத்துவதாகும்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் வாழும் பெண்களை மானபங்கப்படுத்தும் வகை யிலும் அவர்களின் சுயகௌரவத்திற்கு இழுக்கு ஏற்படும் வகையிலும் அமைச் சர் மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின்போது குறிப் பிட்டவற்றை வன்மையாகக் கண்டிக் கின்றோம். கடந்த வியாழனன்று சபையில் ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றிய அமைச்சர் மகேஸ் வரன் நெடுந்தீவில் பல பெண்களை ஈ.பி.டி.பி. பாலியல் வல்லுறவுக்கு உள் ளாக்கியது எனவும், ஈ.பி.டி.பி உறுப் பினர்கள் ஒவ்வொருவரும் தலா மூன்று பெண்களைத் திருமணம் செய்துள் ளனர் எனவும் குற்றம் சுமத்திப் பேசி னார். அமைச்சரின் இந்தக் கூற்று பெண்கள் அனைவரையும் இழிவுபடுத் துவதாகவும், பெண்களுக்கு அவமான உணர்வைத் தூண்டுவதாகவும் இருப் பதுடன் சாதாரணமாகவே பெண்களின் உரிமைக்கு சவால் விடுவதாகும்

அதிலும் குறிப்பாக நெடுந்தீவுப் பிரதேசத்தில் வாழ்ந்துவரும் மிகவும் மதிப்புக்குரிய தமிழ்ப் பெண்களின் ஒழுக்கத்தைக் கேள்விக்குள்ளாக் கும் வகையில் அமைச்சர் ஒருவர் அநாகரிகமாகப் பேசியிருப்பது மிகவும் கண்டனத்துக்குரியதாகும். அதிலும் நாட்டின் உயர் சபையான நாடாளுமன் றத்தில் இத்தகைய கொச்சைத்தன மான கருத்துக்களைக் கூறி கேவல மாகப் பேசியமை அரசாங்கத்தை குறிப்பாக ஜக்கிய தேசியக் கட்சியை அவமானப்படுத்துவதாகும். இந்து சமய கலாசார விவகாரத்துறையை பொறுப்பேற்றுள்ள ஒருவரின் இந்தப் பண்புகெட்ட வார்த்தைகள் கேட்டு நாகரிக உலகம் வெட்கித் தலைகுனிந் துள்ளது.

மேலும், 1994 பொதுத் தேர்தலின் போது வாக்களிக்கும் உரிமையைக் கூட பயன்படுத்த முடியாமல் இருந்த அமைச்சர் மகேஸ்வரன் போன்றவர் கள் ஈ.பி.டி.பியின் ஜனநாயக அரசி யல் செயற்பாடுகளின் காரணமாகவே இன்று ஜனநாயக அரசியலின் தலை யெடுக்க முடிந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவது இங்கு பொருத்த மானது. அத்துடன் எங்கெங்கோ, எப் போதோ நிகழ்ந்த ஒருசில கொலை களைச் சுட்டிக்காட்டி ஈ.பி.டி.பியைக் கொலைகாரர்கள் என சித்திரிக்க முற்பட முன்னர் இவர்கள் புலிகளால் கொலையுண்டவர்களின் பட்டியலை ஒருதடவை திரும்பிப் பார்ப்பது நல் லது. இதேவேளை ஈ.பி.டி.பியின் மான உணர்வுகளை சீண்டிப்பார்க்கும் இத் தகையவர்கள் தங்களுக்கு அத்த கைய உணர்ச்சிகள் இருக்கிறதா என் பதை பரிசோதித்து பார்ப்பது மிக வும் பொருத்தமானதாக இருக்கும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

மாநகராட்சி மன்றம்

திரிகரண சுத்தியுடன் வாழ்ந்த சேர் பொன்.இராமநாத வள்ளல்

சேர் பொன்.இராமநாத வள்ளலின் 72 ஆவது குருபூசை தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

சமய வாழ்வு என்பது அன்பு வாழ்வு. அன்பு வாழ்வு வாழ்ந்தவர்கள் எல்லாம் சமய வாழ்வு வாழ்ந்தவர்களே. இதற்கு விதிவிலக்கானவர் அல்லர் சேர் பொன்.இராமநாதன் அவர்கள். அவர் வாழ்ந்து காட்டிய வாழ்வு சமய வாழ்வே. 'கருதரிய சிற்சபையில் ஆனந்த நடனமிடும் கருணாகரக் கடவுளே திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்' என்பது அவரது தாரக மந்திரம். இது அவரால் கட்டப்பட்ட மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் மகுட வாசகமுமாகும். இவ்வாசகம் சேர் பொன். இராமநாதனின் சமயவாழ்வின் சின்னமாக விளங்குகின்றது. இது சைவ உலகிற்கு அவர் விட்டுச் சென்ற அருள் மொழியாகும். இத்தகைய பெருமகனைச் சைவ உலகம் போற்றக் கடமைப்பட்டுள்ளது.

1851 ஆம் ஆண்டு அவதரித்து எண்பது ஆண்டுகள் இந்நில உலகில வாழ்ந்துள்ளார். வாழ்ந்த காலம் அத்தனையும் பயனுள்ளதாகவே மிளிர்கினறது. மக்கள் சேவைக்குத் தன்னை முழுமையும் ஒப்படைத்து வாழ்ந்தார். அவர் மக்களுக்காக ஆற்றிய, சமயப் பணிகள், கல்விப்பணிகள், அரசியற்பணிகள், சமூகப்பணிகள் என நினைத்துப் பார்க்க முடியாதவை.

இத்தகைய பணிகளுக்கென விட்டுச் சென்ற சொத்துக்கள் ஏராளம். இத்தனையும் செய்துவிட்டு யாவும் பரமேஸ்வரன் சொத்து என்பார். இத்தனை பணிகளுக்கு இடையேயும் சிததத்தைச் சிவன்பால் வைத்திருந்தார். எந்த நிலையிலும் உளம்தளராத உறுதியுடனும், கடவுள் நம்பிக்கையுடனும், வீரத்துடனும் வாழ்ந்ததோடு, பற்றற்ற துறவியாகவே வாழ்ந்தார். பற்றற்ற சமய வாழ்வு வாழ்ந்த சேர் பொன். இராமநாதன் அவர்கள் 1930 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் திருவோண நட்சத்திரத்தில் சிவப்பேறு எய்தினார். பெறுதற்கரிய இறை நிலை எய்திய இந்த ஆத்ம ஞானியை நாம் இன்று நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

சமய வாழ்வின் மூலம் மனிதன்

பிறவியின் பயனை அடைகின்றான். இத்தகைய சமய வாழ்வின் பெருமையையும் மனிதப் பிறவியின் அருமையையும் நன்குணர்ந்தவர் சேர் பொன்.இராமநாதன் அவர்கள்.

எனவே, ஞானமுங் கல்வியும் நன்நாகப் பெற்றார். தானமும் தவமும் தான் செய்து கொண்டார். அதனால் வானவர் நாடு அவருக்கு வழி திறந்தது. இறைநிலை அடைந்தார். அவரது வாழ்வு திரிகரண சுத்தியுடன் கூடிய சமய வாழ்வு என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

எமது சமயம் இறைவனை அடைவதற்கெனக் கூறும் சமய நெறிகளினூடாக தமது வாழ்க்கையை நடத்தியவர் அவர். இதனை அவரது வாழ்க்கை வரலாறு மூலம் உணர முடிகின்றது. விபூதி தரிப்பதும், காவி உடுப்பதும், உருத்திராக்கம் அணிவதும் மட்டும் சைவ வாழ்வாகாது என்பதையும் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும் என்பதையும் சேர் பொன் இராமநாதனின் சைவ வாழ்வு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

மேலும், சைவச்சிறுமிகளுக்கெனக் கட்டப்பட்ட இராமநாதன் கல்லூரி அதனுடன் இணைந்த நடராஜர் ஆலயம், கல்லூரி முன்றலில் இருக்கும் சமாதி ஆலயம், இராமநாதன் நுண்கலைப்பீடம், யாழ்.பல்கலைக் கழகம், அதனுடன் இணைந்த ஆலயம், கொழும்பு பொனனம்பலவாணேஸ்வரர் ஆலயம் என்பன அவரது சமய வாழ்வின் சின்னங்களாக விளங்குகின்றன.

இறை பற்றைத் தவிர வேறுபற்றை அறியாதவரான சேர் பொன்.இராமநாதன் அவர்கள் 'நடமாடும் கோயில் நம்பர்க் கொன்று ஈயின் படமாடும் கோயில் பரமர்க்கதாமே' என்ற திருமந்திர வாக்கின்படி நடந்தார். மக்களுக்குச் செய்யும் சேவை இறைவனுககுச் செய்யும் சேவையே என உணர்ந்தார். அதனால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகள் யாவற்றையும் திறம்படச் செய்தார். அவர்தம் அர்ப்பணிப்புகள் நினைத்துப் பார்க்க முடியாதவை. 'கல்வியறிவு அற்றவர்களுடைய ஊர் கசடர் வாழும் ஊர் அதனைத் தீக்கிரையாக்க வேண்டும். வீட்டிலும் நாட்டிலும் கலையின் ஒளி திகழ வேண்டும்.' என்றார் பாரதி.

இராமநாதனே ஒரு பெண்ணுக்குக் கொடுக்கும் கல்வியால் வீடும் நாடும் ஒளிபெறும் - என்றார். இதன் விளைவாக எழுந்ததே இராமநாதன் கல்லூரி.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' எனக் கருதி இலங்கைச் சட்டசபையில் தமிழர் பிரதிநிதியாக இருந்து இனமத வேறுபாடின்றி இலங்கைவாழ மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். இத்தகைய மகானுக்கு அருட்பரானந்த சுவாமிகளுடைய ஞான உபதேசம் கிடைத்தது. அருட்பரானந்த சுவாமிகளை ஞானகுருவாகப் பெற்ற பின் அவரது நடை, உடை, உணவு யாவும் ஆத்மீக வழியில் அமைந்தன. ஆழ்ந்த ஆத்ம ஞானமும் பற்றற்ற போக்கும் மிகுதியாக அவரிடம் காணப்பட்டன. இவரது ஆத்ம ஞானம் கடல் கடந்த நாடுகளிலும் பரவியது.

அமெரிக்காவரை சென்று வாஷிங்டன் முதலிய நகரங்களிலும், தேவாலயங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் ஞானப் பேருரைகள் நிகழ்த்தினார். இதனால் கவரப்பட்ட மக்கள் இராமநாதனையே குருவாகப் பற்றிக்கொணடனர். விவேகானந்தருக்குப் பின் அமெரிக்காவில் ஞான முழக்கம் செய்தவர் சேர் பொன். இராமநாதன் அவர்களே. இவரது சொற்பொழிவுகள் 'மேற்கு நாடுகளிடையே காணப்படும் ஆத்மீகப் பண்பு' என்ற ஆங்கில நூலாக வெளிவந்துள்ளது.

பண்டிதை திருமதி
வை. கணேசபிள்ளை

இவர் குருவிடம் சந்நியாசம் பெற்ற பரம ஞானி ஆகையால் இவரது பூதவுடல் சமாதியாக அமர்த்தப்பட்டு மேலே கோயில் எழுப்பப்பட்டு, சிவப்பிரதிட்டை நிகழ்ந்து பூசைகள் நடைபெற்று வருகின்றன. ★

திருநெல்வேலிப் பகுதியில்
திருட்டு முயற்சிகள் மீண்டும் அதிகரிப்பு

வலி.வடக்கு,டிசெ.8

மோட்டார் சைக்கிளில் வருபவர்களால் வீதிகளில் பயணம் செய்யும் பெண்களின் நகைகள் அறுத்துச் செல்ல முயலும் சம்பவங்கள் மீண்டும் திருநெல்வேலிப் பகுதியில் அதிகரித்துள்ளது.

கடந்த ஒருவாரத்தில் மட்டும் 3பேரிடம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் நகைகளைத் திருட எடுத்த முயற்சி பலனளிக்காது போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருநெல்வேலி சிவன் வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் சைக்கிளில் வந்த பெண்ணிடம் சங்கிலியை அறுத்துச் செல்ல முயன்றுள்ளார். எனினும் சம்பந்தப்பட்ட பெண் உடனடியாக நிலத்தில் வீழ்ந்ததை அடுத்து திருட்டு முயற்சி பலனளிக்கவில்லை.

அதேதினம் - கந்தர்மடம் மனல் தறை ஒழுங்கையில் பஞ்சாபி அணிந்து சென்ற பெண்ணிடம் சங்கிலி அறுக்க முற்பட்ட மோட்டோர் சைக்கிளில் வந்தோர் பெண் கூக்குரல் இடவே பஞ்சாபியின் தாவணியுடன் தப்பிச் செனறுள்ளனர்.

சிவன் புதுவீதியிலும், ரியூசனுக்குச் சென்ற மாணவி அணிந்திருந்த சங்கிலியை அறுக்க முற்பட்டவர்கள மாணவியின் கூக்குரலை அடுத்து தப்பி ஓடிவிட்டனர்.

(எ-86)

விசர்நாய்க் கடி.....! நீங்காத பேராபத்து!

இன்று தொழில்நுட்பம் முன்னேற்றம் கண்டு விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த நேரத்திலும் மனிதனை பல்வேறு விதமான நோய்கள் வாட்டுகின்றன; அழிக்கின்றன.

வடபகுதியில் மிகப்பாரிய பிரச்சி

னைகளில் ஒன்றான விசர்நாய்க் கடி நோயும் மனிதர்களை விட்டு வைத்ததாகவில்லை.

வீடுகளில் வளர்க்கும் நாய்களைத் தவிர (பட்டிபோட்டது) ஏனைய நாய்களை கட்டாக்காலி நாய்களாகக் கருதி உள்ளூராட்சி மன்றங்களான பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை ஆகியன நஞ்சூட்டி அழித்து வருகின்றன.

அவ்வாறு இருந்தபோதும் விசர்நாய்க்கடி தொல்லை தினமும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இதன் தாக்கம், அழிவு, பிரச்சினை மற்றும் நோயின் அறிகுறி பற்றி இன்றைய காலகட்டத்தில் விளக்க வேண்டிய தேவை உள்ளூராட்சி மன்றங்களுக்கே உரித்தானது.

விசர்நாய்க் கடி ஓர் உயிர் (A.R.V) ஆபத்தை விளைவிக்கும் உயிர்கொல்லி நோயாகும்.

இந்நோய் கூர்ப்பான போக்குடைய, தொற்றக் கூடிய ஒரு நோய். இந்நோய் மனிதரிலும் அனேகமாக ஒரு சீருயர் விலங்குகளிலும் இறப்பை ஏற்படுத்துகின்றது.

இன்று யாழ்.குடாநாட்டில் குடியிருப்புப் பகுதிகளில் இந்நோயை மனிதருக்கும் - ஏனைய விலங்குகளுக்கும் கடத்துவதில் நாய்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

இதனைவிட காட்டுவிலங்குகளில் நரி முக்கிய பங்கினை வகிக்கின்றது.

எலிகள் கூட இந்நோயால் பாதிக்கப்பட்டு, இந்நோயை கடத்துவதில் முக்கிய பங்கினை வகிப்பதாக விஞ்ஞானபூர்வ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

விசர்நாய்க் கடிக்குள்ளான மனிதரிலும் சரி ஏனைய விலங்குகளிலும் சரி 100 வீதமான இறப்பை ஏற்படுத்துகின்றது.

மனிதரில் இந்நோய் 'நீர் வெறுப்பு' அறிகுறியை தோற்றுவிக்கும்.

இன்று யாழ்.குடாநாட்டில் நோய் வாய்ப்பட்ட நாய்கள், உணவின்றி அலைந்து திரியும் நாய்கள், சந்தைகள் மற்றும் பொது இடங்கள், வீதிகளில் கட்டாக்காலியாக திரியும் நாய்கள் வழமைக்கு மாறுபட்ட பழக்க வழக்கங்களைக் காட்டுகின்றன.

விலங்குகளில் காணப்படும் அறிகுறிகள் விலங்குகளுக்கு விலங்கு மாறுபட்டதாக காணப்படுகின்றது.

விசர்நாய்க்கடி நோய் ஏற்பட்ட ஒரு நாயில் பொதுவாக பின்வரும் முக்கிய அறிகுறிகள் காணப்படலாம்.

★ நாய் அங்கும் இங்கும் அலைந்து திரியும்.

★ உமிழ்நீர் வழிந்தோடும்.

★ வேறு நாய் அல்லது விலங்குகள் அல்லது மனிதரைத் தாக்கத் தொடங்கும்.

★ இந்நாயை சங்கிலி மூலம் கட்டி வைத்தால் அதைச் சப்பி தனது பற்களை சேதப்படுத்திக்கொள்ளல்.

★ இருண்ட மூலைகளில் பதுங்கி ஒளிந்திருத்தல்.

★ பழக்கப்பட்ட ஒருவரின் அழைப்பிற்கு செவிசாய்க்காமல் இருத்தல்.

★ கற்பனைப் பொருள்களை தாக்குதல் போன்றன.

நோய் தொடரும்போது ஏற்படும் அறிகுறிகளாகும்.

நோய் முற்றிய நிலையில் பினவரும் அறிகுறிகள் காணப்படலாம்.

★ பின்னங்கால் செயலிழந்து சோர்வாதம் ஏற்படும்.

★ பொதுவாக அறிகுறிகள் தொடங்கி 10 நாள்களில் நாய் இறந்து விடும்.

★ உணவை விழுங்குவதில் விருப்பம் இருந்தாலும் அவ்வுணவை விழுங்கிக் கொள்வதில் கஷ்டப்படும்.

★ கண்மணி விரிந்து பிதுங்கிய நிலையில் பயங்கர தோற்றத்தை தரும்.

★ நாயின் தொண்டையில் ஏதோ எலும்புத் துண்டொன்று சிக்கியது போன்று, திரிந்த சத்தத்தை வெளியிடும்.

மேற்குறிப்பிட்டவற்றில் ஏதாவது ஒரு சில அறிகுறிகள் தென்பட்டால் போதும்.

நீங்கள் செய்யவேண்டியது இது தான்!

உங்கள் நாயில், மேற்படிநோய் இருப்பதாக உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக அதை சங்கிலி மூலம் கட்டவேண்டும். எக்காரணம் கொண்டும் கயிறுகொண்டு கட்டக் கூடாது.

அதன் நடத்தைகளை நன்கு தினமும் அவதானிக்க வேண்டும்.

இவ்வேளையில், அந்நாயின் அருகில் செல்லவோ, அல்லது அதன் வாயினுள் மருந்தோ அல்லது உணவோ ஊட்டக்கூடாது.

செல்வராஜா ரமேஷ்

ஏனெனில் இந்நோய்க்கு காரணமான வைரஸ் கிருமிகள் உமிழ்நீரில் காணப்படுகின்றன. இந்நிலையில் இந்நோய் ஏற்பட்ட நாய் ஒருவரைக் கடித்தாலோ அல்லது அதன் உமிழ்நீர் உடலிலுள்ள ஒரு காயத்தின்மீது அல்லது சிறுகீறலின் மீதுபட்டால் உமிழ்நீரில் உள்ள கிருமிகள் அவற்றினூடாக உடலினுள் சென்றுவிடும்.

விசர்நாயினால் கடியுண்ட அல்லது விசர்பிடித்த வேறு விலங்குகளால் கடியுண்ட ஒருவரில் அந்நோயின் அறிகுறிகள் ஏற்படத் தொடங்கிவிட்டால் அந்நோயை கட்டுப்படுத்தவோ குணப்படுத்தவோ முடியாது!

ஆகையால், இந்நோய் ஏற்படாதவாறு தடை செய்வதே ஒரேயொரு வழிமுறையாகும்.

இதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய முற்காப்பு நடவடிக்கைகளாவன:-

வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளில் முக்கியமாக நாய்களில் விசர்நாய்க் கடி ஏற்படாதவாறு தடுப்பதற்கு தகுந்த நேரத்தில் இந்நோய்க்குரிய தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும். (குறிப்பாக உள்நாட்டு, வெளிநாட்டு நாய் என்று வேறுபாடு இல்லாமல்)

முதலாவது தடையூசி - நாய்க்கு 5 மாத வயதாக இருக்கும் போது ஏற்றப்பட்டு அதன்பின் இருவருடங்களுக்கு ஒருமுறை தடை ஊசி மருந்து ஏற்றப்பட வேண்டும்.

ஊர்களில் திரியும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகளை அவ்வப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச சபை, நகர சபை, மாநகரசபை செயலாளர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மேற்கொள்ள முன்வரவேண்டும்.

வீட்டு நாயில் விசர்நாய் நோய் இருப்பதாக சந்தேகம் இருந்தால் அதை உடனடியாக கட்டி வைத்து அதன் நடவடிக்கைகளை நன்கு அவதானிக்கவேண்டும்.

உங்கள் பகுதி கால்நடை வைத்திய அதிகாரியை நாடி, நாய் 'நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதா' என்பதனை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நாய் ஒருவரை கடித்து குதறிவிட்டால் உடனடியாக கடித்த இடத்தைத் தாராளமாக தண்ணீர், சவர்க்காரம் கொண்டு கழுவவேண்டும்.

'சவலோன்' அல்லது 'டெட்டோல்' கிடைக்குமாயின் முதலில் காயத்தை நிறைய தண்ணீர் கொண்டு கழுவி அதன்பின் சவலோன் அல்லது டெட்டோலை காயத்தின் மீது ஊற்றவேண்டும். பின்னர் வைத்தியரின் ஆலோசனைப்படி நடந்து கொள்ளவேண்டும்.

மேற்படி நடவடிக்கையை கைக்கொள்ளாதுவிடின் விசர்நாய்க்கடிக்கு இலக்கு ஆனவர்கள் பேரிடரை சந்திக்க நேரிடும்!

யாழ்.அத்தியடிப் பிள்ளையார் கோயில் கஜமுக சங்கார விஞ்ஞாபனம்

காலம்: இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு **கஜமுக சங்காரம்.**

நாளை (09.12.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு **பஞ்சமுகப் பிள்ளையாருக்கு ஸ்நபன அபிஷேகமும் பெருங் கதைப் பூர்த்தி வீசேட பூசையும்** நடைபெறும்.

பி.ப. 4.00 மணிக்கு **பஞ்சமுகப் பிள்ளையாருக்கு பஞ்சமுக அர்ச்சனை நடைபெற்று பஞ்சமுகப் பிள்ளையார் வீதி உலா வந்து அருள்பாலிப்பார்.**

அத்தியடி, யாழ்ப்பாணம். (11511)

பிள்ளையார் பணியில் கோயில் நிர்வாகம்.

ஆண் மகனுக்கு சிறுநீரகம் தேவை

"B" (POSITIVE) பொசிட்டிவ் இரத்தப் பிரிவு உடைய சிறுநீரகம் தேவை. தந்து உதவக் கூடியவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

(காலை 8-1மணி வரை, மாலை 3-6 மணிவரை)

விவரங்களுக்கு:

திரு.க. இரட்ணலிங்கம்
250, இராமலிங்கம் வீதி,
(11515) திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

இருபதாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27
-
09
-
1924

மறைவு
08
-
12
-
1982

யாழ்ப்பாணம் தேவன்

நினைவு கூருபவர்கள்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(11514)

வெற்றிடம்

மருத்துவப் பிரதிநிதி

(Medical Delegate)

நெஸ்லே, இன்றைய உலகின் முதற்தர உணவு உற்பத்தி நிறுவனமாகும். ஏறத்தாழ உலகில் அனைத்து நாடுகளிலுமுள்ள அதன் 450 உற்பத்தி ஆலைகளில் 300,000 க்கும் அதிகமானோர் தொழில் புரிகின்றனர்.

நெஸ்லேயின் போஷாக்கு உற்பத்திகளை, வட பிராந்தியத்தில் சுகாதாரத் தொழில் துறை சார்ந்தோருக்கு அறிமுகம் செய்யவும், ஊக்குவிக்கவும், கடின உழைப்பு மற்றும் நம்பகத்தன்மையோடு நல்லொழுக்கமும் திறனும் கொண்ட ஒருவரை எம்முடன் இணைத்துக் கொள்ள விரும்புகிறோம்.

விண்ணப்பதாரி **யாழ்ப்பாணத்தில் வசிப்பதோடு** 21- 30 வயதிற்கு உட்பட்டவராகவும், க.பொ.த உயர் தரத்தில் இரசாயனவியல் உட்பட விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும். விஞ்ஞானப் பட்டதாரியாக இருந்தால் அல்லது சுகாதார நலத்துறையில் (மருந்தாக்கல் துறை / மருத்துவத் துறை) அனுபவம் இருந்தால் அனுகூலமாகக் கருதப்படும்.

விண்ணப்பிப்பவர்கள் சுய ஊக்கமுடையவர்களாகவும் ஆங்கிலத்தைச் சரளமாகக் கையாளும் தன்மையுடன், தொடர்பாடல் ஆற்றல் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள், இரு நோக்கு வாகனங்களை ஓட்டும் திறனோடு, அதற்கான செல்லுபடியாகக் கூடிய அனுமதிப் பத்திரத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

எமது இந்த எதிர்பார்ப்புகளுக்கு அமைவானவர்களாக நீங்கள் இருந்தால், 2002 **டிசம்பர் 10 மற்றும் 11** ஆம் திகதிகளில் **மு.ப 8.30 தொடக்கம் பி.ப 1.30** வரை கீழுள்ள முகவரியில் நடைபெறும் **நேர்முகப் பரீட்சைக்கு நேரடியாகச் சமுகம்** அளிக்கவும்.

பஸ்தியன் ஹொட்டேல்
இல: 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2222605 பக்ஸ்: 021-2223447

உறவினரல்லாத இருவரை சிபார்சாளர்களாகக் குறிப்பிட்ட சுய விபரக் கோவை, அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் ஆவணங்களுடன் வருமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

மனித வள முகாமையாளர்
நெஸ்லே லங்கா லிமிட்டட், 440, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

Nestlé

Careers that brand you for life

31ஆம் நாள் முகிழ்விடும் நினைவுகள்

அன்னை மடியில்
20
✦
04
✦
1970



மண்ணின் பிடியில்
09
✦
11
✦
2002

அமரர் அழகர்சாமி சிவகுமார்

எந்தமது இல்வாழ்வு ஏற்றங் காண
எந்நாளும் துணைவருவா யென்றேநா மிருக்க
பந்தமறுத் தெந்தனையே பசுங்குழந் தையோடு
பரிதவிக்க இப்புவியில் பாதிவழி விட்டே
சென்றனையில் வெந்தாயோ சிவகு மாரா
சீவியத்தில் உனைமறவோம் செல்வா சென்றே
கந்தமுறு கலட்டி அன்னை தாவின் கீழே
கண்டிருவாய் எந்நாளும் கண்ணா சாந்தி!!!

எம் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து உதவியோர், பிரகரங்கள்மூலம் அஞ்சலிகளைச் செலுத்தியோர், அனுதாபச் செய்தி அளித்தோர், நோயுற்ற காலத்தில் உடன்நின்று உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் யாவேருக்கும் எம் உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு, இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.30, அம்மன் வீதி, கலட்டி. (11518)

- குடும்பத்தினர்.

முப்பத்தோராம் நாள் நினைவலைகள்

மலர்வு
20
☆
04
☆
1970

உதிர்வு
09
☆
11
☆
2002

அமரர் அழகர்சாமி சிவகுமார்

உறவுகள் நிலைத்திடுமோ எவ்றும்
உன் நினைவு நிலைத்திடுமே
எம் மனதில்

ஊரெலாம் உறவு
உறவெல்லாம் உனக்கு தேனாறு
பாடும் நெஞ்சம் பார்த்திருக்க
உனை நாடும் நெஞ்சங்கள்
ஓராயிரமே!

கை கோத்து நாம் ஆடும்
கரபந்தாட்டம் எவ்றும்
எம்மனதில் நின்று நீழலாடுகிறதே
ஏடுகளில் இல்லை உனக்கு
இணையான அன்பு

பாடுகின்றோம் இன்று நம் மனப்புன்னை ஆற்ற
சீட்டான உன் ஆர்வம்
பட்டுப்போன தென்ன விந்தையோ
சிவ சிவா

பிரிவால் குயருறும்:

பவானி விளையாட்டுக் கழக நண்பர்கள்.

(11518)

உதயன்

அமெரிக்கா இனி செய்யவேண்டியது

நீண்டகாலம் புரையோடிப்போயிருந்த இனப்பிரச்சினைக்கு சமஷ்டி - அதாவது - கூட்டாட்சி கட்டமைப்பினுள் தீர்வுகாண்பதற்கு இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்டிருப்பதை சர்வதேச சமூகம் வெகுவாகப் பாராட்டியிருக்கிறது.

ஒஸ்லோ பேச்சுக்களின் முடிவில் இப்படி ஓர் இணக்கத்தை எட்டியிருப்பதற்காக இருதரப்புகளையும் வெகுவாகப் பாராட்டியிருக்கிறது அமெரிக்கா. தீர்வுக்கான இணக்கத்தை வரவேற்றிருக்கும் அதேவேளை, இரு தரப்புகளையும் இப்படியான இணக்கத்திற்குக் கொண்டு வர முயற்சிசெய்த நோர்வேத் தரப்பையும் விதந்து பாராட்டியிருக்கிறது.

அமெரிக்க அரசின் சார்பில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பிலிப் ரெக்கர் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்மக்களின் நியாயமான - அடிப்படையான - அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஒரு கூட்டாட்சி முறைக்கு மாற்றுவதற்கு அரசு இணங்கியிருப்பது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியத்துவம்வாய்ந்த - மகத்தான - முடிவாகும்.

பிரதமர் ரணிலின் அரசின் இந்த நிலைமாற்றத்துக்கு அமெரிக்கா தலைமையில் சர்வதேச சமூகம் ஆதரவாக நிற்பது வெளிப்படை.

நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்களும் இம்முறை சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டன. பேச்சுக்களுக்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரம் என்பது அந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தலைமைகளுக்கான அங்கீகாரமாகவும் கொள்ளலாம்; கொள்ளமுடியும். அந்தவகையில், ஈழத்தமிழ் இனத்தின் ஏகப் பிரதிநிதிகள் - அவர்களின் நம்பிக்கைக்குரிய ஒரே தலைமை - விடுதலைப் புலிகள்தான் என்பதை சர்வதேசம் அங்கீகரித்திருக்கிறது.

தமிழ்மக்களின் விடுதலைப் போருக்கும், அடிப்படை அபிலாஷைகளுக்கும், அவர்களின் அரசியல் தலைமைக்கும் கிடைத்திருக்கின்ற சர்வசே அங்கீகாரம் தமிழர் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்; வெற்றிப்படி என்று கொள்ளலாம்.

இந்தப் பின்னணியில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் சர்வதேச சமுகத்திடம் முக்கியமான மற்றொரு கோரிக்கையை விடுக்கும் வாய்ப்பு - தேவை - உருவாகியிருக்கிறது. அதுதான் புலிகள் மீதான சர்வதேச தடைநீக்கம்.

இலங்கை அரசும் படைகளுடன் தமிழர் உரிமைக்காகப் போராடியதைத்தவிர புலிகள் செய்த குற்றம் ஒன்றுமில்லை. தமது இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காக - சுயபாதுகாப்புக்காக - புலிகள் இயக்கம் போராடியது.

தமிழர்களை அடக்கியாள முற்பட்ட இலங்கை அரசு அந்தப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்றது; உரிமைப் போரை முன்னின்று நடத்திய மக்களின் சக்தியான விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றது; அந்த இயக்கத்தைத் தடைசெய்தது.

அடிப்படை மனித உரிமைகள் பற்றியும், தனிநபர் சுதந்திரம் குறித்தும் அதிகம் பேசி உலக நாடுகள் எங்கும் போதனை செய்யும் அமெரிக்காவும், பிரிட்டனும் முந்திய அரசும் அதன் பிரசாரப் பீரங்கியான வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சுட்டவிரல்களை நம்பி புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு என்று முத்திரைகுத்தி தடை விதித்தனர். அந்தத் தடை உத்தரவு வருடாந்தம் நீடிக்கப்பட்டும் வருகின்றது.

இப்போது நிலைமை மாறிவிட்டது. தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கவேண்டும், அவர்களின் இடர்களைக் களையவேண்டும். அவற்றைச் செய்வது நியாயமானது என்று சிங்கள அரசுத் தலைமை உணர்ந்துவிட்டது. சமாதானத்தை வரவேற்கும் நாட்டுமக்களின் பெரும்பான்மையினர் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக அரசுக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

பிரதமர் ரணிலின் அரசு ஒரு துணிச்சலான நடவடிக்கையாக புலிகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிவிட்டது. உள்நாட்டில் தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து புலிகள் மீதான தடையை வெளிநாடுகளும் குறிப்பாக அமெரிக்காவும் நீக்கிவிட வேண்டும் என்று கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

தற்போது புலிகளும் அரசும் நடத்தும் சமாதானப் பேச்சுக்களுக்கும் அவற்றின் பெறுபேறாய்க் கிட்டியிருக்கும் அரசியல் தீர்வுக்கான இணக்கப்பாட்டிற்கும் சர்வதேசத்தின் அங்கீகாரமும் ஆதரவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் அமெரிக்காவும், பிரிட்டனும் புலிகள் அமைப்பு மீதான தடையைத் தொடர்ந்து வைத்திருப்பதில் அர்த்தமில்லை.

சமாதானப் பேச்சுக்கள் மேலும் ஸ்திரப்படவும், தீர்வுக்கான திசையில் இனிமேல் நகரவுள்ள முக்கியமான பேச்சுக்களின் இருதரப்புகளும் உற்சாகப் பங்கு கொள்வதற்கான உந்து சக்தியை அளிப்பதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் முன்வரவேண்டும்.

புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவதுதான் அமெரிக்காவின் அடுத்த நடவடிக்கையாக அமைய வேண்டும் என்று ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

யாழ். ரயில் நிலையக் கட்டடம் மெல்ல மெல்லப் பறிபோகின்றது

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.குடாநாட்டில் பழைமை வாய்ந்ததும் நகரமக்களின் சொத்துமாகிய யாழ்.ரயில் நிலையம் மெல்ல மெல்லவாகச் சூறையாடப்பட்டு வருகின்றது. சில விஷமிகள் நன்கு திட்டமிட்டு இந்நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அப்பிரதேச மக்கள் மூலம் உதயனுக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

தினமும் காலையில் ரயில் நிலையப் பகுதியில் கூடும் திருடர்கள் கூட்டம் சற்றுநேரம் ரயில் நிலையத்துக்குள் அமர்ந்திருந்தவாறு நிலைமைகளை அவதானிக்கின்றது.

பின்னர் தமது பாதுகாப்புக்காக சில சிறுவர்களை ரயில் நிலையத்திற்கு முன்பாக நிறுத்திவிட்டு திருட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆயுதங்களுடன் ரயில் நிலையத்திற்குள் இறங்கி அங்குள்ள இரும்புக் கேடர்கள் மற்றும் மரப்பல

கைச் சட்டங்களை வாள்களினால் அறுத்து எடுத்து அவற்றை மறைவான ஓர் இடத்தில் குவித்து வைக்கின்றனர். இவ்வாறு தினமும் திருடப்படும் பொருள்களை மாலையானதும் உழவு இயந்திரத்தைக் கொண்டு அங்கிருந்து அகற்றி அவற்றை விற்பனை செய்கின்றனர் எனத் தெரியவருகின்றது. இதனால் அவர்களுக்குப் பெருந்தொகைப் பணம் கிடைப்பதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.ரயில் நிலையப்பகுதி பற்றை மண்டிக்கிடப்பதும் இந்நடவடிக்கைக்கு ஒரு வாய்ப்பாக அமைகின்றது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேவேளை -

சனநடமாட்டம் குறைந்த இப்பிரதேசத்தில் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளும் இடம்பெற்று வருவதாகவும், ரயில் நிலைய வீதியூடாகச் சென்றுவரும் பொதுமக்களை ரயில் நிலையத்தில் மதியவேளையில் அமர்ந்திருக்கும் இளைஞர் கோஷ்டியினர் தகாத வார்த்தைகளால் அழைப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாகத் தடுக்கும்பொருட்டு யாழ்.மாநகர சபையினர் ரயில் நிலையப் பகுதியை முழுமையாகத் துப்புரவு செய்யவேண்டும் எனவும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை - நாட்டில் தற்போது தோன்றியுள்ள சமாதான சூழ்நிலையில் கடந்தகால யுத்தத்தினால் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்ட யாழ்குடாநாடு தற்போது படிப்படியாக மீள்நிர்மாணம் பெற்று நிமிரத் தொடங்குகிறது.

இந்நிலையில் யாழ். குடாநாட்டின் முக்கியத்துவம் மிக்க பழைமைவாய்ந்த ரயில் நிலையம் மட்டும் கவனிப்பாரற்ற நிலையில் இவ்வாறு சூறையாடப்படுவது குறித்து பலரும் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-8-10)

சமஷ்டி அடிப்படையில் தீர்வு

ஒஸ்லோவில் அரசு - புலிகள் இணக்கத்துக்கு வரவேற்பு

கொழும்புமிசெ.8

ஒஸ்லோவில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அரசியல் தீர்வு குறித்து ஏற்பட்டிருக்கும் இணக்கத்தை தலைவர்களும் பிரமுகர்களும் வரவேற்கின்றனர்.

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரான பட்டி வீரக்கோன் அந்த இணக்கத்தை வரவேற்றுக் கூறியதாவது:

புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறும் சமஷ்டி ஆட்சி முறை அதிகாரப் பகிர்வைத்தான் நாம் 2000ஆம் ஆண்டு தீர்வுத் திட்டத்தில் முன்வைத்தோம்.

ஒவ்வொரு இன மக்களும் அவர்களது பிரதேசங்களில் தாங்களாகவே இயங்கக்கூடிய நிலைமையை நாம் வரவேற்கின்றோம். எமது தீர்வுத் திட்டத்தில் இந்த அதிகாரப் பகிர்வு தொடர்பான சகல விடயங்களும் முன்வைக்கப்பட்டன. சமஷ்டி தீர்வு என்பதை எமது மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டுமென்றால் ஒரே நாட்டின் கீழ் அதிகாரப் பகிர்வு என்றே குறிப்பிடவேண்டும். எனவே, நாட்டைப் பிரிக்காமல் வழங்கப்படும் அதிகாரப் பகிர்வை நாம் வரவேற்கின்றோம் எனத் தெரிவித்தார்.

தனியொரு நாட்டுக்கான ஈழக்கோரிக்கையில் இருந்து விடுதலைப் புலிகள் இவ்வாறு சமஷ்டி ஆட்சி முறையை ஏற்கமுன் வந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கப்படவேண்டியதே என்று பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தீவிரவாதிகளாக இருந்த புலிகள், தனி ஈழத்தைக் கைவிட்டு சமஷ்டி முறைக்கு வந்தமை மகிழ்ச்சிக்குரியது. இன்னும் சற்று இறுக்கமாகப் பேச்சு மேற்கொண்டால் அதிலும் சில மாற்றங்கள் கொண்டுவரலாம் என்றார்.

நாட்டைப் பிரிக்காமல், தமிழ் பேசும் மக்களுக்கு தன்னாதிக்க, சுயாட்சி என்பவற்றை வழங்கவேண்டும் என எட்டப்பட்ட முடிவு வரவேற்புக்குரியது என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் இடம் என்ற கோட்பாடு முன்வைக்கப்பட்டது ஒரு நல்ல சகுனம். எவரும் எதிர்பார்க்காமல் திடீரெனப் பேச்சுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் எதிர்க்கட்சிகள் வாயடைத்து நிற்கின்றன.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாட்டை மறக்கவில்லையெனப் பேச்சுகளில் கலந்துகொண்ட புலிகளின் பிரமுகர்கள் தெரிவித்துள்ளார்கள். முஸ்லிம் மக்களையும் அரவணைத்துச் சென்றால்தான் நிரந்தர சமாதானத்தைக் காணமுடியும். சமாதானத்தின் பாதையில் புலிகள் உறுதியாக நிற்பதை அவர்களின் நடவடிக்கைகள் மூலம் உணரக்கூடியதாக உள்ளது - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நாளை

கார்த்திகை 23
திங்கட்கிழமை
(09.12.2002)
திதி : பஞ்சமி
முற்பகல் 9.50 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
முற்பகல் 10.47வரை.
விநாயகர் சஷ்டி விரதம்
சுபநேரம் : 12.18 - 1.48
ராகுகாலம் : 7.48 - 9.18
(பழைய நேரப்படி)

உதய வாக்கு

புகழற்ற வாழ்க்கையை விட மதிப்புள்ள மரணமே சிறந்ததாகும்.

சிறுவர்களை வேலைக்கமர்த்தாதீர்கள்!

'இங்கே அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருப்பது ஆடைகள் மட்டுமல்ல என் எதிர்காலமும் தான்!'

வெளிமிட்டு அனுசரணை SC (UK)

ஓ.... என் அன்பிற்குரிய
பெரியோரே!
உங்களைத்தான்!
பாதணி வேண்டுவதற்காக
கால்களையா விற்கமுடியும்?
உங்களுக்குத் தாகம்தான்,
அதற்காக..... எனது
குருதியை
குடித்துக் கொண்டிருப்பது
குற்றமாகாதா?
சிந்தியுங்கள்!

உங்களுக்கு
காசு தேவை.
அதற்காக ~ என்
கல்வியை விற்பது
விவேக மல்லவே!!
ஒரு நேர உணவிற்காய்
என்
எதிர்காலத்தை இழப்பதென்பது
வினாக்கை ஏற்றிவிட்டு
சுரியனை
எரித்து விடுவது போன்றது!!!

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2261 Ext.274

(சி252187)

சேவை நலன் பாராட்டு

உயர்திரு. அ.மாணிக்கவாசகர்

அதிபர் (S.L.P.S. - I)

யா/தும்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை

பருத்தித்துறை

எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை அகவை அறுபதை அடைந்து ஓய்வுபெறும் திரு. அ.மாணிக்கவாசகர் (அதிபர்) அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சமூகசேவைகள் பலபுரிந்து நோயற்ற வாழ்வுடன் நீண்ட ஆயுளும் பெற்று சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி வாழ்த்துகிறோம்.

- ஆசிரியர்கள் -

யா/தும்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை,
பருத்தித்துறை.

(C/25223)

உங்களை அழைக்கின்றது!

ஐந்து நட்சத்திர மனை

★ வருடத்தின் 365நாள்களும்.....

தினமும் முற்பகல் 11 மணிமுதல் 3.30 மணிவரை உங்களுக்கான சேவையை வழங்குகின்றது

ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா

★ உங்களுக்குத் தேவையான உணவுவகைகளை தாமதமின்றி ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம். ஓடர்களுக்கேற்ப சேவை நேரம் மாற்றப்படும்.

உங்களுக்காக விசேஷ

★ குங்குமப்பூ சிக்கன் புரியாணி உடன்
SPICY CURRY AND GARLIC PICKLE
125 ரூபா மட்டுமே.

ஜெசித்தாரா

★ உணவுப்பொதிகள் நண்பகல் 12 மணிமுதல் 3 மணிவரை சுடச்சுட வழங்கப்படும்.

ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா விருந்தகம்

19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

★ காலதாமதத்தைத் தவிர்க்க நேரகாலத்துடன் ஓடர்களைத் தருக.

(11458)

அன்பளிப்பு! அன்பளிப்பு! அன்பளிப்பு!

எமது வாடிக்கையாளரின் நன்மைகருதி எமது ஸ்தாபனத்தில் மாணவர்களுக்கான நூல்கள், புத்தகங்கள், உபகரணங்கள், காட் வகைகள் மற்றும் கல்வி சம்பந்தமான விளையாட்டுப்பொருள்கள் ஆகியவற்றை 2000/- இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு விசேட அன்பளிப்பாக ஒவ்வொரு 2000/-இற்கும் சைனாவில் (china) இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பாடசாலைப் புத்தகப் பை அன்பளிப்பாக வழங்கப்படும்.

இச்சலுகை கையிருப்பில் உள்ளவரை மட்டுமே.

ஆல் சிலோன் டிஸ்ரிப்பியூட்டஸ்

212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(C/25249)

கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

வெற்றிடங்கள்:- கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கணிசமான வெற்றிடங்கள் உள்ளன.

(1) கல்வித்தகைமை:- க.பொ.த. (சாதாரணதரம்) சித்தி
(2) உயரம்:- 5' 4" (குறையாமல்)
மார்பு:- 32"
வயது:- 20 இல் இருந்து 50 வரை.
(3) நல்ல தேகாரோக்கியமும், நல்ல கண்பார்வையும் இருத்தல்வேண்டும்.

மேற்கூறப்பட்ட தகைமைகள் உடையோர் 08.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குக் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு பிரசன்னமாயிருக்கவும்.

(1) கிராம அதிகாரியின் நற்சான்றிதழ் (06 மாதங்களுக்குட்பட்டது. இல்லாதோர் நேர்முகப்பரீட்சைக்கு பின்னர் கொடுக்க அனுமதிக்கப்படுவர்)
(2) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(3) கல்வித் தராதரம்
(4) தேசிய அடையாள அட்டை
(5) விசேட அடையாள அட்டை

குறிப்பு:- இளைப்பாறிய பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இல. 41, கல்லூரி வீதி, - பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக)

(C-25247)

சமஷ்டித் தீர்வு தொடர்பாக தமிழக அரசியல்வாதிகள்

லண்டன்,டிசெ.8

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சில் சமஷ்டி முறையிலான தீர்வொன்றுக்கு இரு தரப்பும் இணங்கியுள்ளமை குறித்து தமிழகத் தலைவர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பாரதீய ஜனதாக் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் இல. கணேசன் கூறியுள்ளதாவது:-

எந்த ஒரு பகுதியிலும் அமைதி திரும்புவது, போர்நிறுத்தம் ஏற்படுவது, வன்முறை தவிர்ப்பது இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தாயகம் திரும்புவது வரவேற்கத்தக்கதுதான்.

இருந்தாலும் இதேபோன்ற தீர்வை ஏற்கனவே ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம் என்பதே எனது கருத்து. ராஜீவ்காந்தியின் காலத்திலேயே இதேபோன்றதொரு தீர்வுதான் முன்வைக்கப்பட்டது. அதனை அன்று நிராகரித்துவிட்டார்கள்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பான ஒரு வாழ்வு கிடைக்கவேண்டும் என்பதில்தான் இந்திய அரசு அக்கறை கொண்டுள்ளதே தவிர விடுதலைப் புலிகளுக்கு வாழ்வு ஏற்பட வேண்டும் என்பதில் நாம் அக்கறை செலுத்தவில்லை என்றார். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் அவைத் தலைவர் எல்.கணேசன் தெரிவித்ததாவது:-

'இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து ஒரு முடிவை எடுக்கிறார்கள் என்றால் அதனைப் பாராட்டுவதைத் தவிர கருத்துச் சொல்வதற்கு அதில் என்ன இருக்கிறது.

ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் என்று சகல தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். எனவே, அதுகுறித்து இந்திய அரசு தனது கருத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்பதே ம.தி.மு.கவின் கருத்து என்றார் அவர். இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியதாவது:-

தமிழ்மக்களைப் பொறுத்தவரை இந்த இணக்கப்பாடு மூலமாகத் தமக்கு நன்மை கிடைக்கும் என்ற எண்ணம் அவர்களிடம் இல்லை. ஏனென்றால் விடுதலைப் புலிகளுடன் அரசு நேரடியாகச் செய்துள்ள ஒப்பந்தம்.

ஆனால் மக்கள் மற்றும் ஏனைய தமிழ்க்கட்சிகளின் சம்மதத்துடன் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, ஜனநாயக முறைப்படி இந்த ஒப்பந்தம் நடக்கவில்லை. இதனால் நான் இதனை வரவேற்கவில்லை என்றார். (ஒ-4)

விற்பனைக்கு உண்டு

ELF 350 வானின் (BODY) மரப் பொடியும், உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

அண்ணா பாம்
ஸ்ரேசன் றோட்,
இணுவில்.

(C/25286)

இலவச ஆங்கில பாடநெறி
தபால்மூலம்

சரளமாக எழுத, பேச, வாசிக்க 90 நாள்கள் பாடநெறி

Diploma/Basic English

இப்பாடநெறியானது குறுகிய காலத்தில விரிவான ஆங்கில அறிவை வீட்டில் இருந்தவாறே கற்றுக்கொள்ள முடியும். இப்பாடநெறியைக் கற்றுக்கொள்ள வயதுக் கட்டுப்பாடோ ஆங்கில முன்னறிவோ தேவையில்லை.

பாடநெறிக் கட்டணம் இலவசம்
பாடநெறி முடிவில் Diploma in English சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 3/-ரூபா பெறுமதியான (4) நான்கு முத்திரைகள் அனுப்பி பெற்றுக் கொள்க.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O.Box 083 Kandy.
Tel.: 077-802849 (11219)

இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாகப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழில் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் சுலப பரிகாரம்மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

மணிசாமி P.T.R.

யாழ்உல்லாசப் பயணிகள் விடுதி,
இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.
(வியாழக்கிழமைகளில் விடுமுறை). (11488)

மாபெரும் சலுகைத் தள்ளுபடி

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு

மெக்ஸ் புடைவை மாளிகை

நிறுவனத்தாரின் அதிரடி மலிவு விற்பனை 06.12.2002முதல் 31.12.2002வரை

* சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகள் உட்பட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன சாறி வகைகளும் பிளவுஸ் தினிசுகளும்.
* நங்கையர் விரும்பும் ஸ்கேட் அன் பிளவுஸ், புறொக்ஸ், பினபோம், சல்வார்கமிஸ்.
* ஆடவர் விரும்பும் சேட், Tசேட், ஜீன்ஸ், சூட்டிங்.
* சிறுவர், சிறுமியர்களுக்கான நவீன ஆடைத் தெரிவுகளுக்கும் இன்றே நாடுங்கள்:

மெக்ஸ் புடைவை மாளிகை

இல.34, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(11460)

உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்
யாழ்ப்பாணம்.

SRI LANKA INSTITUTE OF TOURISM & HOTEL MANAGEMENT
JAFFNA

பின்வரும் கற்கை நெறிகள் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தால் எதிர்வரும் ஜனவரி 2003 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ளன.

கற்கைநெறிகள்	காலம்	ஆகக்குறைந்த தகைமைகள்
ஹோட்டல் வரவேற்பு (Hotel Reception)	06 மாதங்கள்	ஒரே அமர்வில் G.C.E. (O/L) பாடங்கள் சித்தி (3 திறமைச் சித்திகளுடன் ஆங்கிலம், கணிதம் சித்தியும்)
ஹோட்டல் அறைகள் பராமரிப்பு (Hotel House - Keeping)	06 மாதங்கள்	
கைவினை வரவேற்பு (Craft Course)	03 மாதங்கள்	இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் G.C.E. (O/L) பாடங்கள் சித்தி (3 திறமைச் சித்திகளுடன் ஆங்கிலம் சித்தியும்)
ஹோட்டல் அறைகள் பராமரிப்பு (Craft Course)	03 மாதங்கள்	

▶ வயது எல்லை:- 16.12.2002 அன்று 17-25இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
▶ விண்ணப்பப் படிவங்களை ரூ.50/= செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
▶ ஒவ்வொருவரும் தனிப்பட்ட ஒரு விண்ணப்பப் படிவத்தின் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவுதிகதி 20.12.2002

உப அதிபர்
இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்,
இல.15, மணியம் கட்டடம்,
சிறாம்பியடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P - 021-222 3642

(11452)

புலிகளுடன் மோத நாங்கள் அஞ்சவில்லை டக்ளஸ் தேவானந்தா 'லக்பிம'வுக்கு பேட்டி

நெடுந்தீவில் நிலைமைகள் மோசமாகிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் "லக்பிம" வார இதழ் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலா ளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைப் பேட்டி கண்டது. அந தப் பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

கேள்வி:- தற்போது நெடுந்தீவில் விடுதலைப் புலிகளுக்கும் உங்கள் கட்சியினருக்கும் இடையே பிரச் சினை உருவாகியுள்ளது. இதற்கான காரணம் என்ன?

பதில்:- நாங்கள் 12 ஆண்டுகளாக நெடுந்தீவை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தோம். நெடுந்தீவில் வாழும் அனைத்து மக்களும் எங்களுக்கு ஆதரவானவர்கள். விடுதலைப் புலி கள் அமைப்பிற்குப் பல காலமாக இது பிரச்சனையாக இருந்து வந்துள் ளது. தற்போது அவர்கள் நெடுந் தீவிற்கு வந்து ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைகிறார்கள்.

கேள்வி:- நெடுந்தீவு விடுதலைப் புலிகளுக்கு இவ்வளவிற்கு முக்கி யத்துவம் வாய்ந்ததாக இருப்பதேன்?

பதில்:- விடுதலைப் புலிகள் ஆயு தங்களையும், போதைவஸ்துக்களை யும் பெருமளவில் கொண்டுவருகிறார் கள் என்பது இரகசியமானது அல்ல. எனவே, இந்த நடவடிக்கைகளை மேற் கொள்ள மிகவும் பாதுகாப்பானதும் வசதியானதுமான இடம் தேவை. நெடுந்தீவு இந்தியாவுக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ளதால் நெடுந்தீவில் களஞ்சியம் ஒன்றை அமைத்து அல்லது விடுதலைப் புலி களின் முகாம் ஒன்றை அமைத்து இந்தக் கடத்தல் வியாபாரத்தை வெற்றி கரமாக நடத்தமுடியும். எனவே, நாங் கள் அங்கு இருப்பது அவர்களுக்கு அவ்வாறு செயற்படுவதற்கு அசௌ கரியமாய் இருக்கும். இக்காரணத்தா லேயே எங்களை (அங்கிருந்து) விரட்ட முனைகிறார்கள்.

கேள்வி:- நல்லது, ஜனநாயக முறைப்படி விடுதலைப் புலிகள் அமைப்பு, உங்கள் அமைப்புடன் தோளோடுதோள்நின்று அரசியல் நடவடிக்கைகளை மட்டும் மேற் கொள்ள முன்வந்தால்?

பதில்:- விடுதலைப் புலிகள் இன்று வரை மேற்கொண்ட நடவடிக்கை கள் குறித்து சிந்தித்தால் அவர்கள் ஜனநாயக முறைப்படி செயற்படுவார் கள் எனச் சிந்திக்க முடியாது. அது பாசிசவாத அமைப்பாகும். ஹிட்லர் செயற்பட்டதைப் போலவே செயற்படு கின்றனர்.

கேள்வி:- இருப்பினும் உங்கள் அமைப்பும் சிற்சில சந்தர்ப்பங்களில் ஜனநாயக விதிமுறைகளை மீறிச் செயற்படுவதாக விடுதலைப் புலிகள் அமைப்பு கூறுகிறதே?

பதில்:- உடன்பாடு மேற்கொள்ளப் பட்ட பின்னர் எங்களுக்கும் எமது பாதுகாப்புக் கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால், நாங்கள் அவர் கள் கூறுவதைப்போல் ஜனநாயக விதிமுறைகளை மீறிச்செயற்பட வில்லை. நாங்கள் நெடுந்தீவுக்கு சென்றபோது அங்கிருந்த மக்கள் பட்டினியால் சாகும் அளவிற்கு கவ னிப்பாரின்றி இருந்தனர். எனவே, நாங்கள் அங்கு சென்று அவர்களைப் பற்றி விசாரித்தறிந்து அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தோம். வடக்கி லுள்ள வேறெந்த அரசியல் கட்சி யும் அவர்கள் குறித்து அக்கறை எடுக்கவில்லை. எனவே, அவ்வாறான நிலைமையில் நாங்கள் நெடுந்தீவு மக்களுக்காக ஒரு முடிவுக்கு வந்தோம். விடுதலைப் புலிகள் அதனை எதிர்க்கின்றனர். எனவே, அவர்கள் எங்களுக்கு எதிராக - ஜனநாயக நீரோட்டத்திற்கு எதிராக - செயற்பட முனைகின்றனர்.

கேள்வி:- முடியுமாயின் விடு தலைப் புலிகள் நெடுந்தீவில் அரசி யல் பணிமனை ஒன்றைத் திறந்தால்?

பதில்:- நேர்மையுடன் அவர்கள் ஜனநாயக விதிமுறைகளின்படி செயற் படின் அது நியாயமானது என்பதை நாம் ஏற்றுக்கொள்வோம். அதேபோல அரசியல் ரீதியாக அவர்களுடன் மோத வும் நாங்கள் அஞ்சவில்லை. அதற் கும் நாங்கள் தயார்.

இருப்பினும், அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்ட யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கமைய நாங்கள் எங் களிடம் இருந்த ஆயுதங்கள் அனைத் தையும் கையளித்துள்ள நிலையில் விடுதலைப் புலிகள் அதைச் செய்ய வில்லை. இங்குதான் பிரச்சினை உள்ளது. எனவே, அவர்களுக்கு ஜன நாயக விதிமுறைகளை மீறிச் செயற் படமுடிகிறது. எனவே, நாங்கள் அந்த நிலைமைக்கு முகங்கொடுக்கவும் தயாராயுள்ளோம்.

கேள்வி:- உங்கள் கட்சிக்கு வட பகுதியில் ஆதரவு இல்லை என விடுத லைப் புலிகள் அமைப்பினர் தெரிவிக் கின்றனர். மக்கள் உங்களுடன் இல்லை என்கின்றனர்?

பதில்:- நான் இதற்கு சிறிய உதாரணம் ஒன்றைக் கூறுகிறேன். வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நீதி மன்றத்தால் 200 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதே. அதன் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப் பினர் அதை எதிர்த்து பெரியளவில் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த முற்பட்டனர். இருப்பினும், பெருந் தொகையான மக்கள் அதில் பங்கு பற்றினரா? இல்லையே.... வடமாகா ணம் முழுவதுமாக ஆகக்கூடியது 3 ஆயிரம் பேர் மட்டில் கலந்துகொண டிருப்பர். அவ்வாறு பங்குபற்றியோ ரில் பாடசாலை மாணவ மாணவியர் களும் இருந்தனர். கட்டாயத்தின் பேரிலேயே அவர்கள் அதில் ஈடு படுத்தப்பட்டனர்.

கேள்வி:- தமிழ் மக்களுக்கு பணி யாற்றுவதே அனைத்துத் தமிழ்க் கட்சிகளினதும் குறிக்கோளாகும் அவ் வாறாயின் தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை காணப்படவில்லை. ஏன் பிரிந்து செயற்படுகின்றனர்?

பதில்:- இந்தக் கட்சிகள் அனைத் தும் ஆரம்பத்தில் நீங்கள் கூறிய குறிக் கோளுடன்தான் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், செயலில் இறங்கியபோது அவர்களது திசைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. கருத்துக்களில் முரண் பாடுகள் ஏற்பட்டன. எண்ணங்கள் பொருந்தாதையாக அமைந்தன. சிலரின் செயற்பாடுகள் ஜனநாயக விதிமுறை களை மீறின. இவையே காரணங்கள்.

தமிழ்: கஜனி

கேள்வி:- நெடுந்தீவானது ஈ.பி.டி.பி. அமைப்பைப் பொறுத்தவரை ஏன் இவ்வளவிற்கு முக்கியத்துவம் பெறு கிறது?

பதில்:- நெடுந்தீவு மக்களுக்கும் எமக்குமுள்ள தொடர்பானது விரலுக் கும் நகத்திற்குமுள்ள தொடர்பை ஒத் ததாகும். பலகாலமாக அவர்களுடன் நாம் குடும்பம்போல் வாழ்ந்துள்ளோம். அதுபற்றி விடுதலைப் புலிகளும் அறி வார்கள்.

கேள்வி:- டிசெம்பர் 31 ஆம் திக திக்கு முன்னர் நெடுந்தீவில் இருந்து வெளியேறவேண்டும் என விடுதலைப் புலிகள் உங்கள் அமைப்பிற்கு கட் டளை பிறப்பித்துள்ளனர். இந்த அச் சுறுத்தலை நீங்கள் எவ்வகையில் ஏற்கிறீர்கள்?

பதில்:- விடுதலைப் புலிகள் பல காலமாக எமக்கு இந்த அழுத்தத் தைப் பிரயோகித்து வருகின்றனர். அவர்கள் இந்தக் காலகட்டத்தில் எமக்கு ஆயுதங்களைக் காட்டிக்கூட எச்சரித் தனர். இருப்பினும், இந்த அச்சுறுத் தல்களுக்கு நாங்கள் பயப்படவில்லை.

மேலும் நெடுந்தீவில் மாத்திர மன்றி வடக்கு - கிழக்கு மாகாணங் களிலும்கூட புலிகளுக்கு பலமில்லை.

கடந்த தேர்தல் முடிவுகளை எடுத் துப் பார்த்தால் அது நன்கு புரியும். வடக்கிலுள்ள புலிகள் ஆதரவு அர சியல் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கூட்டமைப்பு அமைத்து தேர்தலில் போட்டியிட்டன. முடிவில் கள்ள வாக்குகளைக்கூட போட்ட னர். இருப்பினும், அவர்களுக்கு ஒரு லட்சத்து 2 ஆயிரம் வாக்குகள் மாத் திரமே கிடைத்தன. நாங்கள் தனி யாகப் போட்டியிட்டு 57 ஆயிரம் வாக் குகளைப் பெற்றோம். எனவே, வடபகுதி மக்கள் யாரை விரும்புகின்றனர்? எங் களுக்கு விடுதலைப் புலிகளின் அச் சுறுத்தல்கள் இருந்திராவிடின் இதை விட நல்ல பெறுபேற்றைப் பெற்றிருப் போம்.

எவ்வாறாயினும், புலிகளுக்கு ஆதரவான இந்தத் தமிழ்க் கட்சிகள் தனித்துப் போட்டியிட்டிருப்பின் ஓர் ஆசனத்தைக்கூடப் பெற்றிருக்கமாட்டா. கள்ள வாக்குகளைப் போடாதிருப்பின் அக்கட்சிகளுக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைத்திருக்காது.

கேள்வி:- விடுதலைப் புலிகளைப் போலவே தமிழ்க் கட்சிகளின் கூட்ட மைப்பும் ஈ.பி.டி.பியினர் தற்போதும் ஆயுதங்களைப் பயன்படுத்துகின்ற னர் எனக் குற்றம் சுமத்துகின்றனரே?

பதில்:- கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறிவது நல்லதல்ல. விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்கள் இல்லையா? தமிழர் கூட்டமைப்பின ரிடம் ஆயுதங்கள் இல்லையா? இருக் கின்றனவே.

எங்களிடமும் ஆயுதங்கள் உள் ளன. ஆனால், அவை சட்டவிரோத மான ஆயுதங்கள் அல்ல. எங்களுக்கு எமது பாதுகாப்பிற்கென அரசால் ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கேள்வி:- உங்களுக்கும் விடு தலைப் புலிகளுக்குமிடையே உரு வாகியுள்ள பிரச்சினையில் அரசு செயற்படும் விதம் குறித்து உங்கள் கட்சி திருப்தியடைகிறதா?

பதில்:- பூரணமாகத் திருப்திகொள்ள முடியாது. இருப்பினும், ஜனாதிபதியும் பிரதமரும் இந்தப் பிரச்சினையைப் புரிந்து கொண்டுள்ளனர். இவ்விட யத்தில் அரசு இருதரப்பினர் குறித் தும் சிந்தித்துச் செயற்படவேண்டி யுள்ளது.

கேள்வி:- சமாதான நடவடிக்கை கள் தொடர்பாக அரசு மேற்கொள்ளும் செயற்பாடுகள் குறித்து நீங்கள்

(10ஆம்பக்கம் பார்க்க)

உலக நாடுகளின் தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமைக்காகக் குரல்

அமெரிக்காவின் கூட்டாட்சித் திட்டம் இதற்கு ஒரு முன்னோடி

பொருளியலின் அடித்தளம்தான் மொழி, இலக்கியம், கலை, மெய்யி யல், பண்பாடு என்பவற்றைத் தீர்மா னிக்கிறது. தமிழ்மொழி உயர் தனிச் செம்மொழிகளில் ஒன்றாகும். மூவா யிரம் ஆண்டுகளாக ஆண்ட இலக் கிய வளங்கொண்ட இம்மொழி இன் றும் உயிர்ப்புடன் இயங்கிவருகிறது.

ஒரு தேசிய இனத்திற்குப் பொது வான மொழி, தொடர்ச்சியான ஆட்சி எல்லை, பொருளியல் வாழ்வு, பொதுப் பண்பாட்டியல், வெளிப்படும் உளவியல் என்பன இருத்தல்வேண்டும்.

இந்த நான்கு சிறப்புக் கூறுகளைக் கொண்ட ஒரு மொழி தேசிய இனத் தைக் குறிப்புணர்த்தக்கூடிய "முதல் நிலைக் கூறுகள்" அல்லது பண்புக் கூறுகள் எனலாம். தமிழ்மொழி பண் பாடு, வரலாறு, மரபுகள் ஆகிய பண் புக் கூறுகளைக் கொண்டுள்ளது.

ஒரு மக்கள் சமுதாயம் முதல் நிலைப் பண்புக்கூறுகளைத் தன்ன கத்தே பெற்றிருந்தபோதும், தாம் தேசிய இனமாக அமையவேண்டும் என்பது உறுதிப்பாடு ஆகும். ஒரு சமு தாயம் மக்கள் ஆட்சியின் மாண்பு கள், உரிமை மேம்பாடுகள், பொருளி யல் - சமுதாய சமானியம் ஆகிய வற்றை பெறவேண்டும் என்றே பேருக் கம், இறையாண்மை கொண்ட நாட் டரசை அமைத்துக் கொள்ளவேண் டும் என்ற குறிக்கோள், திட்டம், இன ஒற்றுமையை பேணிக்காக்கும் நடை முறைச் செயற்றிறன் ஆகிய சிறப் புக்களைப்பெற்று இயங்கினால் அச் சமுதாயம் தேசிய இனமாக வளரும். இச்சிறப்புக் கூறுகளை "சார்நிலை ஆக்கக்கூறுகள்" எனலாம்.

இவ்வாறு தெளிவுபடுத்தும் தேசிய இனத்தோற்றம், வளர்ச்சி பற்றிய வர லாறு, கருத்தியல், கோட்பாடுகளை ஆராய்வது பொருத்தமானதும், "தமிழ்த் தேசியம்பற்றி விளங்கிக் கொள்ளவும் உதவுகின்றது. தேசியம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும்போது உலக நாடுகளின் மக்கள் தேசியம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிய வேண்டியது அத்தியாவசியமாகும்.

பிரான்ஸ் நாட்டு தேசியம் பற்றிய உணர்வு 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் உருவானது. 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் மதத் தலைமையே ஆட்சியை நடத் தியது. இந்நிலையில் பிரான்ஸ் மக் களை மற்ற மக்களிடமிருந்து பிரித்து தனியடையாளம் காண்பது பிரான்ஸ் தேசியம் என்றழைக்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டில் வால்டேர், உருசோ ஆகியோர் "சுதந் திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற மக்கள் ஆட்சிக் கோட்பாடுகளை மக்கள் மன்றத்தில் முன்வைத்தனர்.

"நாடு எப்படி மக்களைக் குறிக் கும்" என்றார் உருசோ. கி.பி.1789இல் பிரான்ஸுப் புரட்சி முடியாட்சியை அகற் றியது. அப்புரட்சி உலகம் முழுவதும் தேசியத்தின் பேராற்றலுக்கு சான்று பகர்ந்தது. பிரான்ஸ் நாட்டின் இறை யாண்மை என்ற அனைத்து ஆட்சிய திகாரங்களும் மக்களிடம் போய்ச் சேர்ந்தன. இறையாண்மை பெற்ற நாட்டு மக்களே "தேசிய இனத்தவர்" எனக்கருதப்பட்டனர்.

இத்தாலியில் ரோமானியம், டியூட்டன் ,கிரேக்கர், அரேபியர் போன்ற மரபினங்கள் கொண்ட கலப்பு மக்கள் இனமே இத்தாலியர் ஆவர். இத்தாலி யில் நாட்டுத் தேசியம் மக்களுக்கு ஊட்டப்பட்டது. தேசிய இனங்கள் தத்தம் நாட்டரசுகளை அமைத்துக் கொண்டு அவற்றை இணைத்தொரு கூட்டாற்சியாகவும் அமையமுடியும் என்பதற்கு முதல் முன்னோடியாக விளங்குவதே அமெரிக்க ஐக்கிய நாடுகளாகும்.

சமூக, வரலாற்று அடிப்படையில் நிலவுடைமை அழிந்து முதலாளியம் தோன்றி, வளர்ச்சிபெறும் நிலையும் ஒரு மொழி, ஓர் இனம், ஒருநாடு என்ற கோட்பாடு 19ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியிலே உருவாக்கம் பெற்றது.

தனிமொழி, இன இயக்கங்களாலும் விடுதலை வேண்டுகிற அமைப்பு களாலும் அம்மக்களிடையே மொழிப் பெருமை, இலக்கியங்கள், பண்டைய பண்பாட்டுநிலை, வரலாற்று வெற்றிகள் போன்றவை பரப்பீடு செய்யப்பட்டும் எழுச்சி வடிவம் தரப்படும். "தேசியம்" (நாட்டுப் பற்றுறுதி) வளர்க்கப்பட்டது.

ஐரோப்பாவில் இருமொழிகள் அல்லது பலமொழிகள் பேசும் பகுதி களைக் கொண்ட நாடுகளில் மொழி அடிப்படையில் "இனம்" என்ற கருத்து தீவிரமடைந்தது. தனிநாடுகளாக அமைக்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சி களும் நடைபெற்றன. பெல்ஜியமும், எஸ்பெயினும் இதற்கு குறிப்பிடத்தக்க சான்றுகளாகும்.

வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய காலத்தில் இருந்தே குறிப்பிட்ட கலா சாரத்தையும் தனகத்தே கொண்டு விளங்கிய ஐப்பான் நவீன காலத் திலும் வரலாற்றுத் தொடர்பு மாறா மல் தேசிய நாடாகத் திகழ்கிறது. சீனா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் அந்தந்த நாடுகளின் மொழி வாரிச் சமுதாயங்களை வழி உரிமை யாக்கியதால் தேசிய நாடுகள் அமை வது எளிதாயிற்று. இதே போன்றதே வக்க மொழித் தேசிய அடிப்படையில் எழுந்த இஸ்ரேலின் இறுதி விளைவும்.

தேசிய இனங்கள் நாடுக்கு நாடு வேறுபடுகின்ற தனித்தன்மைகளை வைத்து ஒவ்வொரு நாட்டிலும் புரட்சி உருவாகும் என்ற கோட்பாட்டை மாவீரன் லெனின் மையமாக வைத்து சோவியத் புரட்சியை நடத்தினார். அதுவே 917ஆம் ஆண்டின் வரலாற் றுப்புகழ்பெற்ற வரலாற்றை மாற்றிய மைத்தநோடு சுயநிர்ணய உரிமையை உலகெங்கும் ஏற்றுக்கொள்ளச் செய்தது.

"ஓரினம், ஒருநாடு, சுயநிர்ணய உரிமைக் கொள்கை ஆகியன உல களாவிய நடைமுறைக் கொள்கை யாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக பல குடியேற்ற நாடுகள் விடுதலை அடைந்தன. ஓரினம் என் பது மொழித்தேசிய இனத்தை மட் டுமே கட்டுவதாக பொருள் தரப்பட் டது. சார்நிலை ஆக்கக் கூறுகளால் தேசிய இனத்தன்மையைப் பெற்று தனி நிலப்பகுதிக்குள் வாழ்வதாகும்.

பொன் சக்திவேல்

ஓரினம் என்பது தற்போதைய நிலை யில் மொழி - இன - பண்பாட்டு வரை யறையைக் கடந்த, புதிய பரிமாணங் களைக் கொண்ட மக்கள் சமுதாயங் களையும் குறிக்கக்கூடிய விரிவாக் கத்தைப் பெற்றுள்ளது.

வளமார்ந்த தனிமொழிகள், வரை யறுத்த தாயகங்கள், நெடியவரலாறு கள், அவற்றால் வடிவமைக்கப்பட்ட இனக்கூறுகள், பண்பாடுகள், தனிச் சமுதாய அமைவுகளின் சிறப்பியல்பு களின் கூட்டுவிளைவாக தேசிய இனங் களிடையே தேசிய உணர்வுகளை யும், இனக்கருத்துக்களையும் வரை யறுத்துள்ளன. நாட்டு மக்களின் பொதுமொழி, இலக்கியம், ஒத்தமரபு கள், நெடிய வரலாறு, பொருளியல் நிலை, வாழ்வியல்முறை, பொதுப் பண்பாடு, இன உணர்வு போன்றவை சீர்பெறவேண்டியது முக்கியம். ★

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

லம்ரெட்டா (இத்தாலியன்) ரக எஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு: க.சோமசுந்தரம், 50/6, செட்டித்தெரு, நல்லூர். (11228)

Sony 21", 20" T.V.களும் (பல மொடல்களில்), பனசோனிக் டெக்கும், பேர்ஜோ 404, Fiat 1100 காரும் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.மகேஸ்வரன், கே.கே.எஸ். வீதி (பாஸ்கரன் பூங்கா எதிரில்), மல்லாகம். (14111)

நல்ல நிலையில் உள்ள லுமாலா MOUNTAIN (மவுண்டின்) துவிச் சக்கர வண்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.86, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 3818. (11484)

ஒருவயது நிரம்பிய தூய வெண்ணிற சடைநாய் (JAPANESE SPIZH) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.124, கோயில் வீதி (I.C.R.C. Office இற்கு அருகில்), யாழ்ப்பாணம். (11494)

ஒரிஜினல் Sony T.V.2060 20" உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மைவந்தரலிங்கம், 'அம்பிகை வாசல்', 42, விபுலாந்தர் வீதி, புங்கன்குளம், அரியாலை, யாழ்ப்பாணம். (11510)

நல்ல நிலையிலுள்ள CHALY மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.V.கந்தசாமி, இல.70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.2225401. (11478)

Sony 21", 19", National 21" - 14" - 18 T.V.க்கள் Sony 2020 Made in Japan, Sony Fh 3,7,10 ரேடியோக்கள் Panasonic, National 300 டெக்குகள், சோளர்பனல் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, எஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (11466)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். Electronic நிறுவை. தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11227)

கார் விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பில் இருக்கும் 7சீரி-இலக்கமுடைய மொரிஸ் மினா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.வின்சன், 17/2 A, புனித அன்னாள் ஒழுங்கை, சுண்டுக்குளி.(11403)

விடும் காணியும் விற்பனைக்கு

31/2 பரப்புக் காணியில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும் 21/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 193, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.T.P.:01728912 (11487)

நான்கு பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. வீட்டின் தளத்துக்கு ரெராசோ போடப்பட்டுள்ளது. இன்னுமொரு வீடு கட்டுவதற்கான இடமும் உண்டு. தொடர்பு: K.ரவீந்திரன், 221/1, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (11327)

பருத்தித்துறை, வியாபாரி மூலையில் தரை வசதிகளுமுள்ள இடத்தில் அமைந்துள்ள 4 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.போகராசா, கந்தசாமி கோயிலடி, நீர்வேலி. (11341)

தவறிவிட்டது

தாவடிச் சந்திக்கும் பொற்பதி வீதிக்கும் இடையில் வீசேமான கடதாசி அட்டைகளும் ஓர் ஓவியமும் அடங்கிய சுருள் (05.12.2002) வியாழக்கிழமை இரவு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சனாதனன் இல.92, பலாலி வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (11500)

383/26, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, ஆனைப்பந்தியைச் சேர்ந்த க.கோபாலகிருஷ்ணனின் கைப்பை, தே.அ.அ.(இல.731464138V), வி.சே.அ.(இல.0902016307), விற்பனைச் சிட்டைகள், காசோலை, பணம் என்பவற்றுடன் 30-11-2002 அன்று மின்சார நிலைய வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி: 222 3276. (11528)

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மூலநட்சத்திரம், 31 வயதுடைய, நிரந்தர அரச பணியாற்றும், கைவிசோன மணமகனுக்கு தமையன தகுந்த மணமகளை எதிர்பார்கின்றார். தொடர்பு: இராசநாதன் சிறீதரன், ஊரெழு வடக்கு, சுன்னாகம்.(11021)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 73ஆம் ஆண்டு, கேட்டை நட்சத்திரமுடைய, செவ்வாய்க்குற்றமற்ற, லண்டனில் நிரந்தர வதிவுரிமையுடைய மணமகனுக்கு சிவந்த, ஆங்கில அறிவுடைய பெண் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: இல.46/2, நமணி மாவத்தை, நீர்கொழும்பு. (சி-25292)

ஆங்கில வகுப்புகள்

ஆண்டு 6-13 வரையான மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். ஆரம்பம்: 10-12-2002. தொடர்பு: நாகேந்திரம், 34/4, செட்டித தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.(11374)

இன்ரநெற்போன் வசதி

யாழ்ப்பாண தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர்களே! இன்ரநெற் (Internet) போன் பெறவிரும்புவோர் எம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். தொலைபேசி இல.01-719425. (11346)

கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் குறைந்த விலையிலும் அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகளும் 12-12-2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10753)

வீடு தேவை

நல்லூர் கோயில் சுற்று வட்டாரத்தில் வீடு தேவை. சகல வசதிகளுடன் விற்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும்: 2B1/2, 40th ஒழுங்கை வெள்ளவத்தை T.P.: 01 559704 (11483)

தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதிக்கருகில் 4 அல்லது 5 பரப்புக் காணி உடன் தேவை. விள:இல.1716, மே/பா உதயன். (11509)

விற்பனைக்கு

S(SVH) ரக வீடியோக்கமரா விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
செல்வரட்ணம் (றபூ)
கஜன் பந்தல்,
உரும்பிராய் மேற்கு.
(11525)

விற்பனைக்கு

மோட்டறோலா தொலைபேசி மற்றும் 3பேஸ் மோட்டர்கள் (3, 6, 10, 13 கோஸ் பவர்) விற்பனைக்குண்டு.
தொடர்பு:
சி.குணம்
மானிப்பாய் வீதி, தாவடி.
(11523)

யாழ். கல்வி நிலையம்

மாவிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

2003 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்தின்படி சீங்கள மொழி சேர்க்கப்பட்டிருப்பதால் முதன் முதலில் எமது கல்வி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அனுமதி வரையறுக்கப்பட்டவை.

ஆரம்பம்: 09.12.2002 1.30p.m.

சீங்களம்
By.லீலாக்கிருஷ்ணன்
(11529)

NEW SCIENCE COLLEGE

PHYSICS

புதிய பிரிவு 2003 BATCH

MODEL TEST PAPER CLASS

MODEL - I EXAM PAPER

ஆரம்பம்: Monday 10.00 - 12.00

By: R.குகன்

(11512)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மழலையாக
28 - 06 - 1972

மாவிரனாக
04 - 12 - 1997

லெப்.இசையழகன்

(மகாலிங்கம் கஜேந்திரன்)

திதி:08.12.2002 (பஞ்சமி)

சந்ததியின் வாழ்விற்காய்
தம்முயிரை ஈந்தவனே!
தரணியிலே தமிழனைத்
தலைநிமிர வைத்தவனே!
தலைவன் வழி நின்று
சமர் பல புரிந்தீர் - இறுதியில்
மன்ன குளத்தினிலே எதிரி
மறக்காத அடி கொடுத்து
மண்ணிற்காய் மடிந்த
மாவீரர் வரிசையில்
உன்னையும் இணைத்து
உன் பணியை முடித்து வைத்தாய்.
நிச்சயமாய் உன் கனவு பலிக்கும்
நிம்மதியாய் நீ உறங்கு!

தகவல்:
யாழ்ப்பாணம். (11516) மகாலிங்கம் குடும்பத்தினர்.

A COLOMBO BASED REPUTED COMPANY SEEKS

i. Project Engineer

On contract basis for A-9 Road construction responsible for all Engineering matters to the clients and the consultants.

Preference will be given to those having experience in RDD or RDA. Selected candidate will be given good remuneration package, which is negotiable.

ii. Technical Officers

On contract basis for A-9 Road construction. Salary negotiable.

Apply before 13-12-2002
Ad.No.: 1717,
C/o. Uthayan.

(11517) (11517)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி கிருத்திய அழைப்பும்

அமரர்

நல்லதம்பி கனகசபை

(ஓய்வுபெற்ற இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் காசாளர்)

அன்னை மடியில்	ஆண்டவன் அடியில்
26-03-1929	09-11-2002

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (09.12.2002) திங்கட்கிழமை காலை நுணுவில் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் தொலைபேசி, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கட்டைவேலி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (11524)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மரண அறிவித்தல்

தோப்பு அச்சுவேலி

கதிரேசு சுப்பிரமணியம்

(Retd. Railway Head Guard)

தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட க.சுப்பிரமணியம் அவர்கள் 05.12.2002 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு - தங்கம் அவர்களின் அன்பு மகனும் புவனேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் கணேசதாஸ் (ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), சுகந்தினி (U.S.A.), சிவதாசன் (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் பவானி (ஆசிரியை, இரத்மலானை இந்துக் கல்லூரி), Dr.நந்தகுமார் (U.S.A.), கார்த்திகாயினி (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயகிருஷ்ணா, ஹரிகிருஷ்ணா, நீலகண்டன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (07.12.2002) சனிக்கிழமை காலை 9மணிக்கு பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனத்துக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
No.402/3, Rudra Mawatha, Wellawatte. T.P.: 553395. (சி-25293) கணேசதாஸ் (மகன்).

அமைப்பாளர் பதவியிலிருந்து சுபைர்தீனை நீக்கத் தீர்மானம்

கொழும்பு,டிசெ.8

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து எஸ்.சுபைர்தீனை உடனடியாக நீக்கவேண்டுமென கம்பஹா மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் மௌலவி, எம்.எல். எம்.ஸாபி, இது தொடர்பாக விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீல.மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் சமாதானப் பேச்சுக்களுக்காக ஒஸ்லோ செல்லும்வரை காத்திருந்து, கட்சித் தலைமைத்துவத்திலிருந்து அவரைக் கவிழ்ப்பதன் மூலம் கட்சிக்குள் உட்பூசலை ஏற்படுத்தவும் சமாதான முயற்சிகளைக் கவிழ்த்து, நாட்டை மீண்டும் யுத்தத்தை நோக்கி இட்டுச் செல்லவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்குத் துணைபோன சுபைர்தீன் மீது கம்பஹா மாவட்ட ஸ்ரீல.மு.கா. ஆதரவாளர்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் கட்சித் தலைமையகத்தில் கூடிய கம்பஹா மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுக் கூட்டத்தில் மேற்படி சதி தொடர்பாகக் கடுமையான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. தனக்குத் தரப்பட்டிருந்த மாவட்ட அமைப்பாளர் பதவியைக்கூட சரிவரச் செய்யத் திராணியற்று, கம்பஹா மாவட்டத்தில் கட்சியின் செயற்பாட்டை மிக மோசமான நிலைக்கு இட்டுச்சென்ற அல்ஹாஜ் சுபைர்தீன், கட்சியின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது கேலிக்கிடமான ஒன்று என அங்கு பலர் கருத்துத் தெரிவித்தனர். அக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

★ கம்பஹா மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் பதவியில் இருந்து அல்ஹாஜ் சுபைர்தீன் பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் எனக் கட்சித் தலைமையைக் கோருதல்.

★ அல்ஹாஜ் சுபைர்தீனைக் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கம் செய்யக் கோருதல்.

★ அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.

ஆகிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் எச்சரிக்கை

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் சங்கம் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடங்கிய மகஜர் ஒன்றை அமைச்சர் கரு ஜெயசூரியவிடம் கையளித்துள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

14ஆயிரத்து 500 இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், வரி அறவீடு அதிகரிக்கப்பட்டமை போன்ற பிரச்சினைகள் குறித்து மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை தவிர 2000 ஆம் ஆண்டு முதல் ஊழியர்களுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட வேதன உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை, ஊழியர்களுக்கான பதவிஉயர்வுகள் வழங்கப்படவில்லை போன்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுளளன.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தாம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப் போவதாக மின்சாரசபை ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சாத்வீகமாகப் போராடிய மக்கள் மீது படையினர் மிலேச்சத்தனமாகத் தாக்கு!

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் மகஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.8

ஈ.பி.டி.பி. முகாம்கள் முன்பாக சாத்வீக வழியில் ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள்மீது படையினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டிக்கிறோம் என்று யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு சமர்ப்பித்த மகஜரிலேயே மேற்கண்டவாறு அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவைவிட்டு ஈ.பி.டி.பி. உறுப்பினரை வெளியேறுமாறு கோரி கடந்த 20 நாள்களுக்கும் மேலாக அஹிம்சை வழியில் போராடிவரும் நெடுந்தீவு மக்களின் போராட்டத்திற்கு மானசீக ஆதரவு தெரிவித்தும் அனைத்து முகாம்களிலிருந்தும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை வெளியேறுமாறு கோரியும் யாழ்மாவட்டத்திலுள்ள அந்த அமைப்பின் முகாம்கள் முன்பாகத் தமது எதிர்ப்பைக் காண்பித்து சாத்வீக முறையில் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டது மாத்திரமன்றி அச்சுறுத்தியும் உள்ளதோடு அஹிம்சைப் போராட்டத்திற்கு இடையூறு விளைவித்தமை ஈனச்செயலாகும்.

தற்போது நிலவும் சுமுகமான சூழ்நிலையில் - மக்கள் நிம்மதியாக வாழ்வியலைத் தொடங்கியிருக்கும் இவ்வேளையில் - சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் ஆயுதப் படையினரும் தேசவிரோதக் கும்பலான ஈ.பி.டி.பியினரும் மேற்கொண்டு வரும் அராஜகங்கள் சமாதானத்தை வேரோடு சாய்த்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

எமது மக்கள் பயம், அச்சுறுத்தல் இன்றி நிம்மதியான வாழ்வைத் தொடர மேலும் இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்கக்கூடிய புறநிலைகளை தோற்றுவிப்பது சமாதானத்தை வலுப்படுத்தும். ஆயுதப் படையினரும் தேசவிரோதக கும்பலான ஈ.பி.டி.பியினரும் ஈடுபட்டு வரும் அடாவடித்தனங்கள் தொடருமானால் நாடு தழுவிய மக்கள் எழுச்சியும், போராட்டங்களும் தவிர்க்க முடியாததென்பது உண்மை நிலையாகும்.

இவ்விடயம் பற்றி யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியமாகிய நாமும் மற்றும் பல பொது அமைப்புகளும் எழுத்துமூலமாக தங்களைக் கோரியிருந்தும் நீதியான தீர்வு கிடைக்கவில்லை என்பது குறித்து மிகுந்த விசனமடைகின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் முக்கிய பணி தங்களைச் சார்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இதனைத் தங்கள் மேலான கவனத்துக்குத் தருகிறோம்.

இவ்விடயத்தில் விரைவான நடவடிக்கை எடுத்து பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

(ஒ-3)

அளவெட்டிப் பகுதிக்கு 24 மணி நேரம் மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (ஐ-3)

மீளக்குடியமர அனுமதிக்குமாறு உதயபுரம் மக்கள் கோரிக்கை

குருநகர்,டிசெ.8

உதயபுரம், மணியம்தோட்டம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மைத் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கும்படி கோரி நல்லூர் பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இம்மஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உதயபுரம், மணியம்தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களாகிய நாம், 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வன்னிக்குச் சென்று குடியமர்ந்து பல இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தோம். ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் தரைப்பாதையூடாக எமது பகுதியில் குடியமரும் நோக்குடன் நாம் யாழ்ப்பாணம் திரும்பி வந்தோம்.

ஆனால், எமது சொந்த இடங்களில் குடியமர இராணுவம் அனுமதிக்காததனால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் தற்காலிகமாக பிறருடைய வீடுகளில் வாழ்ந்து வருகிறோம். ஆனால், தற்போது வீட்டு உரிமையாளர்கள் எம்மை வெளியேறுமாறு கோரியுள்ளார்கள்.

ஆகவே, படையினரை வெளியேற்றி கண்ணிவெடி, மிதிவெடிகளை உரியவர்களைக் கொண்டு அகற்றி நாம் நமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்குமாறு கோருகிறோம் - என்றுள்ளது.

(ஒ-51)

அரசு ஓராண்டு காலப்பகுதிக்குள் வெற்றி இலக்கை தாண்டியுள்ளது!

வர்த்தக சபை தெரிவிப்பு

அரசு தனது ஓராண்டு காலப் பதவியில் சமாதான முயற்சிகளுக்கான வெற்றி இலக்கைத் தாண்டியிருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும் என இலங்கை வர்த்தக சபை தெரிவித்தது.

கடந்த ஆண்டு காலத்திலும் பார்க்க இந்த ஆண்டு பாரிய பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பணவீக்கம் 80 சதவீதமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ரூபாவின் ஸ்திரத்தன்மை, வட்டிவீதக் குறைப்பு போன்றவை இந்த அபிவிருத்தியைப் புலப்படுத்துவதாக மதிப்பீடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த உள்ளூர் உற்பத்தியில் வடக்கில் மட்டும் மூன்று சதவீதமாக இருந்துள்ளமை பொருளாதார வளர்ச்சியின் ஒரு மைல்கல் ஆகும். கடந்த ஓராண்டு கால வளர்ச்சி, கூடுதலான சேமிப்பு, வெளிநாட்டு முதலீடு, உற்பத்தி மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றிற்கு அடித்தளம் இட்டுள்ளது.

இதன்மூலம் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியகூறுகள் காணப்படுகின்றன. அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் துறைத் திருத்தங்கள் குறுகிய கால கஷ்டங்களை ஏற்படுத்தினாலும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சமூகப் பாதுகாப்பைத் தரும் என வர்த்தகசபை தெரிவித்துள்ளது.

சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்

இன்று இவ்வுலகம் பல்வேறுவிதமான பிரச்சினைகளுக்கு ஆளாகியிருந்தாலும் ஒவ்வொருவருடைய உளத்திலும் உதட்டிலும் சமாதானத்தை நோக்கிய எதிர்பார்ப்பே காணப்படுகின்றது. முகவரி இழந்து, முகங்களை மறைத்து அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு சமாதானச் செய்தி கிட்டுமா? ஆம். இறைவாக்கினர் இசையாஸின் உறுதி தரும் வார்த்தைகள் நொந்துபோன உள்ளங்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

"உங்கள் கண்காணியாகச் சமாதானத்தையும், உங்களை வேலை வாங்குமாறு நேர்மையையும் நியமிப்பேன். உன் நாட்டின் வன்முறை பற்றியும், உன் எல்லைப் பகுதிகளில் பாழாக்கலும், அழித்தலும் பற்றியும் இனி எந்தப் பேச்சும் எழாது. உன் மதில்களை 'விடுதலை' என்றும் உன் வாயில்களைப் 'புகழ்ச்சி' என்றும் அழைப்பாய்"

(இசை 60:17-18)

ஞாயிறு நற்பிரசாதம்

பாதுகாப்பும், சுதந்திரமும் உள்ளடக்கியதே சமாதானம். "ஆண்டவர் உங்களோடு" என்பது சமாதானமாகும். இறைவாக்கினர் எரேக்கியேல் சமாதான உடன்படிக்கையைப் பற்றிப் பேசுகிறார். "நான் அவர்களுடன் நல்லுறவு உடன்படிக்கை செய்துகொள்வேன். அது அவர்களுடன் என்றென்றும் நிலைத்திருக்கும். (எசேக்கி 37:26) சமாதான சமிக்ஞைகளை இறைவாக்கினர் மிக்காவும் தருகிறார்.

"அவர்களோ தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளை கருக்கரி - வாள்களாகவும் அடித்துக்கொள்வார்கள். ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது. அவர்கள் இனி ஒரு போதும் போர்ப் பயிற்சி பெறமாட்டார்கள்" (மீக் 4:3)

பழைய ஏற்பாட்டில் வாக்குறுதி அளிக்கப்பட்ட சமாதானம் புதிய ஏற்பாட்டிலும் தொடர்கிறது. கிறிஸ்து தன் பூவுலக வாழ்க்கையில் ஏழைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் குரல் கொடுத்து அவர்களுக்கு நீதி கிடைக்க உழைத்தார். இதனால் அவர் ஆள்பவர்கள், பணக்கார வர்க்கத்தினர் அதிகாரிடமிருந்து வந்த சவால்களுக்கும், கொலை மிரட்டல்களுக்கும் அஞ்சாது தன் உயிரையே அர்ப்பணிக்கும் அளவிற்குத் துணிந்தார். அவர் இவ்வுலகை விட்டுச் செல்லுமுன் சமாதானத்தை வாக்களித்தார். "சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கின்றேன்". அரு. (14:27)

உயிர்த்த கிறிஸ்து சீடர்கள் மத்தியில் தோன்றி உன்னத பரிசாம் சமாதானத்தை அளித்தார். "உங்களுக்கு சமாதானம் உரித்தாகுக" (அரு. 20:19). உண்மையிலேயே சீடர்களின் குழம்பிய நிலையிலேயே கிறிஸ்து தன் சமாதானத்தை அறிவிக்கிறார். இயேசுவினுடைய இறப்பிற்குப் பின் சீடர்கள் அஞ்சி, நடுங்கி வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவ்வேளையிலேதான் அவர்கள் மத்தியில் தோன்றி சமாதானத்தைக் கொடுக்கிறார். இயேசு கொடுத்த சமாதானம் அவர்களுடைய முழுப் பிரச்சினைகளுக்கும் கேள்விகளுக்கும் தீர்வாக அமையவில்லை. ஆனால், அவருடைய பிரசன்னம் அவர்களுடைய பயந்த, இயலாமை போன்ற சீர்கெட்ட வாழ்க்கையிலிருந்து விடுதலையடையச் செய்தது. அஞ்சி நடுங்கியவர்கள் அஞ்சா நெஞ்சுடன் அணிதிரண்டு அகிலமெங்கும் அமைதியை அறிவித்தார்கள். ஆகவே, சமாதானம் என்பது பயம், ஏக்கம் என்பவற்றிலிருந்து விடுதலை பெறுதலையும் குறிக்கும்.

அருட்சகோதரர் ஜெகத்பிரேம்நாத்

ஆகவே, கிறிஸ்து கொணர்ந்த சமாதானம் ஒரு முடிவல்ல. மாறாக அது ஒரு திட்டமாகும். அதனால் தான் அத்திட்டத்தை தன் சீடர்களுக்கு கொடுத்து நிஜமாக்கும்படி பணித்தார். எங்கள் ஒவ்வொருவரிடமும் அத்திட்டம் கையளிக்கப்பட்டிருக்கிறது. சமாதானத்தின் கருவிகளாக நாம் மாற வேண்டுமாயின் எங்கள் இதயங்களில் சமாதானம் அரசாள வேண்டும்.

இறைவன் எங்கள் ஒவ்வொருவரையும் சமாதானத்தின் கருவிகளாகச் செயற்பட அழைக்கிறார். ஏனெனில் சமாதானம் செய்யும் போது நாங்கள் பேறு பெற்றவர்கள.

காரைநகர் சுற்று வீதியில் பஸ்ஸில் மக்கள் செல்லலாம்

கடற்படைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

காரைநகர் சுற்று வீதியூடாக போக்குவரத்துச் சபையின் பஸ்மூலம் மக்கள் செல்வதற்குத் தடையேதும் இல்லையென்று காரைநகர் கடற்படைத் தள அதிகாரி கொமடோர் ஜெயக்கொடி தெரிவித்தார்.

காரைநகரையும் வியாவில் கிராமத்தையும் இணைக்கும் கடற்படை முகாமுக்கு முன்பாகவுள்ள வீதியூடாகப் போக்குவரத்துச் சபையின் பஸ்மூலம் பொதுமக்கள் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்தோம் என்றும் -

போக்குவரத்துச் சபை நேர அட்டவணையைச் சமர்ப்பித்து அதன்படி குறிப்பிட்ட நேரத்துக்கு பொதுமக்களை பஸ்களில் ஏற்றிச் செல்லலாம் என்றும் -

அவர் தெரிவித்தார்.

'காரைநகரில் திறந்த வீதி 4 மணி நேரத்தில் மூடப்பட்டது' என்ற தலைப்பில் கடந்த 5ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி தொடர்பாகவே அவர் இந்த விளக்கத்தை வெளியிட்டுள்ளார். (ஐ-3)

டயலொக் மேசைத் தொலைபேசி விற்பனைக்கு

டயலொக் (சீம்) போடக்கூடிய மேசைத் தொலைபேசி விற்பனைக்கு உண்டு. டயலொக் கைத் தொலைபேசி அலைவரிசைக்குரிய அன்ரனாக்கள் உடன் பூட்டித்தரப்படும். உத்தரவாதம் உண்டு.

தொடர்புகளுக்கு:

சிங்கப்பூர் பீடா

இல.174, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (ராஜா தியேட்டர் முன்பாக)

0777 24 2416

(11536)

கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி

செல்வி கோபனா தனபாலசிங்கம்

அவர்களின் அன்புத் தந்தையார்

பொன்னையா தனபாலசிங்கம்

அவர்கள் 08.11.2002 இல் இயற்கையெய்தியமையையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, மறைந்த அவருக்குக் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

2004 உயர்தர கணிதப் பிரிவு மாணவிகள்

(11537)

அறிவித்தல்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில்

மகோற்சவ விஞ்ஞாபனம்

12.12.2002 வியாழன் நண்பகல் 12.00 மணி கொடியேற்றம்
20.12.2002 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி தேர்
21.12.2002 சனிக்கிழமை காலை 10 மணி தீர்த்தம்
மற்றைய காலை உற்சவங்கள் 9-12 மணி
மாலை உற்சவங்கள் 4-6 மணிவரை நடைபெறும்.

(11530)

தர்மகர்த்தா சி.சிவகுரு.

பழமரக்கன்று விநியோகம்

வடமராட்சியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பயன்தரும் பழமரக்கன்றுகள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

வடமராட்சி கோட்டத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் இந்த பழமரக்கன்றுகளை விநியோகித்து வருகின்றனர். (எ-70)

பண்ணிசைப் போட்டி

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை திருவாசக விழாவை முன்னிட்டு நடத்தும் பண்ணிசைப் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரூடாக தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.விண்ணப்பங்கள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

விற்பனைக்கு

பான்ஸி, பாட்டா கடைப் பாவனைக்குரிய ஷோக்கேஸ், அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : நாதன் வூட் பிலெஸ்
இல.17, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(11538)

புலிகளுடன் மோத...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருப்தி கொள்கிறீர்களா?

பதில்:- அரசு சரியான பாதையிலே செல்வதாக நினைக்கின்றேன். ஆனால், விடுதலைப் புலிகள் நேர்மையுடன் செயற்படுகிறார்கள் என்பது சந்தேகத்திற்குரியதே. அதைப் புரிந்து கொண்டு நாங்களும் அவதானித்த வண்ணம் உள்ளோம். புயலுக்கு முன்னர் நிலவும் அமைதியா அல்லது புயலுக்குப் பின்னர் நிலவும் அமைதியா தற்போது நிலவுகிறது என்பதைச் சரியாகக் கூறமுடியாது.

கேள்வி:- விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பொலீஸ் நிலையங்களையும், நீதிமன்றங்களையும் அமைத்துவருகின்றனர். இதுகுறித்து தங்கள் கருத்து என்ன?

பதில்:- விடுதலைப் புலிகள் சமாதானம் என்ற போர்வையில் அவர்களது ஆதிக்கத்தை விரிவுபடுத்த முயலுகினறனர். இதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றிற்கு எமது உடன்பாடும் இல்லை. அவர்கள் தமிழ் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதாகக்கூறி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சாதாரண பொதுமக்கள் விரும்புகின்றனரா? இல்லையா என்பதை அறிந்து மேற்கொள்வதில்லை.

ஹிட்லர்கூட அவரது காலத்தில் பொலீஸ் நிலையங்களையும், நீதி மன்றங்களையும் அமைத்தார்.

பஸ் சேவையை நடத்தினார். ஆனால், அவை மக்களின் விருப்பத்தின் பேரிலேயே நடத்தப்பட்டன எனக் கூறமுடியுமா?

கேள்வி:- வடபகுதி மக்களுக்கு அரசிடமிருந்து எந்தவொரு சேவையும் கிடைக்கவில்லை எனக்கூறி ஒரு முறை அமைச்சர் மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். அவரது போராட்டம் நியாயமானதா?

பதில்:- அமைச்சர் மகேஸ்வரனைப்பற்றிக் கதைப்பதில் வேலையில்லை. அவருக்கு யாழ்ப்பாண மக்களிடமிருந்து பெரிய ஆதரவில்லை. அவரது செயற்பாடுகளை வடபகுதி மக்கள் அறிவர். தனது வியாபார நடவடிக்கைகளை முன்னேற்றும் முயற்சிகளை மட்டுமே அவர் எப்போதும் மேற்கொள்வார். மக்களின் நன்மை கருதி அவர் செயற்படவில்லை. அரசாங்கத்துடன் மகேஸ்வரன் போலியாகவே மோதினார். அவர் யாழ்ப்பாணம் சென்றதும் தனது தலைவன் பிரபாகரன் என்கிறார். கொழும்பு வந்ததும் தனது தலைவன் ரணில் விக்கிரமசிங்க என்கிறார். இதுதான் அவரது வழக்கம்.

கேள்வி:- நல்லது, இறுதித் தீர்வு எவ்வாறு அமையவேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்:- ஒன்றுபட்ட நாட்டிற்குள் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதுதான் சாலச்சிறந்தது என நினைக்கின்றோம். மத்திய அரசின்கீழ் செயறபடும் மாகாண சபை முறையை ஒத்த அமைப்பு உருவாக்கப்படவேண்டும். நாட்டைப் பிரிக்கத் தேவையில்லை. ★

நாட்டின் முன்னணி வகைகளான....

நோலீக்	பிரைடெக்ஸ்	சீல்கோட்	பெல்ற் பிக்ஸ்
பசைத்தன்மை உள்ள நிரப்பி	கறை தடுக்கும் பூச்சுகள் தளப்பூச்சுகள் குளியலறை பூச்சுகள்	நீர் புகாத்தடை வீதி நிர்மாணிப்பு நிலக்கலவை கரைசல்	நீர்புகாத் தடையமைவு

1964 தொடக்கம் மிக உயர்வான தனிச்சிறப்பு

மிக்க உற்பத்திகள்

iac நோலீக் கம்பனி, தபால்பெட்டி இல: 1358, கொழும்பு - 1.
தொலைபேசி: 833658

ஏசியன் பெயின்ற் (லங்கா) லிமிட்டெட் ஸ்தாபனத்தார்

நடத்தும்

வாகன, கட்டடங்களுக்கு வர்ணம் (பெயின்ரர்ஸ்) பூசுவோருக்கான

காலம்: 14.12.2002, 15.12.2002 காலை 9 மணிமுதல் (பு.நே.)

(இரு தினங்கள்)

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

- கருத்தரங்கில் வர்ணம் பூசுவோர் யாவரும் கலந்துகொள்ளலாம்.
- கருத்தரங்கில் கலந்துகொள்வோருக்கு மதியபோசனமும் வெகுமதியான பரிசுப்பொதியும் வழங்கப்படும்.

குறிப்பு: கருத்தரங்கில் கலந்துகொள்வோர் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளவேண்டி இருப்பதால், கலந்துகொள்ள விரும்புவோர் 10.12.2002இற்கு முன் இல.168, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள **யாழ்ப்பாண இரும்பகத்தில்** தங்களைப் பற்றிய முழு விவரங்களையும் வழங்கி வருகையை உறுதி செய்யுங்கள்.

ஏசியன் பெயின்ற் (லங்கா) லிமிட்டெட் ஸ்தாபனத்தினர்
யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்,

யாழ்ப்பாணம் இரும்பகம்

இல.168, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்கள்

திருமதி நிமால் இரவீந்திரன் (றோஸ்)

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், நியூஸிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி Dr.Nimal Raveendran (Rose) 30.11.2002 சனிக்கிழமை London இல் காலமானார்.

அன்னார் இரவீந்திரனின் அன்பு மனைவியும் நிசாந்தனின் ஆசைத் தாயாரும் காலஞ்சென்ற யேசுதாசன், திருமதி சரஸ்வதி ஜேசுதாசன் (London) அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் Londonஇல் வசிக்கும் ஸ்டெல்லா, ஹரீல்டா, ஜோர்ஜ், மற்றில்டா, Canadaஇல் வசிக்கும் ஏபிரகாம் அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், திருமதி லில்லி திரேஸ் சுப்பிரமணியத்தின் அன்பு மருமகளும் மொறிஸ், ஜெயமனோகரன், சியாமளா, கிறிஸ்தோப்பர், மேரி ஸ்டெல்லா ஆகியோரின் மைத்துனியும் Canada இல் வசிக்கும் பாக்கியலக்ஷ்மி யோகராஜா, மனோரஞ்சிதம் ஜெகதீஸ்வரன் அவர்களின் பெறாமகளும், ருக்மணி சாமிநாதன், ராதாமணி சூசைப்பிள்ளை அவர்களின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (07.12.2002) சனிக்கிழமை London இல் நடைபெற்றது.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்துயரை ஏற்றுக் கொள்ளவும்.

பாக்கியலக்ஷமி யோகராஜா (Canada),
905 - 858 - 9106,
ஜோர்ஜ் (London)
0208 - 2877099

தகவல்:
S.S.தேவசகாயம்
(றக்காலேன்)

(11535)

கந்தையா சிவப்பிரகாசம் இராமநாதன்

(ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர்)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் 86, முதலாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட K.S.இராமநாதன் அவர்கள் 05.12.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி சிவப்பிரகாசம் - பொன்னு தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புக்கணவரும் சுபத்திரா (ஆசிரியை, கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), குணாளன் (இந்தியா), தயாளன் (கணக்காளர், கனடா), அனுசியா (இத்தாலி), சியாமளா (சர்வோதயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் திருமதி மீனாம்பாள் (கனடா), ரவீந்திரன் (இத்தாலி) அவாகளின் அன்பு மாமனாரும் வித்தியசாகர், சரத்சாகர் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் திருமதி விசாலாட்சி சதாசிவம் அவர்களின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தகவல்:
தயாளன்(மகன்),
சுபத்திரா, சியாமளா
(மகள்).

(11531)

திருமதி பொன்னுத்துரை அன்னமுத்து

(Lanka Tours)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் மேற்கு மற்றும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை அன்னமுத்து அவர்கள் 04.12.2002 புதன்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற வயிரமுத்து பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவச்செல்வம் (தவம்), Dr.கதிர்காமநாதன் (அமெரிக்கா), நாராயணமூர்த்தி (கனடா), சந்திரகாந்தன் (பொறியியலாளர், அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.12.2002 அன்று அமெரிக்காவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

தகவல்:
த.சிவகுமார்
(பேரன்)

(C/25297)

துரித தபால்/பொதிகள் சேவை

இலங்கையின் எப்பாகத்திற்கும் 24 மணிநேர இடைவெளியில்

குறைந்த கட்டணம், பாதுகாப்பு, நம்பகத்தன்மை,

தொலைக்கப்பட்டதற்கான உத்தரவாதம்

மேலும் விபரங்கட்கு: SRI MURUGAN AGENCY POST OFFICE

KKS Road, Jaffna T.P 021-2222670, Fax: 021-2223214, Email: del-smskr...

இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

எமது கல்லூரியின் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர்

திருமதி யோகலட்சுமி இராசரத்தினம்

(குஞ்சக்கா)

அவர்கள் 04.12.2002 கனடாவில் காலமானதை அறிந்து நாம் ஆறாத் துயரில் மூழ்கியுள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரியில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் நடராசப்பெருமானின் திருவடியை வேண்டி நிற்கின்றோம். *ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (11539)

அதிபர், ஆசிரியர்,
கல்விசாரா ஊழியர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

துயர் பகிர்கின்றோம்

எமது அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவிலின்
புனருத்தாரணத் திருத்தொண்டுக்கு முன்னின்றுழைத்து வருபவரான
அருட்பிரகாசம் கிருஸ்ணராசா (மோகன்)
அவர்களது தந்தை

மூத்ததம்பி அருட்பிரகாசம் அவர்கள்

கடந்த 01.12.2002 அன்று சிவபதம் அடைந்ததையிட்டுத் துயருறுகின்ற ஏக புத்திரன் மோகன் குடும்பத்தினருக்கும் ஏனைய உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து, அவர் சிவபாதம் அடைந்த நிலை உறுதிபெற்றுப் பேரின்புறுமாறு எல்லாம் வல்லவரான அருள்மிகு முத்துமாரி அம்மையின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

அருள்மிகு முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்,
சிறுப்பிட்டி வடக்கு. (11545)

பரிபாலன சபையினரும்
திருத்தொண்டர்களும்.

மரண அறிவித்தல்கள்

திருமதி கந்தசாமி செல்லம்மா

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கூழாவடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி செல்லம்மா அவர்கள் நேற்று (07.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை. (11552)

தகவல்:
க.சசிகுமார் (மகன்)

சின்னப்பொடி ஆறுமுகம்

அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சின்னப்பொடி ஆறுமுகம் நேற்று (7.12.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சகுந்தலாவின் அன்புக் கணவரும் விமலேந்திரன் (ஆசிரியர்), இராசநிதி, லலிதா ஆகியோரின் தகப்பனாரும் ஸ்ரீகாந்த நிர்மலாவின் (மக்கள் வங்கி) மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அல்வாய்கிழக்கு இல்லத்தில் இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய். (11550)

தகவல்:
ஆ.விமலேந்திரன் (மகன்)

புதிய....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுடனான ரீதியில் நடந்துகொள்ள முடியாது. எனவே முக்கியமான - அடிப்படையான - உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இல்லை, அனுசரிக்கப்பட்டதாகவும் இல்லை இது பொதுவான நீதியை மீறியதாகின்றது. அடுத்து புதிய பயங்கரவாதத் தடைச்சட்டமானது மேற்படி உடன்படிக்கையின் 2.1,2.2 சரத்தின்படி சுதந்திரமாக மீன்பிடிக்கும் உரிமையையும் தடைசெய்கிறது. இலங்கை கண்காணிப்புக் குழுவினர் படையினரின் இந்த முரண்பாடான செயற்பாடுகளை குறிப்பிட்ட சரத்துக்களின்படி உன்னிப்பாகப் பாசீலனை செய்ய வேண்டும் மீள்குடியமர்விற்காக கண்ணிவெடிகள் அகற்றுதல், யுத்தத்தில் நிலக்கண்ணிவெடிகளை ஆயுதங்களாகப் பாவித்ததைத் தடைசெய்தல் போன்ற விடயங்களும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

ரோமாபுரி ஒரே நாளில் கட்டப்படவில்லை. அதுபோல சமாதான நடவடிக்கையும் ஒரே இரவில் பூர்த்தியாககுமுடியாது. குறித்த இலக்கினை அடைவதற்கு தெளிவான சிந்தனை அவசியம். 'ஒற்றுமையான இலங்கை' என்பதற்கு பதிலாக பிராந்திய மட்டத்திலான அதிகாரப் பகிர்வுகளுடன் கூடிய 'ஒன்றிணைந்த இலங்கை' என்பதே இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வலுப்படுத்தி சமாதானத்துடன் வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்தித் தரும். இதற்காக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு மிகவும் அவசியமாகின்றது. இது அரசியலுக்கு அப்பாற்பட்டது; மேன்மையானது. நற்பண்புகளில் உள்ளடக்கப்பட்டதான விட்டுக்கொடுக்கும் மற்றும் குரோதங்களை மறத்தல் போன்ற பண்புகளை இந்த இரு அரசியல் மேதைகளும் கைக்கொண்டு நாட்டில் சமாதானததை ஏற்படுத்தி பொருளாதார விருத்தியையும் முன்னெடுக்கவேண்டும்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பல இன வளர்ப்பு மீன்கள் (கற்பிஸ், அக்ரா பேஸ்கைல் மற்றும் ஏனையவை) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
K.குமார் ரயர் வேக்ஸ்,
95, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு. (சந்தைக்கு அருகில்) (11543)

நிறைஞ்சனாஸ் சங்கானை
06.12.2002 முதல்
விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த
"நேருக்கு நேர்"
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், தபு, சார்லி, கவுண்டமணி
நடித்த
தாயின் மணிக்கொடி (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேடகாட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பு.நே.)
11 ஆம் திகதி முதல் செந்தூர தேவி (11534)

ராஜா யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
அஜித் (இருவேடங்களில்), கிரன், மீனா
நடித்த

கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)

வீதிகளின் விவரம் திரட்டு

கைதடி,டிசெ.8

கைதடியில் உள்ள சேதமடைந்த வீதிகளைப் புனரமைப்பதற்கென அவை தொடர்பான விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபை அங்குள்ள சனசமூக நிலையங்களின் மூலம் சேகரித்து வருகின்றது. (எ-75)

எமது நேற்றைய புதிய வீடியோ CD வெளியீடு
ராஜ்சுந்தரம், சிம்ரன் நடித்த
ஐ லவ் யூடா
(பிரதிகள் உடன் பெறலாம்)
ITN பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி. (C25304)

மரண அறிவித்தல்கள்

ஆழ்வாப்பிள்ளை கந்தையா

(இளைப்பாறிய அதிபர்)

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி வடக்கு, புலோலியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை கந்தையா (கந்தையா உபாத்தியார்) 05.12.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், தெய்வானைப்பிள்ளை (தாதிய உத்தியோகத்தர் - ஆ.வை பருத்தித்துறை), பாலசுந்தரம் (நிர்வாக அலுவலர் - மா.வை.தெல்லிப்பழை), சாந்தநாயகி (ஆசிரியை, இ.த.க.பாடசாலை, மருதங்கேணி), இராசசுந்தரம் (இத்தாலி), உதயநாயகி, ஞானசுந்தரம் (ஜேர்மனி), Dr.சிவசுந்தரம் (CD&MH பாவற்குளம்), வரதநாயகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கணபதிப்பிள்ளை (மீன்பிடிப் பரிசோதகர்), மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் கமலேஸ்வரி (இத்தாலி), கந்தசாமி (கிராம அலுவலர், புலோலி மேற்கு), சுமதி (ஜேர்மனி), சுமதி (ஆசிரியை - வவுனியா), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தாமசீலன், தர்ஷினி, தர்மரூபி, தர்ஷனன், மைதிலி, பைரவி, உதயரூபன், ராகுலன், நர்மதன், ஆதித்தன், துர்க்கா, பிரகாஷ், பிரசாயினி, ஆதவன், மகேசன், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.12.2002) வெள்ளிக்கிழமை புலோலியில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி,
புலோலி தெற்கு, புலோலி. (11540)

தகவல்:
க.பாலசுந்தரம் (மகன்)

சின்னத்தம்பி தனபாலசிங்கம்

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தனபாலசிங்கம் நேற்று (07-12-2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணபூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தேவகுமார், சிவகுமார், நந்தகுமார் மற்றும் சாந்தகுமாரி (கனடா), விஜயகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேஸ்வரன் (கனடா), அவர்களின் அன்பு மாமனாரும் வாசன், நிதர்சன் (கனடா), ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற பரராசசிங்கம் மற்றும் அன்னலட்சுமி (கனடா), காலஞ்சென்ற நவரத்தினராசா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (11548)

தகவல்:
விஜயகுமாரி (மகள்)

செல்வி திவ்வியம்பிகா சோதிராஜா

(வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மாணவி)

207, சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் 220, 2/F, வாசல வீதி, கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி திவ்வியம்பிகா சோதிராஜா அவர்கள் நேற்று (07.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சோதிராஜா - குகானந்தி தம்பதிகளின் அன்பு மகளும், நிர்மலமுரளி, சண்முகப்பிரியா, இன்பக்குமரன் ஆகியோரின் சகோதரியும் திருமதி நாகம்மா, இராசக்கோன் மற்றும் காலஞ்சென்றவர்களான அரிநேசகுகன் காந்திமதி ஆகியோரின் பேத்தியும் ஜெகநாதன் - தயானந்தி (சுவிஸ்) குணராசா - ஜெயயோதி, புண்ணியராசா - சிவசக்தி ஆகியோரின் பெறாமகளும் கந்தசாமி - இராஜேஸ்வரி - கைலாயப்பிள்ளை - ஜதுகுலராணி, செல்வரட்ணம் - சற்குணராணி (சுவிஸ்), நாகேஸ்வரன் - கிருபாராணி (பிரான்ஸ்), குகானந்தன் - கிருபாம்பிகை (கனடா) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

207, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (11549)

தகவல்:
R.சோதிராஜா (தகப்பன்)

இராஜேந்திரன் வசந்தகுமாரி (வசந்தா)

சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் இல 9/1 சாரதா வீதி, திருகோணமலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேந்திரன் வசந்தகுமாரி (6.12.2002) காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரவணை மேற்கு விதானையார் பாலசுப்பிரமணியம் - ஞானசக்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் மனோன்மணி தம்பதிகளின் அருமை மருமகளும் வினோதினியின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சதாரூபவதி (ராணி), சத்தியரூபவதி (மலர் - ஆஸ்திரேலியா), கலாரூபவதி (ரூபா), கனகரூபவதி (சோதி), கலாநிதி சிவகடாட்சம் (கனடா), சிவபாலன் (மாகாணக் கல்வித் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராஜசிங்கம், குணரத்தினம் (ஆஸ்திரேலியா), யோகராஜா, சிவநாதன் (சுவிஸ்), லோகேஸ்வரி (கனடா), பவானி (ஆசிரியை, புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவதாஸ், சந்திரதாஸ், கண்ணதாஸ், உமாராணி, குமரசிறி, விமலசிறி, ஜெயசிறி, கீதா, யோககுமாரி, சசிகலா, யோகசக்தி, சிவரூபன், சிவகாந்தன், சிறீகாந்தன், சிவானுஜா ஆகியோரின் சிறிய தாயாரும், சிவப்பிரியா, சிவதர்ஷினி, பாமினி, சிவசத்தியா, சிவப்பிரசாந், சிவசெந்தூரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

9/1 சாரதா வீதி,
திருகோணமலை.

தகவல்:
பா.சிவபாலன் (சகோதரன்)

T.P 026-22690 (C25303) சி.சிவபாலன் (RAINBOW திருகோணமலை)

விற்பனைக்கு வந்துள்ளது

மொத்த வியாபாரிகளுக்கும் கட்டட ஒப்பந்தகாரர்களுக்கும் கவர்ச்சிகரமான விலைக்கழிவு உண்டு

அழகும் தரமும் வாய்ந்த தரைப் பதிப்புக்கற்கள்

இத்துறையில் பிரசித்திபெற்ற நாடுகளான இந்தியா,
இந்தோனேசியாவிலிருந்து விற்பனைக்கு வந்துள்ளன.
உங்கள் விருப்பத் தெரிவுகளுக்கமைய பலவர்ணக் கோலங்களிலும், தெய்வத் திருவுருவம், மலர்கள், இலை கொடிகள் பதிக்கப்பெற்ற கண்ணைக்கவரும்
வண்ணக் கற்கள் ஏராளம்! ஏராளம்!! தேவைக்கு முந்துங்கள்!

ஏக விநியோகஸ்தர்கள்: AMT TRANSPORT SERVICE

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி
கோப்பாய் யாழ்ப்பாணம்.
T.P: 0777 788473, 0777 686220

(11544)

கட்சிக்குள் பிளவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போனால் அகற்றவும் சக்தி வாய்ந்த தாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. இதன் பலத்தை மலினப் படுத்தி திட்டமிடப்பட்ட சதித்திட்டம மூலம் வங்குரோத்து அரசியல் நடத்த மனக்கணக்குப் போட்டவர்களை எமது ஒன்றிணைந்த அரசியல் பலத்தின் மூலம் முறியடிப்பதற்கு தமிழ்ச்சமூ கம் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும். இதன்மூலமே வங்குரோத்து அரசியல நடத்த எண்ணுபவர்களது சிந்தனை களை முறியடிக்க முடியும்

இத்தகைய ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு வடக்கு - கிழக்கு எங்கும் தமிழ் பேசும் சமூகங்களின் மத்தியில் பிரசாரங்களை மேற் கொள்ள விளைகின்றேன். இதன் ஆரம்பம்தான் இன்றைய கூட்டம்.

இன்று எமது நாட்டுக்கு சமாதா னம் தேவைப்படுகிறது. இத்தேவை கருதியே ஈழக்கோரிக்கையை விடுத்து வடக்கு - கிழக்கு இணைந்த சுய நிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு தமிழ்ச் சமூகம் இணங்கியுள்ளது. இதன் பின் தமிழ்ச் சமூகத்துக்குக் கிடைக்கப் போகும் அனைத்து உரி மைகளும் முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்படவேண்டும். ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கின் முஸ்லிம்களும் சமமாக அனுபவிக்க வேண்டும் உரிமை வேண்டும். இது மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் நீண்டகாலக் கனவாகும். இவி நடைபெறும் பேச் சுக்களில் அதற்கான ஆட்பலத்தைத் திரட்டுவதாக அமையும் என்று அமைச் சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் அக்கரைச் சேனை ஜும் ஆ பள்ளிவாசல் பெரு நாள் தொழுகையிலும், ஜும் ஆ பிரார்த்தனையிலும் ஈடுபட்டார். பின் னர் அவரைத் 'தலைவர் வாழ்க' என்ற கோஷங்களுடன் அவரது ஆதரவாளர் கள் கூட்டம் நடைபெறவிருந்த கலா சார மண்டபம் வரை தோளில் சுமந்து சென்றனர்.

அமைச்சருடன் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்க ளான ஜே.எம்.தௌபீக், எம்.எஸ். தௌபீக் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். மதிய போசனத்தை அடுத்து அமைச்சர் குழு தோப்பூர் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டது.

(ம-290)

உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சபைகளைக் கலைத்து உடன் தேர்தல் நடத்தவேண்டும். அது வரை அச்சபைகளை ஆணையாள ரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் - என்றுள்ளது.

இந்த விவகாரத்தைப் பிரதமரின் கவனத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் கொண்டுவரவேண்டும் என் றும் -

இந்தீர்மானத்தின் பிரதிகளை தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோருக்கு அனுப்புவது என்றும் - முடிவு செய்யப்பட்டது.

(ம-3)

இன்று கஜமுக சங்காரம்

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான விநாயகர் ஆலயங்களில் இன்று கஜமுக சங்காரம் இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை பெருங் கதை உற்சவத்தின் இறுதிநாள் நிகழ் வுகள் இடம்பெறும். (எ-10)

யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளையும் கொண்ட பிரேத அறையை அமைப்பதற்கென கடந்த வருடம் ஒரு கோடி ரூபா நிதியை புனரமைப்பு அதிகிகள் மீள்குடியமர்வு அமைச்சு ஒதுக்கியது. இதற்கான திட்டங்கள் வரையப்பட்டு அது ஒப் பந்தக்காரர் ஒருவரிடம் ஒப்படைக்கப் பட்டது. இதற்கென முதற்கட்டமாக 60 லட்சம் ரூபா ஒப்பந்தகாரரிடம் யாழ். செயலகம் ஊடாக வழங்கப் பட்டது. ஆறுமாத காலத்துக்கு முன் னர் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப் பட்டன.

ஆனால், இன்றுவரை இந்தக் கட் டடத்துக்கான அத்திபாரமும் சில தூண்களும் மட்டுமே அமைக்கப்பட் டுள்ளன. ஒப்பந்தக்காரருக்கு வழங் கப்பட்ட நிதியில் இருந்து குறைந்தது கட்டடத்தின் அரைவாசிப் பகுதியா வது முடிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை.

நிலைமையை நேரில் பார்வை யிட்ட அமைச்சுச் செயலாளர் எஸ். ஜெயரத்தினம் மற்றும் மேலதிக செயலாளர் எஸ்.குமாரதாசன் ஆகி யோர் கட்டடத்தின் நிலை குறித்துத் தமது அதிர்ச்சியை வெளியிட்டனர்.

வழங்கப்பட்ட 60 லட்சம் ரூபா நிதியில் இருந்து கட்டடத்தின் முக் கால்வாசிப் பகுதி வேலைகள் முடி வடைந்திருக்கும் என்று தாம் எதிர் பார்த்ததாகவும் -

ஆனால், இங்கு கட்டடம் கட்டப் படக்கூட இல்லை என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ம-3)

அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு வந்துள்ளது. ஆனால், அந்த அதிகாரத்தை துஷ்பிரயோ கம் செய்யமாட்டோம். தேர்தலை சந தித்க நாம் தயாராக இருந்தபோதும், தேர்தலை எதிர்கொள்ளாமல் ஆட் சியை பிடிக்க முடிந்தால் அதையே செய்வோம். அரசுக்கு உடனடியாக அச்சுறுத்தல் எதையும் விடுவதில்லை என்று முடிவு செய்துள்ளோம். - இப் படி அவர் மேலும் சொன்னார்.

(ம-3)

இந்திய நிலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதை அடுத்து -

ஸ்ரீலங்காவில் ஏற்படவிருக்கும் பெரும் ஆட்சிமுறை மாற்றம் பற்றி அயல்நாடான இந்தியாவின் நிலைப் பாடு என்ன என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்திருக்கின்றது.

ஒஸ்லோவில் இணக்கம் காணப் பட்டு 48 மணித்தியாலங்கள் கழிந்த நிலையிலும் அதுபற்றி இந்திய அர சின் கருத்து எதுவும் இதுவரை உத்தி யோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட வில்லை.

கொழும்புக்கு வரும் இந்திய வெளியுறவுச் செயலர் இந்திய அரசின் நிலைப்பாட்டை இலங்கைத் தலை வர்களிடம் நேரில் - உத்தியோகபூர் வமாக - தெரிவிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

பிரதமர் ரணிலின் சமாதான முயற்சிகளால் நாட்டுக்கு ஏற்பட்டி ருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் மற் றும் அது பற்றிய ஜனாதிபதியின் கவலையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தூதுக்குழு ஒன்று கடந்த வாரம் புதுடில்லியில் இந்தியத் தலைவர்களிடம் நேரில் விளக்கியி ருந்தது. அப்போது ஜனாதிபதியின் விசேட செய்தி ஒன்றை தூதுக்குழு பிரதமர் வாஜ்பாயிடம் கையளித்தது. அதற்கு கடிதத்துக்கான இந்தியப் பிர தமரின் பதில் கடிதம் ஒன்றை வெளி யுறவுச் செயலர் கன்வால் சிபல் கொழும்புக்கு எடுத்துவருகிறார் என்று சில ராஜதந்திர வட்டாரங்கள் கொழும் பில் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

சிவமயம்

ஜோதிடம்

இந்திய பரம்பரை சாஸ்திரியார்

அருள் வாக்கு அம்பிகா அம்மா அவர்கள்

முதல் முறையாக யாழ். மாநகருக்கு வருகை தந்துள்ளார்கள். *கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.* ஜாதகம் எழுதிக் கொடுக்கப் படும். மற்றும் எந்தப் பிரச்சினைகள் ஆனாலும், ஜோதிட ரீதியாக சரிசெய்யப்படும்.

தொடர்புக்கு:

அருள் வாக்கு அம்பிகா அம்மா,

மடோனா லொட்ஜ்(லிங்கன் கூல்பார் அருகில்)

121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: *ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை பார்க்கப்படும்.* (11442)

VALAMPURI Crackers

பண்டிகைக் காலங்களில்
உங்கள் இல்லங்களில்
உங்களை மகிழ்விக்கும்
தரமான பட்டாசுகள் என்றால்
அது வலம்புரி பட்டாசுகளே!

பட்டாசுகள், வாணவெடிகள்,
மத்தாப்புக்கள், சுழல் சக்கரங்கள்.

ஏக விநியோகஸ்தர்

Saraswathi Stores

12, Wolfendhal Street, Colombo 13. Tel : 348635, 432035
Fax : 471275 Email : saraswathy@sltnet.lk

நலமான வாழ்வுக்கு என்றும் நலந்தருவது

புரோசிங் (PROZINC)

★ இழந்த சக்தியை மீட்டெடுத்தல்.
★ இரத்த உற்பத்தியை அதிகரித்தல்.
★ வளரும் பிள்ளைகளுக்கு பசி உணர்வை தூண்டுதல்.
★ போன்றவற்றில் முக்கிய பங்கு வகிப்பதுடன்

புரோசிங் - அனைத்து விற்றமின்களுடன் அதியுயர் தாவரப் புரதச்சத்து நிறைந்துள்ளதால் சைவப் பிரியர்களுக்கும் உகந்தது.

புரோசிங் - கர்ப்பிணித் தாய்மார், விளையாட்டு வீரர், வளரும் பிள்ளைகள், முதியோர் என முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற சிறந்த பானம்.

புரோசிங் - தற்போது யாழ்.நகரின் அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும்.

தொடர்புகளுக்கு :

JEGAN PHARMACY - யாழ். நகர். Tel: 222 3191
ARKEM - கொழும்பு. Tel: 470290, 071-341956

(C-25206)

NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி - யாழ்நகர்.

Logic

S.R.J.சுதன்

பகுதி II

வினாவிடை

ஆரம்பம் 10.12.2002

செவ்வாய் 10 a.m. (11444)

நேற்றைய புதிய வீடியோ CD (வீணை) வெளியீடு

ஜூலவ்யூடா

பிரதிகள் உடன் பெறலாம்.

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(C/25229)

TNT Seasonal Box

இதோ! யாழ் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செய்தி ஒன்று.....

Dear Friends,

கிறிஸ்மஸ்சை முன்னிட்டு யாழ் நகரில் முதன் முதலாக TNT நிறுவனம் தனது கூரியர் சேவையில் பருவகாலப் பொதியினை (Seasonal Box) பாரிய விலைக்குறைப்புடன் அறிமுகம் செய்துள்ளது. என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறோம்.

இவ் TNT Seasonal Box மூலம் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர், நண்பர்களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 நாள்களிலும், உள்நாட்டில் கொழும்பு, நீர்கொழும்பு, கண்டி, நுவரேலியா, குருநாகல், அவிசாவளை போன்ற இடங்களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் 24 மணிநேரத்திலும் கிறிஸ்மஸ் பரிசுகளை, கிறிஸ்மஸ் Cardகளை, அன்புப் பரிசுகளை அனுப்ப விரும்புகிறீர்களா?

இன்றே விரையுங்கள்: **TNT கூரியர் சேவை**

139, ஸ்ராண்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 222 3771

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
திச்சயமாக 2003 ஜனவரி 15 வரை மட்டுமே.

(C/25278)

உங்களுக்கு என்ன பிரச்சினை?

சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி

தென்னிந்தியாவில் இருந்து முதல் முறையாக யாழ்ப்பாணம் வருகைதந்த ஜோதிடர்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப் பொருத்தம்

இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி

60/1 (112), TEMPLE ROAD(*NEAR ICRC*),
JAFFNA.
T.P. 021- 222-3804

(11490)

யாழ் - கொழும்பு விமான சேவை பயணச்சீட்டுக்கள்

லயன்எயார், எக்ஸ்போ, செரண்டிப் ஆகிய மூன்று விமான சேவைகளுக்கான பயண ரிக்கட்டுக்கள் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

1) செல்வம் ஸ்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2223817, 3605, 0777-111460

2) சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்
இல. 888, (பஸ்நிலையம் முன்பாக) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

3) அம்பாள் ரவல்ஸ் அன்ட் கொமினிக்கேசன்
கம்பஸ் லேன் (மக்கள் வங்கி அருகில்),
திருநெல்வேலி.
T.P. 222 2742, 0777-518319, 0777-279205

THE PHONE SHOP (டயலொக்)

ஆலடிச் சந்தி, மானிப்பாய். (C/25302) கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

மரண அறிவித்தல்

கார்த்திகேசு மயில்வாகனம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப் பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மயில்வாகனம் 07.12.2002 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு தங்கமுத்து தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - தங்கம் தம்பதியினரின் மருமகனும் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும் லட்சுமிப்பிள்ளை, கண்மணி, மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோரஞ்சிதம், மோக நாதன் (சுவிஸ்), கலைவாணி, சுகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரன் (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), றஞ்சி (சுவிஸ்), அருட்செல்வம் (அருள் கல்வி நிறுவனம், இணுவில்), ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜன் (சுவிஸ்), சுவிகன் (சுவிஸ்), சங்கீதா, தர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தக னத்துக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு, தகவல்:
இணுவில். (C/25305) இரா.அருட்செல்வம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சிறுவர்களை ஒருமுறை திரும்பிப் பாருங்கள்.....

தற்போது யாழ் குடாநாட்டில் அதி கரித்துவரும் ஒரு பாரிய பிரச்சினை யாக குழந்தை தொழிலாளர் பிரச் சனை உருவெடுத்து வருகின்றது. இதனை உரிய அமைப்புகள் சரியான முறையில் கையாளாதுவிட்டால் பாரிய சமூகத் தாக்கங்களை எதிர்கொள்ள நேரிடும்.

அது மட்டுமன்றி எதிர்காலத்தில் எமது சந்ததியின் வாழ்க்கை, பண் பாடு, கலாசாரம் என்பன சீரழிந்து போய்விடுமோ என்னும் அச்சத்தை யும் உருவாக்கியுள்ளது.

நாட்டில் இடம்பெற்றுவந்த 20 ஆண்டுகளுக்கும் மேலான யுத்தத் தால் பல குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள நிலை யில் அதனால் மிகவும் பாதிக்கப்பட் டுள்ளவர்கள் சிறுவர்களே என்பதில் சந்தேகமில்லை. பொருளாதாரக் கஷ் டத்தாலும், தாய், தந்தையர் இன்மை யாலும் சிறுவயதிலேயே உழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால குறைந்த சம்பளத்திற்கு வேலைக்க மர்த்தப்பட்டுள்ளார்கள்.

இதைவிடச் சிறுவர் பலர் தீர்நடத் தைகளில் ஈடுபட்டு வருவதனையும் கண்டுகொள்ளமுடிகின்றது. கையில கொஞ்சம் காசு வந்தவுடன் அதனை என்ன செய்வதென்று தெரியாது. புகைத்தல், தரக்குரைவான சினிமா பார்த்தல், மதுபானம் பாவித்தல் முத லான தீர்நடத்தைகளுக்கு ஆளா கின்றனர். இந்த நிலை தொடராமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது சிறுவர்கள் நலன்பேண் அமைப்புகள் மற்றும் சிறுவர் பரா மரிப்பு நிலையங்கள், அநாதை இல் லங்கள் போன்றவற்றின் கடமையா கும். எனினும், அவை உரிய நடவ டிக்கை எடுக்கின்றனவா எனபது கேள விக்கிடமாகவும் கவலைக்கிடமாக வும் உள்ளது.

அண்மையில் ஏற்பட்டுள்ள ஒரு சுமுகமான சூழ்நிலையில் ஏ-9 பாதை திறக்கப்பட்டதும் குடாநாட்டில் வந்து மீளக்குடியேறும் குடும்பங்கள் பல அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர் நோக்கிவருகின்றன. தற்போது அரசால் வழங்கப்படும் நிதி மற்றும் நிவாரண உதவிகள் மிகவும் குறைவு. இதனால், அந்தக் குடும பங்களிலுள்ள சிறுவர்கள் வேலைக்குச் செல்லவேண் டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ள தால் யாழ் நகரப்பகுதியில் ஏராள மான குழந்தைத் தொழிலாளர்களை அவதானிக்க முடிகின்றது.

தேநீர்ச்சாலைகள், அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையங்கள மற்றும் வர்த்தக நிலையங்களில் இந்தக் குழந்தைத் தொழிலாளர்களை அதிகமாகக் காணமுடிகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் ஏராள மான அநாதைகள், வருமானமற்ற குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் உள்ளார்கள், கிளிநொச்சி மாவட் டத்தில் 10 ஆயிரத்திற்கும் அதிக மான பாடசாலை செல்லாத சிறுவர் களும், ஆயிரத்து 500இற்கும் மேற் பட்ட அநாதைப் பிள்ளைகளும் உள் ளர்கள். இதேபோன்று முல்லைத்தீவு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திரு கோணமலை முதலான இடங்களில் ஏராளமான சிறுவர்கள் உள்ளனர்.

இவர்களின் நிலைமையைச் சீர் படுத்த ஒவ்வொரு தமிழ் மகனும் ஆர்வத்துடன் செயற்படுதல் வேண்டும். ஒவ்வொரு சிறுவர்களும் தமிழினத் தின் சொத்தென்பதை யாரும் மறந்து விடக்கூடாது. எல்லோரும் தாயகத்தின் விடிவைப்பற்றி எவ்வளவு அக்கறை யுடன் செயற்படுகிறோமோ அதே போல தமிழ் சிறார்களின் நலனிலும் அக்கறை கொண்டு செயற்படுதல் வேண்டும்.

சொந்தப் பிள்ளைகளை உயர்ந்த உத்தியோகத்தில் வரவேண்டும் என்ற எண்ணத்தில் அதிக பணத்தைக் கொடுத்து பாடசாலை அனுமதிபெற்று ரியூசனுக்கும் வீசேஷட வகுப்புகளுக் குமாக பெருந்தொகைப் பணத்தை செலவழிக்கும் செல்வந்தர்கள் பலர் ஏனைய சிறுவர்கள் கல்வி கற்கும் வயதில் வேலை புரிவதை எண்ணிப் பார்ப்பதில்லை. தமது தொழில் லாப திற்காகவும் தமது எண்ணப்படி வேலை பெறுவதற்காகவும் சிறுவர் களையே அதிகம் வேலைக்கமர்த்து கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இவ்வாறு ஏராளமான சிறுவர்கள் கடைகளிலும், வாகனம் திருத்தும் தொழில் நிலை யங்களிலும் மற்றும் நிறுவனங்களி லும் வேலைபுரிந்து வருகின்றார்கள்.

குறைந்த சம்பளத்தில் வேலைக் கமர்த்தப்படும் சிறுவர்கள் தமது எதிர்காலத்தினைப் பற்றிச்சிந்திப்ப தில்லை. வீட்டுக் கஷ்டத்தாலும், தம்மை கவனிக்கவோ, தமது நலனில அக்கறை கொள்ளவே யாருமில்லை என்னும் நிலையில், சிறுவர்கள் தொழில் செய்வதற்கும், பிச்சை யெடுப்பதற்கும் ஆளாகின்றனர்.

இன்று அபிவிருத்தி பற்றி பேசப் படுகின்றது. சிறுவர்கள் நலன்பற்றிப் பேசப்படுகின்றது. ஆனால், எந்தவித நடவடிக்கைகளும் செயலில் எடுக்கப் படவில்லை. சிறுவர் பராமரிப்பு நிலை யங்கள் தற்போது ஆள் எண்ணிக்கை அதிகரித்து விட்டதாகக்கூறிக் கை விரிக்கின்றன. இதனால், தெருவில் நிற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர் பராமரிப்பு, அநாதை இல்லங்கள் இருக்கின்றன. அவையும் யுத்தம், பராமரிப்புச் செலவு முத லானவற்றால் அதிக எண்ணிக்கையில் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள முன வருவதில்லை. தற்போதைய சூழலிலா வது அவை சுதாகரித்துக் கொண்டு செயற்படவேண்டும்.

யாழ்குடாநாட்டுப்பகுதியில் பல சிறுவர்கள் கல்விகற்க ஆர்வமிருந் தும் உரிய வசதி, வாய்ப்பு கிடைக் காமையால் அவர்கள் தெருக்களில் விடப்பட்டுள்ளார்கள். இவர்களே ஏதே னும் வேலைசெய்து பிழைக்கும் நோக் கோடு மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள்.

சில சிறுவர்களை அணுகி விசா ரித்தபோது அநாதை இல்லங்களும், சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் தமக்கு இடமில்லை எனக்கூறி கைவிட் டுள்ளதாகக்கூறி, கவலைப்பட்டுக் கொண டனர். அவ்வேளை, சமூகத்தில பெரிய மனிதர்கள் எனத் தம்மை அடையா ளப் படுத்துவதற்காகச் சேவை செய் வோர எண்ணி மனம் நொந்து கொண்ட துண்டு.

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சிறுவர் பாதுகாப்பு அமைப்பில் பணி புரிவோர், அவர்களாக வந்து எந்தப் பணியும் செய்ததாக எமக்குத் தெரிய வில்லை. பெயருக்கு இயங்குவதில் எந்தவித பிரியோசனமும் இல்லை.

வேலைத்தளங்களில எத்தனை சிறுவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர், பாலியல் அவஸ்தைக்குட்படுத்தப்படு கின்றனர். இவையெல்லாம் இந்தக் குடாநாட்டில் இயங்கும் சிறுவர் அமைப்புக்களுக்குத் தெரியுமா?

பாலியல், திருட்டு மற்றும் ஏராள மான குற்றச்செயல்களில் சிறுவர்கள ஈடுபட்டமைக்காக நீதிமன்றங்களில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் சமூகநலன்பேணும் இளைஞர்களால் பிடிக்கப்பட்ட பாலி யல், நீலப்படம், கசிப்பு முதலான பிரச சினைக்குரியோரில் 18 வயதிற்குட் பட்டோர் அதிகம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கல்வியை இடைநிறுத்திக் கொண்டு தொழிலில் ஈடுபடுபவர்களாகவே இருந்துள்ளார்கள்.

ஆண் சிறுவர்களின் நிலையையே மோசமடைந்துவருகிறது. இன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் சிறுவர்களைத தொழிலில் ஈடுபடுத்துவது சாதாரண விடயமாகிவிட்டது. பாடசாலை தொட க்கம் பல்கலைக்கழகம், உயர் தொழில் ஸ்தானங்கள் என்பனவற்றில் பெண் களே அதிகம் காணப்படுகின்றார்கள். ஆண்பிள்ளைகளைப் பெற்றோர் தொழி லில் ஈடுபடுத்துவதனையே அதிகம் விரும்புகின்றனர். இதற்கு எமது சமு தாயத்தில் காணப்படும் ஆண்களுக்கே உரிய சில பண்பாட்டு அம்சங்கள், சாதகமாக அமைந்துள்ளன. குறிப் பாக ஆண்களை குறிப்பிட்ட ஒரு தொகையை வைத்து (சீதனம்) மதிப் பிடும் நிலையுள்ளது. சிறு வயதுமுதல தொழில்செய்து உழைக்கப்பழகும் ஒரு வன் சமூகத்தில் வக்கிர புத்தியுடன் கல்வி அறிவற்றவனாக உருவெடுக்க வழிசெய்கின்றது. இதனை யாரும் உணருவதாகத் தெரியவில்லை.

இந்தநிலை நீடிக்குமானால் தமிழர் களது எதிர்காலச் சந்ததியினர் எமது பண்பாடு, மரபு, விழுமியம் யாவற் றையுமே பிறழச்செய்யும் நிலை உருவாகும் என்பது உறுதி. இதனை மாற்ற தமிழ்ப்பற்றாளர்கள்தான் முயற் சிக்கவேண்டும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற ஔவையாரின் வாக்கியத்தையும் "கண் ணுடையோர் கற்றோர்" என்ற வள்ளு வரது வார்த்தையும் பொருளற்ற, பெரு மதி குறைந்த வார்த்தையாகாது.

செந்தூர்நாஜ்

மீண்டும் தெளிவுபெற்று கல்வியறி வுடைய சமுதாயம் உருவாக வழி செய்யவேண்டியது மனிதநேய அமைப்புக்களினதும், சிறுவர் நலன் பேண் அமைப்புக்களினதும் பிரதான கடமையாகும்.

இனிவருங்காலத்திலாவது யாழ். மாவட்டம் உட்பட்ட வடக்கு-கிழக் கில் சிறுவர்கள் தொழிலில் ஈடுபடு வது தடுக்கப்பட்டு அவர்கள் - வலு மிக்க சந்ததியாக எதிர்காலத் தலை வர்களாக - உருவாக வழி செய்வீர் களா? உங்கள் மனச்சாட்சிகள் உறுத்த வில்லையா?

உண்மையில் எத்தனையோ பேர் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு உதவி புரிகின்றனர். இந்நிலை அதி கரிக்க வேண்டும். அதேவேளை, சிறு வயதில் வேலைக்காக செல்வோரைப புத்திகூறி கல்வியின் அவசியத்தினை வலியுறுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு முதலாளி மார்களிடமே உள்ளது. இதனை அவர்கள் செய்வார் களானால நிச்சயம் எம்சந்ததியும் உயரும்; எம்தேசமும் உயரும்.

செய்வீர்களா? உதவிக்காக ஏங்கும் சிறுவர்களை காப்பார்களா பொறுத் திருந்து தான் பார்க்க வேண்டும்.

நல்ல விடயங்களை அன்றே செய வீர் நன்றே செய்வீர். ★

அரசின் சமாதான முயற்சிகளை குறைகூறுவதில் ஜனாதிபதி திருப்தி

நாட்டு மக்களுக்கு ஆற்றும் உரைகளில் ஒரே குழப்பம்

அரசியல் வாதிக்கு அடுத்த தேர் தலைப் பற்றியே சிந்தனை இருக்கும். குறிப்பாக நிறைவேற்று அதிகாரங் களைப் கொண்ட ஜனாதிபதியைத் தலைவியாகக் கொண்ட எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கண்டிப்பாக அடுத்த தேர்தலை எப்போது நடத்தலாம் என்ற திசையிலும் சிந்திப்பர் என்பது உண்மையே.

அத்துடன், முன்றில் இரண்டு பெரும்பான்மையில்லாமல் நாடாளுமன் றம் எந்நேரமும் கலைக்கப்படலாம் என்ற பதற்றத்தில் வாழும் ஆளுங்கட்சி அரசியல் வாதிகளும் அடுத்த தேர்த லைப்பற்றியே அச்சம் கலந்த சிந்த னையில் இருப்பர்.

போதிய பெரும்பான்மைகூட இல் லாத அரசாங்கத்துடன். சமாதானத் திட்டங்களை வகுப்பதில் என்ன பயன் என்று நினைக்கும் அரசியல் வாதி களும் இன்னுமொரு தேர்தல் வந் தால் அதிக பெரும்பான்மையுடன் அரசு ஒன்று அமையலாம் என்ற நப்பாசை யில் தேர்தலைப்பற்றியே சிந்திப்பர்.

மொத்தத்தில் இலங்கையின் அரசியல்வாதிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அடுத்த தேர்தல் பற்றியே அவசரஅவசரமாக சிந்திக் கிறார்கள் என்பது மூடிவைக்க முடி யாத இரகசியம் ஆகும். ஜனாதிபதி கடந்த 100 நாள்களுக்குள் மூன்று தடவை நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த் தினார்.

நாடாளுமன்றத்தை உடனடியாக கலைக்போவதில்லை என்ற விட யத்தை ஒகஸ்ட் 9ஆம் திகதி வெளிப் படுத்தினார். தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான சமிக்ஞைகளை வெளிக்காட்டி ஒக்டோபர் 24ஆம் திகதி அறிக்கை விடுத்தார்.

பிரதமர் தலைமையில் நாட்டிற்கு நல்லாட்சியை நிறுவுவதற்கு குழு ஒன்றை அமைப்பதுபற்றி நவம்பர் 12ஆம் திகதி ஜனாதிபதி உரையாற் றியிருந்தார். இந்த நல்லாட்சிக்கான குழு புதிய அரசியற்கட்டமைப்புகள், புதிய நிறுவனங்கள்,அமைப்புகள், புதிய முறைமைகள், நடைமுறைகள் பற்றிய சிபாரிசுகளை செய்வதற்கு அதிகாரம் பெற்றதாகவிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி முறை ஒழிப்பு

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக கும் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்படுமென வும் தெரிவித்து, சம்பிரதாய பூர்வமான சில வார்த்தைகளுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க முன் வருவதாகவும் ஜனாதிபதியின் உரை யில் கூறப்பட்டிருந்தது.

சமாதான நடவடிக்கைகள், அரசி யற் சகவாழ்வு விடங்கள், ஜனாதிபதி முறை ஒழிப்பு மற்றும் அரசியல் கட்ட மைப்பு விவகாரங்கள், சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியின் பிரதி நிதி கலந்துகொள்ளல் - இவைபோன்ற விவகாரங்களில் ஜனாதிபதி பல தட வைகள் கருத்துத் தெரிவித்துவிட்டார்.

அவைமட்டுமன்றி, வரவு - செல வுத்திட்ட விவகாரங்களிலும் வலிந்து சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக் கின்றன. சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் தெரிவிக்கப்பட்ட சம் பள அதிகரிப்பில் அரைவாசியை 2003இல் அரச ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் என்றும், மீதி 50 சதவீதத் தையும் 2004ஆம் ஆண்டில் வழங்கலா மென்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். வேலையின்மையைக் குறைக்கும வழிவகைகள் பற்றி ஆலோ சனை வழங்கிய ஜனாதிபதி, 2003 ஆம் ஆண்டில் 50,000 வேலை வாய்ப் புக்களை உருவாக்கவேண்டு மென் றும், அடுத்தடுத்த வருடங்களில் ஆண டுக்கு ஒரு லட்சம் வேலை வாய்ப் புக்கள் வீதம் வழங்கவேண்டுமென் றும் தெரிவித்தார்.

விவசாய கடன்கள் பற்றியும் அவர் ஆலோசனை தெரிவித்தார். சிறுகைத தொழிற்றுறை பற்றியும்,சிறு முதலீட் டாளர்களுக்கு இலகுவான முறையில் கடன் வழங்குவது பற்றியும் ஆலோ சனைகளில் வலியுறுத்தப்பட்டிருந்தன.

முக்கியமாக அரசு கருத்தொன்றி செயற்பட்டுவரும் சில துறைகள் தவிர்ந்த, அரசு பலவீனமாகச் செயற் பட்டுவரும் துறைகள்பற்றி உரைக ளில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முக்கியமாக வாழ்க்கைச் செலவு உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள மக களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங் காததையும், இளைஞர்சேனை என்ற பெயரில் ஆளுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்தை வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்காத தையும் ஜனாதிபதி வாக்காளர்களுக் குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றின் பின்னணியில் தேர்தல ஒன்றிற்கான ஆயத்தங்கள் தெரிகின்றன.

அரசாங்கத்திற்கு தான் வழங்கிய பல சந்தர்ப்பங்கள் உதாசீனஞ் செய் யப்பட்டுள்ளன என்றும்-வரவு - செல வுத் திட்டத்தில் சாதாரண மக்களுக்கு நிவாரணம் எதுவும் இல்லை என்றும் மக்கள் முன் நியாயப்படுத்தும் திட் டங்கள் வகுக்கப்பட்டுவருகின்றன.

சமாதானத்தில் பெரும்குறை

இதேவேளை, அரசாங்கம் மிகப் பெரும் வெற்றியை ஈட்டிவரும் சமா தானச் செயற்பாடுகளில் பெருங் குறை கள் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றன.

சமாதானச் செயற்பாடுகள் புலி களின் பாதையில் சென்றுகொண்டிருக் கின்றன. இதனால், தனிநாடு உருவா கும் சாத்தியங்கள் அதிகரிக்கின்றன.

அயல்நாடான இந்தியாவின் நலன் கள் கருத்திற்கொள்ளப்படாமல் விவ காரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

நோர்வே அனுசரணையாளர்கள் பக்கச்சார்பாக நடந்துகொள்கின்றனர். புலிகளைத் தடைசெய்திருக்கும் அமெ ரிக்காவினதும் பிரிட்டனினதும் பிரதி நிதிகளுடன் அன்ரன் பாலசிங்கத்தை சம அந்தஸ்துடன் இருத்திப் பேச வைக்கிறார்கள். அந்த நாடுகள் மன மாற்றமடைந்து புலிகள் மீது விதித் துள்ள தடைகளை நீக்கிவிட்டால் என் னாவது?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காலத்திற்கேற்றபடி மாற்றவேண்டும். புலிகள் வடக்கு - கிழக்கில் பொலீஸ் நிலையங்களை அமைத்து வருகிறார் கள். தாய்லாந்துப் பேச்சுக்கள் இர கசியமாக வைக்கப்படுகின்றன. தாம் ஆயிரித்தி பற்றியே அங்கு பேசிய தாக எம்மிடம் கூறுகின்றனர்.

ஒஸ்லோவில் சில நிதிவழங்கும்

கலைவானன்

நாடுகளினதும், பயங்கரவாத அமைப்பு களினதும் நலன்கள் இணையும்போது பயங்கரவாதம் வெற்றிபெறும். புலிகள் ஆயுதங்களை கைவிடவேண்டுமென்று அரசு வற்புறுத்தவேண்டும்.

புலிகளினதும் அரசாங்கத்தினதும நோர்வேயினதும் கைகளில் இலங் கையின் எதிர்காலத்தை விட்டுவிடும் அளவுக்கு இது ஒரு சாதாரண விடயமா?

இவை யாவும் 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

டிசெம்பர் 5ஆம் திகதியின் பின் னர் நாட்டில் பாரிய மாற்றங்கள் நடை பெறவுள்ளதாக பங்குபற்றும் அத்தனை கூட்டங்களிலும் எதிர்க்கட்சித் தலை வர்கள் முழங்கிவருகின்றனர்.

நாட்டின் பெருளாதார வளர்ச்சி வீதம் 2003ஆம் ஆண்டில் 6சதவீத மாவது இருக்கவேண்டும். அதைத் தொடர்ந்துவரும் ஆண்டுகளில் அது 8சதவீதமாக அதிகரிக்கப்படவேண்டு மென்றும் வழங்கப்பட்ட ஆலோசனை நகைப்புக்கிடமானது.

2001ஆம்ஆண்டில் ஒரு சதவீத்தைக் கூடப் பெறமுடியாமற்போன அரசாங் கத் தலைவர் ஒருவர், பொருளாதார வளர்ச்சிபற்றி ஏதாவது கூறியே ஆக வேண்டும் என்பதற்காக கூறிய அத்த மற்ற வார்த்தைகளாக அவை தெரி கின்றன. ஆயினும், இவை தேர்தலுக காக கூறப்பட்ட வார்த்தைகளே என் பதை உணரும்போது வெரும் சிரிப்பை அடக்கிக்கொள்வர்.

தேர்தல் விஞ்ஞாபனம்

தனியார் மயமாக்கல் பற்றியும், அதிகாரப் பரவலாக்கம் பற்றியும்கூட ஜனாதிபதி குறிப்பிடத் தவறவில்லை என்பதைப் பார்க்கும்போது இப்போதே பொ.ஐ.முவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவந்துவிட்டது போல் தோன்று கிறது. அமைதிப்படுத்தப்பட வேண்டிய மக்கள் பகுதியினரை அமைதிப்படுத் தும் வார்த்தைகளும் தூண்டி விடப்ப வேண்டிய பகுதியினரைத் தூண்டும் வார்த்தைகளும் தெரிவிக்கப்படுகின் றன. இவற்றை ஆராய்ந்து பார்க்கும் போது, அடுத்த ஆண்டு நடுப்பகுதியி லாவது பொதுத் தேர்தலை எதிர் பார்க் கலாம் என்று நம்பக்கூடியதாக இருக் கின்றது. தேசிய அரசாங்கம் அமை வது சரிவராத பட்சத்தில் தேர்தல் நடப்பது தவிர்க்கமுடியாதது என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர். ★

யாழ்.மாவட்டத்தில்

சிறந்த பண்ணையாளர் கௌரவிப்பு பெறுவோர்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் சிறந்த பண்ணையாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட 90 பண்ணையாளர்கள் பரிசு வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட வுள்ளனர்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் கால்நடை வளர்ப்போர் மத்தியில் போட்டி நடத்தி அதன் மூலம் சிறந்த பண்ணையாளர்களைத் தெரிவுசெய்துள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி, சண்டிலிப்பாய், சாவகச்சேரி, கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம், வேலணை ஆகிய பத்து கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் கோழி, ஆடு, மாடு வளர்ப்போர் மத்தியில் இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றோர் பற்றிய விவரம் வருமாறு:-

கோழி வளர்ப்பு

பருத்தித்துறை: சி.சிவானந்தன், கே.கணேசன், பி.செல்வக்கிருஷ்ணன்.

கரவெட்டி: கே.இராசேந்திரன், ரி.செல்வராசா, பி.தனபாலசிங்கம்.

சண்டிலிப்பாய்: வி.பத்மநாதன், ஏ.அருமைநாயகம், கே.செல்வராசா.

சாவகச்சேரி: எம்.முகுந்தன், கே.பேரின்பம், கே.இளங்குமரன்.

கோப்பாய்: ஆர்.செளந்தரராசன், கே.பொன்னையா, எம்.ஞானலிங்கம்.

தெல்லிப்பழை: எஸ்.இராமசந்திரன், எஸ்.யோகநாதன், என்.கதிர்காமலிங்கம்.

உடுவில்: எஸ்.சிவஞானம், எஸ்.சுரேந்திரன், திருமதி ஆர்.ஆனந்தராசா.

வட்டுக்கோட்டை: ரி.இராகவன், கே.கிருஷ்ணமூர்த்தி, பி.உதயன்.

யாழ்ப்பாணம்: ஆர்.பற்றிக் ஜெயக்குமார், வி.கனகசபை, எஸ்.ஜெயத்திலகன்.

வேலணை: ஜீ.வாமதாஸன், எஸ்.மோகனலிங்கம், பி.ஜெயபாலன்.

ஆடு வளர்ப்பு

பருத்தித்துறை: எஸ்.பொன்னையா, ரி.ஞானசிவம், ரி.தங்கராசா.

கரவெட்டி: திருமதி ஜி.புஸ்பராணி, ரி.பவளச்செல்வம், ஆர்.தங்கமயில்.

சண்டிலிப்பாய்: வி.சிவசோதிராசா, திருமதி.ஏ.நந்தினி, ஏ.சகாதேவன்.

சாவகச்சேரி: எஸ்.ரட்ணம், எஸ்.சுந்தரலிங்கம், என்.தர்மகுலசிங்கம்.

கோப்பாய்: பி.வெற்றிவேலு, என்.இராசகுலேந்திரன், வி.கந்தசாமி.

தெல்லிப்பழை: எஸ்.இராசகுலேந்திரன், திருமதி எஸ்.கௌரியம்மாள், வி.மகேந்திரன்.

உடுவில்: சி.குலேந்திரன், என்.தவராசா, என்.கேதீஸ்வரன்.

வட்டுக்கோட்டை: எஸ்.சபாபதிப்பிள்ளை, எஸ்.ஸ்ரீமோகன், வி.வீரசிங்கம்.

யாழ்ப்பாணம்: கே.சுந்தரலிங்கம், எஸ்.இரத்தினசிங்கம், எஸ்.மகேந்திரன்.

வேலணை: கே.பரத்துவாசன், ஆர்.குமாரசுவாமி, எம்.வரதராசா.

மாடு வளர்ப்பு

பருத்தித்துறை: எஸ்.சுந்தரமூர்த்தி, எஸ்.இராமச்சந்திரன், ஏ.சிவபாலகிருஷ்ணன்.

கரவெட்டி: எஸ்.லோகேஸ்வரன், என்.இராசேந்திரன், எஸ்.மகேஸ்வரன்.

சண்டிலிப்பாய்: எஸ்.சிவகுருநாதன், எஸ்.அழகேந்திரம், ஆர்.இளமுருகன்.

சாவகச்சேரி: ரி.இராசையா, கே.விசுவலிங்கம், எஸ்.சண்முகரத்தினம்.

கோப்பாய்: எஸ்.மூர்த்தி, ஜோசேப் மரியாள், வி.சின்னையா.

தெல்லிப்பழை: ஆர்.செல்வகுமார், கே.கலியுகதாஸ், திருமதி கே.அன்னலட்சுமி.

உடுவில்: வி.பாலசிங்கம், எஸ்.இராசதுரை, எஸ்.முருகேசு.

வட்டுக்கோட்டை: எஸ்.இராசதுரை, கே.மகாலிங்கம், ஏ.சிவகுமார்.

யாழ்ப்பாணம்: எஸ்.பத்மநாதன், ஏ.லோறன்ஸ், எஸ்.தமிழ்ச்செல்வி.

வேலணை: ஜோசேப் இமானுவேல், எஸ்.சிறீஸ்காந்தராசா, என்.பரமலிங்கம்.

கால்நடை வளர்ப்போர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா மிகவிரைவில் நடத்தப்படும் என யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பொ.இராமநாதன் அறிவித்துள்ளார். (ஏ-11)

ஈழத்து சிதம்பர திருவாதிரை உற்சவம்

காரைநகர்,டிசெ.8

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயில் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 7மணிக்கு மூல மூர்த்திகளுக்கு விஷேட அபிஷேகமும், காலை 9.30 மணிக்கு திருவெம்பாவை ஓதல், முற்பகல் 10.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

திருவாதிரை உற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும். அன்றையதினம் காலை 7மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து, நடேசப்பெருமான் பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனி வரும் காட்சி இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை அதிகாலை 2மணி தொடக்கம் ஆருத்திரா அபிஷேகமும் 6மணிக்கு ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். மாலை 3.30 மணிக்கு திருஊடல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இந்த திருவாதிரை உற்சவத்திற்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீன கர்த்தாக்களும் மற்றும் சபையினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

உற்சவத்தைபொட்டி பத்து தினங்களும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினரால் அன்னதானம் வழங்கப்படும்.

உற்சவத்தில் பங்குபற்ற வரும் அடியார்களின் நன்மைகருதி வடபிராந்திய போக்குவரத்து சபையின் காரைநகர் சாலையினால் பத்து தினங்களும் யாழ்.மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயம்வரை விசேட பஸ் சேவை நடத்தப்படவுள்ளது.

உற்சவ காலங்களில் மாலையில் மணிவாசகர் சபையினால் மணிவாசகர் விழா நடத்தப்படும்.

உற்சவ காலங்களில் தினமும் காலை 9.30மணி தொடக்கம் 10.30 மணிவரை ஆலயத்தில் ஓதப்படும் திருவெம்பாவை பாடல்களை இலங்கை வானொலி தேசிய சேவையில் நேரடியாக அஞ்சல் செய்வதற்கும், பஞ்சரத பவனி ஆருத்திரா தரிசனம் என்பனவற்றை நேரடியாக அஞ்சல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

அண்மையில் இடிமின்னல் தாக்குதலுக்குள்ளான ஆலயத்தின் இராஜகோபுர புனரமைப்புப் பணிகளுக்கென இந்து கலாசார அமைச்சினால் ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஏ-73)

முகூர்த்த நிர்ணய கலாசாரம் வளர்த்த பெருமைக்குரியவர்

வேதாங்கங்களில் ஒன்றான சோதிடக்கலைமூலம் தம்மை நாடிய மக்களின் விதிகளைப் பரிசீலனை செய்து அவர்களின் வாழ்வியல் உயர்வுக்கு வழிசமைத்து வந்த உடுவில் அமரர் பிரம்மஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் பரமேஸ்வரஐயர் (சமாதான நீதிவான்) அவர்களின் மறைவு நமது சமூகத்தின் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

காணி அபிவிருத்தித் திணைக்கள நிர்வாக அதிகாரியாகப் பதவி வகித்து ஓய்வுபெற்ற பரமேஸ்வர ஐயர், கடந்த இரண்டு சகாப்தங்களாக நடைபெற்றுவந்த கலவரங்களுக்கு முகங்கொடுத்து தமது கிராமத்தையும், தமிழ் மண்ணையும், தாய்த்தாரையும் சமூகத்தினரையும் கூட இருந்து நேசித்து வந்தவர்.

ஆங்கிலம் கற்று, அரச சேவையில் பணியாற்றி ஓய்வுகாலத்தில்

நீத்தார் நயப்புரை

ஒரு சோதிட ஞானியாகத் திகழ்ந்தார்.

இவரது சோதிடக் கலை நுட்பத்தை அறிந்து சிங்கள, கிறிஸ்தவ மக்கள் மட்டுமல்ல வெளிநாட்டவர் பலர் கூட இவரை நாடி பயனடைந்துள்ளனர்.

முகூர்த்த நிர்ணயக் கலாசாரத்தை நம்மிடையே உரிய முறையில் வளர்த்த பெருமைக்குரியவர். எவ்வித தவறுகளும் இன்றி முகூர்த்த நிர்ணயம் செய்வதில் வல்லுநர். நியந்திரி சார் மீல், இவர் ஆற்றிய "கும்பாபிஷேக முகூர்த்த நிர்ணயம்" பற்றி ஆராய்ச்சி உரை உதயன் நாளிதழில் வெளியானபோது அதனை ஓர் ஆவணப் பொக்கிஷமாக ஆர்வலர் பலர் இன்றும் பேணி வருகின்றனர்.

தாம் கூறும் கூற்றுகளுக்கு, முகூர்த்த நிர்ணயங்களுக்கு ஆதாரமாக நிரூபிக்கும் தன்மையே இவரின் சிறப்புக்குக் காரணம்.

கோவில்கிரியைகள், கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் போன்றவற்றில் பத்ததி வாசிப்பதிலும் பாண்டித்தியம் பெற்றவர். அந்தணர்களின் வைதிக கிரியைகளைச் செய்து வைத்துப் பாராட்டுப்பெற்றவர். இவரின்

- நிறைமுனைவன்-

தன்னலமற்ற சமூகப் பணிகளைப் பாராட்டி இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் கௌரவித்துள்ளது.

அதில இலங்கை சிவப்பிராமண சங்க பொருளாளராக, நியந்த்ரியின் சமூக மேம்பாட்டுகுழுத் தலைவராக, சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றிய வித்வசபை உறுப்பினராக, உடுவில் இந்து இளைஞர் மன்ற ஆலோசகராக இருந்து, சமூகப் பணிகள் பல புரிந்த அமரர் விபரமேஸ்வர ஐயரை நினைவு கூர்வது நன்றிமறவாத தமிழ்ப் பாரம்பரிய மரபாகும்.

சேர் பொன். இராமநாதன் நினைவுதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.பல்கலைக்கழகத்தின் அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ்வரக் கல்லூரியின் நிறுவுநரும் சைவப் பெருவள்ளலாருமான சேர் பொன். இராமநாதனின் நினைவு தினம் இன்று காலை 7 மணியளவில் பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு 108 சங்காபிஷேகமும் விசேட பூசைகளும் ஆலயத்தில் நடைபெறவுள்ளன. நினைவு தினத்தையொட்டிய ஏனைய நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு பல்கலைக்கழக வளவில் உள்ள அன்னாரின் சிலைக்கும் சபா மண்டபத்தில் உள்ள அவரின் உருவப் படத்துக்கும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மாலை அணிவித்து அஞ்சலி செய்யவுள்ளார்.

பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இந்து மன்றத் தலைவர் செள.சசிகுமார சர்மா தலைமையில் கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

(ஐ-10)

நகரில் புதிய மீன் சந்தை ஜனவரியில் திறக்கப்படும்

அரியாலை,டிசெ.8

யாழ்.பண்ணைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் மீன் சந்தை எதிர்வரும் ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மீன் சந்தைக்கு அருகில் சிறிய கடைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது கொட்டடியில் இயங்கிவரும் மீன் சந்தை, ஜனவரி முதல் மூடப்பட்டு பண்ணைப் பகுதிக்கு மாற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொட்டடி மீன் சந்தையில் தற்போது இடநெருக்கடி காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-17)

கட்டாக்காலிகளால்

கொட்டடி வயல்களில் நெற்பயிர்கள் நாசம்

கொட்டடி, நாவாந்துறைப் பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள நெல் வயல்கள் கட்டாக்காலிகளினால் தினமும் நாசஞ் செய்யப்பட்டு வருவதாகச் சம்பந்தப்பட்ட பகுதி விவசாயிகள் அப்பகுதி கிராமசேவையாளரிடம் முறையிட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்துக் கமநலசேவை நிலையம் மற்றும் மாநகரசபையின் கட்டாக்காலிகளைப் பிடிக்கும் பிரிவு ஆகியவற்றிடம் பொதுமக்கள் முறையிட்டும் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் அண்மையில் கட்டாக்காலி மாடு ஒன்று இப்பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுத் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் - எனினும், இதுவரை அதனை மீட்டுச் செல்வதற்கு உரியவர்கள் சமுகமளிக்கவில்லை என்றும் - கிராம சேவையாளர் தெரிவித்தார்.

(எ-4)

தென்மராட்சி மேற்கில்

ஒன்பது சங்கக் கிளைகளை மீளத் திறக்க முடியாத நிலை!

அரியாலை,டிசெ.8

தென்மராட்சி மேற்கு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ்ஒன்பது கிளைகள் செயற்படாததினால் சங்கம் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியிருப்பதாக சங்கத்தின் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தனங்களப்பு, கோவிலாக்கண்டி, நாவற்குழி - நச்சன்தோப்பு, மறவன்புலோ போன்ற பகுதிகளில் உள்ள கிளைகளை மீள ஆரம்பிக்க முடியாதுள்ளது.

இந்தப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் சங்கத்தின் கிளைகளை மீளத் திறக்க முடியவில்லை -

என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள்

வீதியோரங்களில் குப்பை கூழங்கள் சூழல் மாசடையும் அபாயம்!

வலி.வடக்கு,டிசெ.8

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் பல இடங்களிலும் தேங்கிக் கிடக்கும் குப்பைகூழங்கள் காரணமாக மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள புகையிரதப்பாதை, யாழ்.மாநகரசபைக் குப்பின்புறம் உள்ள சங்கிலியன் வீதி, திருநெல்வேலி சிவன் ஆலயத்திற்கு அண்மையிலும் கனகரத்தினம் வீதி மற்றும் சில வீதிகளிலும் குப்பைகள் வீதியோரங்களில் குவிந்துகிடக்கின்றன.

பருவ மழை ஆரம்பித்திருப்பதை அடுத்து குப்பை நிரம்பியுள்ள இடங்களில் இருந்து துர்நாற்றம் வீசுவதுடன், அதில் இருந்து தொற்று நோய்கள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெய்யில் காலத்தில் தேங்கவிட்டுக் குப்பைகள் அகற்றப்பட்டாலும் கூட, மழைகாலத்தில் துரிதமாக குப்பைகளை அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வரியிறுப்பாளாகள் எதிர் பார்க்கின்றனர்.

(எ-86)

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தென்மராட்சி,டிசெ.8

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைக்குக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

2003ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால், பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களப் பிரதிநிதிகளையும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு நிவாரண புனர்வாழ்வு நல்லினக்கக் குழுக் கூட்டம் நடைபெற்றும் என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

(எ-117)

கலந்துரையாடல்

கிளிநொச்சி,டிசெ.8

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் யாழ்ப்பாண அலகிற்கான அபிவிருத்திக் குழுவின் கலந்துரையாடல் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு கிளிநொச்சி நிர்வாக சேவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து ஒப்பந்தகாரர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-5)

பயிலுநர் ஆசிரியரின் பிரச்சினைகள் ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.8

இலங்கை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கலில் பயிலுநர் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலின்போது மேற்படி பிரச்சினைகள் தொடர்பான விவரங்கள், சேகரிக்கப்படவுள்ளன. பிரச்சினைகளை எதிர்நோக்கும் சகல பயிலுநர் ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத்தின் யாழ்.மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி அழைப்பு விடுத்துள்ளார்.

(ஐ-10)

ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீ

ஆஸ்திரேலியாவின் சிட்னியின் மூண்டுள்ள காட்டுதீ குடியிருப்பு களை சுற்றி வளைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இக் காட்டுத் தீயை அணைப்பதில் ஆயிரக்கணக்கான தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

தோட்டத்துக்கு நீர்பாய்ச்சும் குழாயால் காட்டுதீயை அணைக்க நீரைப் பாய்ச்சும் குடியிருப்பாளர். அருகே தீயணைப்புப் படைவீரர்.

காட்டுத்தீயில் கருகிய இல்லங்களை பார்வையிடுவோர்.

தீயுடன் போராடும் தீயணைப்பு படைவீரர்.



பரவும் காட்டுத்தீயை பார்வையிடும் இளைஞன்.

மூன்றில் ஒன்றை முடிவு செய்யும் கட்டாயத்தில் அதிபர் சதாம்!

காலக்கெடு இன்றுடன் முடிகிறது

வாஷிங்ரன்,டிசெ.8

ஆயுதத் திட்டங்கள் பற்றி தெரி விக்க ஈராக்குக்கு ஐநா. காலக்கெடு வித் துள்ள நிலையில் அதிபர் சதாம் ஹுசைனுக்கு 3 வழிமுறைகள் உள் ளன. அவற்றில் ஒன்றைத் தெரிவு செய்யவேண்டிய கட்டாயத்தில் சதாம் உள்ளார் என்று அமெரிக்கப் பாது காப்புத் துறை அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் கூறியுள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது:-

பேரழிவு தரத்தக்க ஆயுதங்கள் தம்மிடம் உள்ளவை எல்லதை இன்று ஞாயிற்றுக்கிழமைக்குள் தெரிவிக்க வேண்டும் என்று ஐ.நா. தெரிவித்துள் ளது.

இந்நிலையில், மூன்று வழிகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்யவேண் டிய கட்டாயத்தில் உள்ளார் சதாம்.

பேரழிவு தரும் ஆயுதங்களைக் கைவிட்டு ஐ.நா ஆயுத சோதனைக் குழுவுக்கு முழு ஒத்துழைப்பு தருவ தற்குத் தயாராக உள்ளேன். ஆயுதங் களை பதுக்கி வைத்துள்ள இடங்கள் இவைதான் என தெரிவித்துவிட்டு பதவியில் நீடிப்பது ஒருவழி -

எப்போதும்போலவே இப்போதும் பொய் சொல்வேன். எனவே, உண் மையை அறியவிடாமல் ஆயுத சோதனைக் குழுவுக்கு முட்டுக்கட்டை போடுவேன் என்பது இரண்டாவது வழி -

ஈராக்கை விட்டு சதாம் ஹுசை னும் அவரது குடும்பத்தாரும் வெளி யேறுவது 3ஆவது வழி - இவற்றில் ஒன்றை சதாம் தெரிவுசெய்தால் தமது தீர்மானத்தை ஈராக் செயற்படுத்தி யுள்ளதா? இல்லையா? என்பதை ஐ.நா. முடிவு செய்யும் என்றார் ரம்ஸ் பீல்ட்.

(ஐ)

பாரிய மனிதப் புதைகுழியொன்று ஐவரிகோஸ்ட்டில் கண்டுபிடிப்பு!

அபிட்ஜான்,டிசெ.8

மேற்காபிரிக்கக் கரையோர நாடான ஐவரி கோஸ்ட்டில் மனிதப் புதைகுழி யொன்றை பிரெஞ்சுப் படையினர் கண்டுபிடித்துள்ளனர். தீவிரவாதக் குழுக்களுக்கும் அரசுப் படைகளுக் கும் இடையே பயங்கர மோதல்கள் இடம்பெற்றுவரும் ஐவரி கோஸ்ட்டில் இந்த மனிதப் புதைகுழிக்குக் காரண மென அரசுப் படைகளும், தீவிர வாதிகளும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

ஐவரிகோஸ்ட்டில் நிலைகொண் டுள்ள பிரெஞ்சுப் படையின் பேச்சா ளர் கேணல் அன்ஜ் அன்ரொய்ன் இந்தப் புதைகுழி குறித்துக் கூறுகை யில்:-

30 மீற்றர்கள் நீள, அகலமும் 2 மீற்றர்கள் உயரமும் கொண்டிருந்த மண்மேட்டில் சடலங்களின் உறுப்பு கள் நீட்டிக்கொண்டிருந்ததாகவும் -

இதனைத் தொடர்ந்து இந்த மனி தப் புதைகுழி பற்றி உரிய இடத்தில் தெரிவித்ததுடன் தமது கடமை முடிந்து விட்டதாகவும் - தெரிவித்தார்.

ஐவரிகோஸ்ட் சுதேசிகள் இயக் கம் என்ற தீவிரவாத அமைப்பின் கட் டுப்பாட்டில் உள்ள பகுதியிலேயே இந்தப் புதைகுழியுள்ளது. இப்பகுதி கொக்கோ அதிகம் விளையும் பகுதி யாகும். இப்பகுதியில் முகாமிட்டுள்ள பிரெஞ்சுப் படையினர் அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையேயான யுத்தநிறுத்த உடன்பாட்டை கண் காணித்து வருகின்றனர். இவர்களே புதைகுழியைக் கண்டுபிடித்தனர்.

இதற்கிடையில் கடந்த வாரம் இப் பகுதியில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட அரசுப் படைகளால் கொல்லப்பட்டவர்களின் சடலங்களே புதைகுழியுள் இருப்பதாகவும் - சர்வ தேச சமூகத்தின் கவனத்துக்கு இக் கொடூரத்தைதான் கொண்டுசெல்லப் போவதாகவும் - தீவிரவாதக் குழுவின் தளபதி சச்சாரிஸ் கோன் தெரிவித் துள்ளார்.

இப்புதை குழிக்குள் நூற்றுக் கணக்கான சடலங்கள் இருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மேற்காபிரிக்காவில் வளம்மிக்க நாடாக ஐவரிகோஸ்ட் கருதப்படுகி றது. ஆனால், அயல் நாடுகளான லைபீரியா, சியாராலியோன் போன்று உள்நாட்டுப் போரினால் ஐவரிகோஸ்ட் டும் சீரழியும் ஆபத்து ஏற்பட்டுள்ள தாக அவதானிகள் கருதுகின்றனர்.

அதிபர் புஷ் புடினுடன் பேச்சு

மொஸ்கோ,டிசெ.8

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷு டன் ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் தொலைபேசியில் தொடர்புகொண்டு வெள்ளிக்கிழமை பேசினார். அப்போது தனது சீன, இந்தியப் பயணம் குறித் தும் அவர் எடுத்துரைத்தார்.

புடின் தனது 5 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு வெள்ளிக்கிழமை காலைதான் ரஷியா திரும்பினார்.

தொலைபேசி உரையாடலின்போது அமெரிக்க ரஷிய அதிபர்கள் பிராந் திய, சர்வதேச விடயங்கள் குறித்தும் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண் டனர் என்று ரஷ்ய அதிபர் மாளிகை பேட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

சீன தொழிற்சாலை வெடிவிபத்தில் 13பேர் மரணம்!

சீனாவில் எட்டவிரோத பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் ஷான்க்ஸி மாநிலம் ஜீஜியாகே கிராமத்தில் வான்யாங் பகுதியில் நடந்தது.

பட்டாசுத் தொழிற்சாலை அமைந் திருந்த 3 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தது. இதுவரை கட்டட இடி பாடுகளில் இருந்து 12 பேரின் சடலங் கள் மீட்கப்பட்டுள்ளன. (ஒ)

அமெரிக்காவில் புயல்

நியூயோர்க்,டிசெ.8

அமெரிக்காவின் தெற்குச் சம வெளிப் பகுதியில் இந்த வாரத் தொடக் கத்தில் வீசிய சுடும் புயலில் சிக்கி 22 பேர் இறந்தனர்.

புயலில் சிக்கி வாகனங்கள் தடு மாறியதில் ஏற்பட்ட விபத்துக்களில் இவர்களில் பலர் மரணமாகினர் என்று கூறப்படுகிறது.

மின்தடை காரணமாக பல இடங் கள் இருளில் மூழ்கின. விமான நிலைய ஓடுபாதைகளில் பனிப் பொழிவால் பல விமானங்கள் ரத்துச் செய்யப் பட்டன. (ஐ)

தண்டவாளத்தை தொடாமல் பறக்கும் விரைவு ரயில்!

சீனாவில் புத்தாண்டுடன் அறிமுகம்

பெய்ஜிங்,டிசெ.8

மணிக்கு 400 கிலோமீற்றர் வேகத் தில் செல்லக்கூடிய பறக்கும் ரயிலை ஷங்காய் நகரில் வரைவில் அறிமுகம் செய்யவுள்ளது சீனா.

தண்டவாளத்திலிருந்து சுமார் இரண்டரை சென்ரிமீற்றர் உயரத்தில் மிதந்தபடி இந்த ரயில் செல்லும். புத்தாண்டு தினத்தில் இதன் முதல் பயணம் தொடங்கக்கூடும்.

இத்தகவல் சீனப் பத்திரிகைகளில் வெளிக்கிழமை வெளியாகியுள்ளது.

பறக்கும் ரயிலை உருவாக்கியுள் ளது ஜேர்மனி. சோதனையோட்டத் துக்காக 3 ரயில்களை அங்கிருந்து சீனா தருவித்துள்ளது.

பறக்கும் ரயிலின் சோதனையோட் டம் ஷங்காய் நகரில் சுமார் 30 கி.மீ. ரயில் பாதையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தண்டவாளத்தைத் தொடா மல் சக்திமிக்க காந்தங்கள் உதவி யால் சுமார் இரண்டரை செ.மீ. உயரத் தில் இது செல்லும்.

100 கோடி டொலர் செலவிலான இந்த ரயில் ஷங்காய் நகரின் பியூ டாங் விமானநிலையத்திலிருந்து பிடோங் மாவட்டம் செல்ல வெறும் 7 நிமிடங்களே ஆகும். டாக்சியில் சென்றால் சுமார் 30 நிமிடங்கள் பிடிக் கும்.

தற்போது மிக அதிக வேகத்தில் செல்பவை புல்லட் ரயில்கள். இவை பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பானில் பயன் பாட்டில் உள்ளன. இவற்றின் வேகம் மணிக்கு 257 கி.மி.

(ஐ)

சிங்கப்பூர் கடலில் கப்பல்கள் மோதின

சிங்கப்பூர்,டிசெ.8

சிங்கப்பூர் அருகே சரக்குக் கப்ப லும், எண்ணெய்க் கப்பலும் மோதிக் கொண்டதில் 350தொன் கச்சா எண் ணெய் கடலில் வீணாகியது.

பனாமா நாட்டு சரக்குக் கப்பலும், சிங்கப்பூர் எண்ணெய்க் கப்பலும் சிங் கப்பூருக்கு மேற்கே 40 கிமீ தொலை வில் மோதிக்கொண்டன. இதில் எண்ணெய்க் கப்பலுக்கு சேதமேற்பட்டு கச்சா எண்ணெய் கடலில் கலந்தது. உயிர்ச் சேதம் குறித்து தகவல் இல்லை. (ஐ)

கைத் துப்பாக்கிகளுக்கு ஆஸ்திரேலியாவில் தடை

சிட்னி,டிசெ.8

விளையாட்டுப் போட்டிகளில் பங் கேற்கும் துப்பாக்கி சுடும் வீரர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் கைத்துப் பாக்கி வைத்திருக்கக் கூடாது என்று சட்டம் இயற்ற ஆஸ்திரேலிய அரசு முடிவுசெய்திருக்கிறது.

மெல்போர்ன் பல்கலைக்கழகத் தில் கடந்த மாதம் நடந்த சம்பவத் தில் ஒருவர் 3 பேரைச் சுட்டுக்கொன றார். அமெரிக்காவில் நடப்பதைப்போல் ஆஸ்திரேலியாவிலும் துப்பாக்கி கலாசாரம் பரவிவிடக் கூடாது என்ற அக்கறையில் ஆஸ்திரேலிய அரசும் மாநில அரசுகளும் இந்த முடிவைக் கூட்டாக எடுத்துள்ளன. (ஐ)

துருக்கியில் அமெரிக்கர்களை தாக்க தீவிரவாதிகள் திட்டம்

வாஷிங்ரன்,டிசெ.8

துருக்கிக்குப் பயணஞ்செய்யும் அமெரிக்கர்களைப் பயங்கரவாதிகள் தாக்கக்கூடும். எனவே, எச்சரிக்கை யுடன் இருக்கும்படி அமெரிக்க வெளி யுறவுத் துறை உஷார்படுத்தியுள்ளது.

தென்கிழக்குத் துருக்கிப் பகுதி யில் இந்த தாக்குதலை நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ள தாக தமக்கு தகவல் வந்துள்ளதாக வெளியுறவுத்துறை வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே, பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந் தால் அதை முறியடிக்க துருக்கி அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. (ஐ)

ஈராக் மீது போர் தொடுக்க முயல்வதை எதிர்த்து தென்கொரியாவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. தலைநகர் சியோலில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களுடன் தென்கொரியர்.

டெஸ்ட் போட்டியிலிருந்து அக்ரம் விலகல்

தென்னாபிரிக்க அணியுடனான டெஸ்ட் போட்டிகளிலிருந்து பாகிஸ்தான் வீரர் வஸிம் அக்ரம் விலகியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவில் 2 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. ஒருநாள் போட்டிகள் இன்றும், டெஸ்ட் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன. இருவகைப் போட்டிகளுக்கும் வஸிம் அக்ரம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டிகளிலிருந்து வஸிம் அக்ரம் விலகினார். ஒருநாள் போட்டிகள், உலகக் கிண்ணம் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்போவதாக அவர் அறிவித்திருந்தார். இதுதொடர்பாக பாக். கிரிக்கெட் அணியின் பேச்சாளர் சமினுள் ஹசன் கருத்துத் தெரிவிக்கையில், டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற விருப்பம் தெரிவித்ததன் பின்னரே, வஸிம் அக்ரம் டெஸ்ட குழாமில் சேர்க்கப்பட்டார். தற்போது அவரது மனமாற்றத்திற்குக் காரணம் புரியவில்லை.

டெஸ்ட் போட்டியில் பங்குபற்ற முடியாமை குறித்து கிரிக்கெட் சபைக்கு நேரடியாக அறிவிக்கவில்லை. அணி முகாமையாளரிடமே தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில், ஒருநாள் போட்டிகளின்பின் வஸிம் அக்ரமை திருப்பியழைக்கும் திட்டம் எம்மிடம் இல்லை.- இவ்வாறு சமினல் ஹசன் கூறினார். 2001ஆம் ஆண்டு செப்ரெம்பரிலிருந்து இதுவரை பாகிஸ்தான் அணி 11 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளது. இவற்றில் இரு போட்டிகளில மாத்திரமே வஸிம் அக்ரம் பங்கு பற்றியுள்ளார்.

36 வயதான வஸிம் அக்ரம் டெஸ்ட் போட்டிகளில் 414 விக்கெட்டுகளையும் ஒரு நாள் போட்டிகளில் 486 விக்கைட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

(ஒ-5)

இந்திய கிரிக்கெட் வீரர்களின் ரசிகன் நான் என்கிறார் முஷாரப்

"இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் பலரின் தீவிர ரசிகன் நான்"- இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாக். ஜனாதிபதி முஷாரப் மேலும் கூறியதாவது:-

இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு விஜயம்செய்து இங்குள்ள மக்களுக்கு மகிழ்ச்சியூட்ட வேண்டுமென விரும்புகிறேன்.

அரசியலையும் விளையாட்டையும் வெவ்வேறாகவே நான் வைத்திருக்கிறேன். இந்திய கிரிக்கெட் வீரர்கள் பலரின் தீவிர ரசிகன் நான்.

அதேவேளை, பாகிஸ்தானுக்கு இந்திய அணி விஜயம் செய்யாதவரை இந்தியாவுக்குப் பாகிஸ்தான் விஜயம் செய்யமாட்டாது எனத் தெளிவாகக் கூற விரும்புகின்றேன். என்று தெரிவித்தார். (ஒ)

உதைபந்தாட்ட போட்டியில் யங் ஹென்றீஸ் சம்பியன்

யாழ்ப்பாணம்,டிசெ.8

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவாலி நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய 7 நபர் கொண்ட அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை யங் ஹென்றீஸ் அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

நவாலி அட்டக்கிரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டத்தில் இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக்கழகமும், மானிப்பாய் ரெட் ரேஞ்சர் விளையாட்டுக் கழகமும் மோதின. இவ்வாட்டத்தின் ஆரம்பம் முதல் இரு அணி வீரர்களும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடினர். போட்டி தொடங்கி 15 ஆவது நிமிடத்தில் மானிப்பாய் ரெட் ரேஞ்சர் கழகம் தனக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி தனது முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டது.

அடுத்து இளவாலை யங் ஹென்றீஸ் அணி அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து முன்னணிக்கு வந்தது. இதனால், முதல்பாதி ஆட்டம் 2:1 என்ற கோல் அடிப்படையில் நிறைவுற்றது.

தொடர்ந்து இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமாகி நடைபெற்ற போது மிகவும் விறுவிறுப்பாகவும், வேகமாகவும் இரு அணி வீரர்களும் விளையாடிய போதிலும் எந்த அணியும் கோல பெறவில்லை.

இறுதியில் ஆட்டம் முடிவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் யங் ஹென்றீஸ் அணியினர் மீண்டும் ஒரு கோலை அடித்து தமது கோல்களின் எண்ணிக்கையை 3 ஆக உயர்த்திக கொண்டனர்.

இதனால், யங் ஹென்றீஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் ரெட் ரேஞ்சர் அணியை வென்று சம்பியனாகியது.

(ஒ-5-86)

ஆஸி. அணித் தலைவர் ஸ்ரீவோவின் வீட்டை தீயிலிருந்து காப்பாற்றினார் கிளென் மெக்ராத்!

ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக் கெட் அணித்தலைவர் ஸ்ரீவோவின் வீடு தீப்பற்றுவதை அவ்வணியின் வேகப் பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத் தடுத்துள்ளார். இச்சம்பவம் கடந்த புதனன்று நடைபெற்றது.

சிட்னியிலுள்ள ஸ்ரீவோவின் வீட்டைச் சூழவுள்ள பற்றைகள் தீப்பிடித்துக் கொண்டன. அவ்வேளையில், ஸ்ரீவோ உத்தியோகபூர்வ வைபவம் ஒன்றிற்காக மெல்போர்ன் நகருக்குச் சென்றிருந்தார். வீட்டில் அவரது மனைவி லினேட்டும், மூன்று சிறு வயது பிள்ளைகளும், லினேட்டின் தந்தையுமே இருந்தனர்.

தீ பரபுவதைக் கண்டு திகிலடைந்த லினேட் கிளென் மெக்ராத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கோரினார்.

இதையடுத்து ஸ்ரீவோவின் வீட்டுக்குச் சென்ற மெக்ராத் முகக்கவசம் ஒன்றை அணிந்துகொண்டு தீயைக் கட்டுப்படுத்தினார். மாலை 5 மணியிலிருந்து இரவு 11 மணிவரை தீயுடன் போராடினார் மெக்ராத்.

ஸ்ரீவோ பிந்திய இரவில் மெல்போர்னிலிருந்து விமானமூலம் சிட்னிக குத்திரும்பினார். ஆனால், அவரது வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் வாகன நெரிசலில் சிக்கிக் கொண்டார். அதை அடுத்து தனது 'ஜோக்கிங்' பாதனிகளை அணிந்து கொண்ட அவர் வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினார்.

அவரை வழியில் தியணைப்புப் படை வீரர் இனங்கண்டு அவரை வாகனத்தில் அழைத்துச் சென்றனர். இரவு 11 மணியளவில் வீடு திரும்பிய ஸ்ரீவோ அங்கு மெக்ராத் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டி ருப்பதைக் கண்டார்.

இதுதொடர்பாக மெக்ராத் வியாழனன்று கூறுகையில் "தொலைபேசி அழைப்பை அடுத்து என்னால் முடிந்ததைச் செய்வதற்காக அங்கு விரைந்தேன் வீட்டிலிருந்து 00 - 13 மீற்றர் வரை தீ பரவியது. எனினும், பறந்து வரும் தணல்களால் வீட்டிற்கு ஆபத்து இருந்தது. புகையைத் தடுப்பதற்காக கவசம் அணிந்திருந்தேன். எனினும், சில தடவை புகையைச் சுவாசிக்க நேர்ந்தது." - என்றார். (ஒ)

உலகக் கிண்ணத்தை வென்றால் பாக்.வீரர்களுக்கு பணப்பரிசு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி எதிர்வரும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் சம்பியனாகத் தெரிவானால், அவ்வணியின் வீரர்கள் அனைவருக்கும் தலா 50 லட்சம் பாகிஸ்தான் ரூபா (சுமார் 80 லட்சம் இலங்கை ரூபா) வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்காக மொத்தம் 7.5 கோடி பாக். ரூபாவை பாக். கிரிக்கெட் சபை ஒதுக்கியுள்ளது.

"வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாக். அணி கிண்ணத்தை வென்றால் பாகிஸ்தானின் கிரிக்கெட் பிரியர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவர். எனவே, வீரர்கள் இத்தகைய பணப் பரிசைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என பாக். கிரிக்கெட் சபைத் தலைவர் நம்புகின்றார்."

- இவ்வாறு பாக். கிரிக்கெட் சபையின் பேச்சாளர் ஹரிமுஜல் ஹசன் வியாழனன்று கூறினார்.

பாக். கிரிக்கெட் அணி தற்போது தென்னாபிரிக்காவில் சுற்றலா மேற்கொண்டுள்ளது. இவ்வருடம் அவ்வணி 33 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 22 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது.

(ஒ)

விளையாட்டு

உலக டெனிஸ் சம்பியன்களாக ஹெவிட், செரீனா தெரிவாகினர்

ஆஸ்திரேலிய வீரர் லேய்ட்ன் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் இவ்வருடத்தின் உலக டெனிஸ் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் இவ்வறிவிப்பை வெளியிட்டது.

ஹெவிட், செரீனா இருவரும் முறையே ஆண், பெண் தரவரிசையில் உலகின் முதலிடத்தில் உள்ளனர்.

ஹெவிட் இரண்டாவது தடவையாக உலக சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செரீனா இவ்விருதைப் பெறுகின்றமை இதுவே முதற்றடவை.

21 வயதான லேய்ட்ன் ஹெவிட், இவ்வருடம் விம்பிள்டன் உட்பட 5 போட்டிகளில் சம்பியனானார். வருடத்தின் கடைசிப் போட்டியான 'சங்காய் மாஸ்டர்ஸ் கிண்ணத் தொடரிலும் அவர் வெற்றிபெற்றார்.

21 வயதான அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் இவ்வருடம் 13 சுற்றுப் போட்டிகளில் மாத்திரம் பங்குபற்றி 8 சம்பியன் பட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

விம்பிள்டன், பிரெஞ்சு பகிரங்கத் தொடர், அமெரிக்கப் பகிரங்கத் தொடர் ஆகியவற்றின் இறுதிப்போட்டியில் தனது மூத்த சகோதரியை செரீனா தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய பகிரங்கப் போட்டிகளில் செரீனா சம்பியன் பட்டத்தை வென்றால், ஒரே சமயத்தில் நான்கு கிராண்ட் ஸ்லாம் சம்பியன் பட்டங்களையும் வெற்றிகொண்ட 5ஆவது வீராங்கனை என்னும் பெருமையை அவர் பெறுவார்.

இதேவேளை, இவ்வருடத்தின் ஆண்கள் இரட்டையர் உலக சம்பியன்களாக மார்க் நோவ்ஸ்(பஹாமஸ்) - டேனியல் நேஸ்டர்(கனடா) இருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பெண்கள் இரட்டையர் உலகச் சம்பியன்களாக போலா சுவாரேஸ், வேர்ஜீனியா பஸ்கல் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

(ஒ-5)

பார்வையற்றோர் கிரிக்கெட்: வித்தியாசமான விதிமுறைகள்

பார்வையற்றோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் சென்னையில் நடைபெறுகின் றன. இப்போட்டிகளுக்கு விதிமுறைகளில் வழக்கமான கிரிக்கெட்டில் இருந்து பார்வையற்றவர்களுக்கு ஏற்றாற் போல சில மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இவை பற்றிய சில விவரங்கள் பின்வருமாறு:-

★ வெள்ளை நிறப்பந்துகள் பயன்படுத்தப்படவேண்டும். பந்து வரும் திசையை அறிந்துகொள்வதற்காக பந்தின் உள்ளே ஒலிஎழுப்பும் 'போல் பெயரிங்' பொருத்தப்பட்டுள்ளது. பந்தின் எடை 80 முதல் 90கிராம்வரை.

★ பந்தைக் கீழிருந்துதான் (அன்டர் ஆர்ம்) வீசவேண்டும்.

★ மைதானத்தின் மொத்தச் சுற்றளவு 55 யார்.

★ எட்டம்புகள் அனைத்தும் தனியாக இல்லாமல் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். தடுப்பாட்டமட்டை வழக்கமானதுதான்.

★ முற்றிலும் பார்வையற்றவர் 4 பேர் அணியில் இருக்கவேண்டும்.

★ ஒருவேளை முற்றிலும் பார்வை அற்ற ஒரு வீரரை மாற்றம் செய்ய நேர்ந்தால், அவருக்குப் பதிலாக முற்றிலும் பார்வையற்ற வீரரைத்தான் களமிறக்கவேண்டும். அரைகுறைப் பார்வையற்ற வீரருக்குப் பதிலாக யாரை வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம்.

★ 40 ஓவர்கள் கொண்டது ஆட்டம். முற்றிலும் பார்வையற்றவர் 40 சதவீதம் (16 ஓவர்கள்) வீசவேண்டும். மீதமுள்ள ஓவர்களை மற்ற இருவரும் பகிர்ந்துகொள்ளலாம். ஆனால், ஒவ்வொரு பிரிவினரும் மாறி மாறித்தான் பந்து வீசவேண்டும்.

★ பந்து வீசுவதற்கு முன்பு, துடுப்பாட்ட வீரரை 'றெடி' என பந்து வீசாளர் எச்சரிக்கவேண்டும். துடுப்பாட்ட வீரரின் பதில் கிடைத்தால்தான் பந்தை வீசமுடியும்.

★ முற்றிலும் பார்வையற்ற வீரர் பெறும் ஒவ்வொரு ஓட்டமும் இரு மடங்காகக் கணக்கில் கொள்ளப்படும்.

(ஒ-5)

கரம் சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்றவர் விவரம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

வை.எம்.சி.ஏயினால் நடத்தப்பட்ட 'கரம்' சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுப் போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்றோர் விவரம் வருமாறு:-

★ ஒற்றையர் ஆட்டங்கள்(ஆண்கள்)

ஏ.மாணிக்கராசா, எஸ்.மோகன்.

(பெண்கள்)

ரி.ஆனந்தசாந்தி, எஸ்.மதிவதனா.

★ இரட்டையர் ஆட்டங்கள்(ஆண்கள்)

எஸ்.சற்குணமூர்த்தி, ஏ.மாணிக்கராசா, எம்.குமரேசன், எஸ்.சீறீ ரமணன்

(பெண்கள்) ஜே.பவித்திரா, ரி.ஆனந்தசாந்தி, பி.நீருஜா, எஸ்.மதிவதனா.

★ கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் வெற்றிபெற்றோர்

எஸ்.செந்தூரன், ஆனந்தசாந்தி, ஜே.பவித்திரா, எஸ்.குமரேசன்.

★ 45 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம்:-

என்.ஏ.மாணிக்கராசா, எஸ்.விஜயகுமார். (ஒ-5)

கிளிநொச்சியில் உதைபந்தாட்ட போட்டி

கிளிநொச்சி,டிசெ.8

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் 16-20 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு எதிர்வரும் ஜனவரிமாதம் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் -

இதுவரை தமது லீக்கில் பதிவு செய்து கொள்ளப்படாத கழகங்களும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளலாமென்றும்- கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அறிவித்துள்ளது. (ஒ-5)

நியூஸிலாந்துக்கு எதிராக நஷ்டஈடு கோருகிறது பாக்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியூஸிலாந்துக்கு எதிராக நஷ்டஈடு கோரி ஐ.சி.சியிடம் மனுதாக்கல் செய்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் ஒரு நாள் சுற்றுப்போட்டியில் நியூஸிலாந்து அணி பங்குபற்ற மறுத்தமையே இதற்குக் காரணம்.

பாக். கிரிக்கெட் சபையின் இயக்குநர் சிஸ்தி மஜித், இவ்விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளதாவது.

கடந்த ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெற்ற ஐ.சி.சி நிறைவேற்றுச் சபை மாநாட்டில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அத்துடன் சச்சரவு தீர்க்கும் குழுவுக்கும் இவ்விடயம் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாறு சிஸ்தி மஜித் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்து பெற்ற பொன்விழாவையொட்டி மேற்படி ஒரு நாள் சுற்றுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் ஆகிய அணிகள் இப் போட்டிகளில் பங்குபற் றவிருந்தன. எனினும் நியூஸிலாந்து அணி இப் போட்டிகளிலிருந்து விலகியது.

இப்போட்டிகளில் பங்குபற்றுவது தொடர்பாக தாம் உத்தரவாதம் வழங்க வில்லையென நியூஸிலாந்து கூறியது.

பின்னர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய ஆஸ்திரேலிய அணி தயங்கியமையால் இப்போட்டி கென்யாவுக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த ஏப்ரலில் நியூஸிலாந்தின் பாக். விஜயத்தின்போது வழக்கமான 3 டெஸ்ட் போட்டிகளுக்கு பதிலாக 2 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்ற தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து ஒரு நாள் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு நியூஸிலாந்து சம்மதித்தது. இவ்விடயம் தொடர்பாக ஐ.சி.சியின் பதிலை பாகிஸ்தான் எதிர்பார்த்திருக்கிறது. இவ்வாறு சிஸ்தி மஜித் கூறுகிறார்.

ஆனால், எதிர்பார்க்கப்படும் நஷ்டஈட்டுத்தொகையை அவர் குறிப்பிட விரும்பவில்லை. செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின் பல போட்டிகள் ரத்து செய்யப்பட்டமையால் பல மில்லியன் டொலர் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதென பாக். கிரிக்கெட் சபை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)